www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2008
ரூ. 7.00





சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர்கள் மோதல்:

# ஆதிக்க சாதித் திமிருக்குப் பதிலடி!

படிப்பகம்

www.padippakam.com

# "முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்! மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!!"

## —புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் சூளுரை

**நவம்பர் 7, 2008** — "முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்! மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!!" என அன்று தமிழகமெங்கும் விண்ணதிர முழங்கிச் சென்றது செஞ்சட்டைக் கூட்டம்! முதலாளித்துவத்தின் கடைந்தெடுத்த அயோக்கியத்தனத்தை மீண்டுமொருமுறை உலகறியச் செய்த "அமெரிக்க பொருளாதார" நெருக்கடியைத் தோலுரித்துக் காட்டியும், முதலாளித்துவத்தின் நச்சுச் சுழலிலிருந்து உழைக்கும் மக்களைக் காப்பாற்ற வல்லது சோசலிசப் பொருளாதாரம் மட்டுமே என்பதனை உற்சாகத்தோடு உரக்கக் கூவியும்; கற்பனையின் எல்லையையும் தாண்டிப் பல சாதனைகளைக் கண் முன் நிகழ்த்தி காட்டிய ரஷிய நவம்பர் புரட்சியின் 91-ஆவது ஆண்டு நிறைவு நாளை நெஞ்சிலேந்தியும்;

— ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கும் இந்துமதவெறி பாசிசத்துக்கும் எதிரான விழாவாக, புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்கச் சூளுரைக்கும் விழாவாக, 92-ஆம் ஆண்டு நவம்பர் புரட்சி நாளைத் தமிழகமெங்கும் கொண்டாடின.

**ஓசூரில்** செயல்பட்டுவரும் பு.ஜ.தொ.மு., வி.வி.மு.-வினர் கொத்தண்டபள்ளி கிராமத்தில், டி.வி.எஸ். ஆலைத் தொழிலாளர்கள் நிறைந்திருக்கும் குடியிருப்புகள் வழியாகப் பேரணியாய்ச் சென்று செங்கொடியேற்றினர். சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசளித்தும் விருந்தளித்தும் நவம்பர் புரட்சிநாளைக் கொண்டாடினர்.

ஓசூரை அடுத்துள்ள **பாகலூரிலும், சூளகிரியிலும்** கொடியேற்றித் தெருமுனைக்கூட்டங்கள் நடத்தியும், இனிப்புகள் வழங்கியும் இவ்விழாவை வர்க்க உணர்வூட்டும் திருவிழாவாகக் கொண்டாடினர்.

விழுப்புரம் மாவட்டம் **சங்கராபுரம்** வி.வி.மு. தோழர்கள் சங்கராபுரம் கடைவீதி மும்முனைச் சந்திப்பில் செங்கொடியேற்றி, அங்கிருந்து பட்டாசு வெடித்தும் முழக்கம் எழுப்பியும் ஊர்வலமாக தேவபாண்டலம் மைதானத்தை அடைந்து, அங்கு கருத்தரங்கத்தை நடத்தினர்.



சங்கராபுரத்தில்...

**விருத்தாசலம்** வட்ட வி.வி.மு.வினர் தமது பகுதியில் செஞ்சட்டை அணிவகுப்போடு கொடியேற்றி, அறைக் கூட்டத்தை நடத்தினர். பின்னர், மாலையில் ஆலிச்சிக்குடி, க.இளமங்கலம், சாத்துக்கூடல் ஆகிய அருகாமை கிராமங்களுக்குச் மிதிவண்டியில் ஊர்வலமாகச் சென்றதோடு, வழியெங்கும் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, மக்களிடம் நவம்பர் புரட்சிநாளின் முக்கியத்துவத்தைப் பதிய வைத்தனர்.

**திருவாரூர்** பு.மா.இ.மு.-வின் சார்பில், அம்மையப்பன் கடைவீதியில் தொடங்கிய பேரணி கருப்பூர் தெருவில் நிறைவுற்றது. பின்னர், பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசளித்து, நவம்பர் விழாவை மக்களின் பங்கேற்போடும் பேராதரவோடும் கொண்டாடினர்.

**சீர்காழியில்** நெய்வேலி, கடலூர், காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த வி.வி.மு., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. அமைப்பினர் இணைந்து, விண்ணதிரும் முழக்கத்துடனும், மார்க்சிய-லெனினிய ஆசான்களது படங்களை உயர்த்திப் பிடித்தபடியும் வட்டாட்சியர் அலுவலகம் எதிரிலிருந்து பழைய பேருந்து நிலையம் வரை பேரணியை நடத்தினர். அதனைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

**கண்டமங்கலத்தில்** புதுச்சேரி, விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு.-வினர் இணைந்து, அம்பேத்கர் சிலை அருகில் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தினர். எச்.யு.எல் தொழிலாளர்களும் சுஸ்லான் தொழிலாளர்களும் பெருந்திரளாக கலந்து கொண்ட இப்பொதுக்கூட்டத்தில், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலர் சுப.தங்கராசு உரையாற்றினார். ம.க.இ.க.

**தொடர்ச்சி 35-ஆம் பக்கம்**


ஓசூர்-கொத்தண்டபள்ளியில்...


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 2**

டிசம்பர் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 94446 32561


## மும்பை தாக்குதல்:
# இந்துவெறி-அரசு பயங்கரவாதத்தின் எதிர்வினை!

இந்தியாவின் வர்த்தகத் தலைநகரமான மும்பையில் இதுவரை கண்டிராத மிகக் கொடியதும் மிகப் பெரியதுமான தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதைக் கண்டு நாடே பீதியில் உறைந்து போயுள்ளது. கடந்த நவம்பர் 26-ஆம் தேதியன்று இரவு 9.30 மணியளவில் சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் தொடங்கி, மும்பை நகரின் முக்கிய மையங்கள், விமான நிலையம், ரயில் நிலையங்கள், மருத்துவமனை, ஐந்து நட்சத்திர ஒட்டல்கள் முதலான இடங்களில் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு-குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தியும், தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மும்பை நகரையே தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்தும், தீவிரவாத எதிர்ப்பு அதிரடிப்படையின் தலைவரான ஹேமந்த் கார்க்கரே உள்ளிட்டு 200-க்கும் மேற்பட்டோரைக் கொன்றும் 300-க்கும் மேற்பட்டோரைப் படுகாயப்படுத்தியும் இத்தீவிரவாதிகள் வெறியாட்டம் போட்டனர்.

இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட போதிலும் உலகின் கவனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, நன்கு திட்டமிட்டு, நன்கு பயிற்றுவிக் கப்பட்டு, அதி நவீன ஆயுதங்களுடன் "மரணத்தைக் கடந்தவன்" எனும் பொருள் தரும் "ஃபிடாயீன்" (FIDAYEEN) பாணி தாக்குதல் நடத்துவதை லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-மொகம்மது ஆகிய இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்கள் ஓர் உத்தியாகக் கொண்டுள்ளன. அல்-கொய்தாவினால் பயிற்றுவிக்கப்படும் இத்தீவிரவாதிகள், மும்பைக்குக் கடல் வழியே இரகசியமாக வந்து திட்டமிட்டு திடீர்த் தாக்குதலை நடத்தி யுள்ளனர்.

நியூயார்க், லண்டன், மாட்ரிட், கசபிளாங்கா, பாலி, ரியாத், கெய்ரோ என கோரமான பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பலியான நகரங்களை ஒப்பிடும்போது, மும்பையில் மட்டும் திரும்பத் திரும்ப பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்கின்றன. அது ஏன்?

முதலாவதாக, அயோத்தி-பாபரி மசூதி இடிப்பு, அதைத் தொடர்ந்து மும்பை மற்றும் நாடு முழுவதும் இந்துவெறியர்கள் நடத்திய பயங்கரவாதப் படுகொலைகள், குஜராத் தில் ஏவிவிடப்பட்ட இந்துவெறி பாசிச பயங்கரவாதம், தடா-பொடா கருப்புச் சட்டங்க ளைக் கொண்டு பாய்ந்த அரசு பயங்கரவாதம் ஆகியவற்றால் முஸ்லீம் மக்கள் வதைக் கப்படுவதற்குப் பழிதீர்க்கும் நோக்குடன் இத்தீவிரவாதக் குழுக்கள் இந்தியாவைக் குறி வைத்து "புனிதப் போர்" (ஜிகாத்) தொடுக்கின்றன. இதேபோல் இஸ்ரேலிய ஜியோனி சம், அமெரிக்காவின் கிறித்துவ பயங்கரவாதம் ஆகியன இஸ்லாமிய மக்களை அடக்கி யொடுக்குவதால் அந்நாடுகள் மீதும் "உலகு தழுவிய புனிதப் போர்" என்ற பெயரில் திடீர் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துகின்றன.

இரண்டாவதாக, "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்று பிரகடனம் செய்து ஈராக் மற்றும் ஆப்கான் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து, பாசிச அட்டூழியங்களை நடத்திவரும் அமெரிக்கப் பயங்கரவாதிகளின் விசுவாசக் கூட்டாளியான இந்தியா மீது, அதன் அரசியல்-பொருளாதார-சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் நோக்கில் இத்தீவிர வாதக் குழுக்கள் தாக்குதல் தொடுக்கின்றன. இதேபோல ஆப்கானில் அமெரிக்க ஆக்கி ரமிப்புப் படைகளுக்குச் சேவை செய்யும் பாக். அரசுக்கு எதிராக, கடந்த ஆண்டில் பாக். தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள லால் மசூதியை ஆயுதங்களுடன் ஆக்கிரமித்துக் கொண்டு தாக்குதல் நடத்தி, ஐந்து நாட்களுக்கு அந்நாட்டையே அதிர வைத்தன.

இந்நிலையில், பாகிஸ்தானிலிருந்து ஏவிவிடப்பட்டுள்ள பயங்கரவாதம் என்று பெருங்கூச்சல் போட்டும், மீண்டும் கருப்புச் சட்டங்களைத் திணித்து அரசு பயங்கரவா தத்தைக் கட்டவிழ்த்து விட்டும் இத்தீவிரவாதத்தை முறியடித்து விடலாம் என இந்து வெறியர்கள் முதல் போலி மதச்சார்பின்மை பேசும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஆளும் கூட்டணி கட்சிகள் நம்புகின்றன. ஆனால், எவ்வளவுதான் தீவிரமாக அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையை ஏவினாலும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை இந்திய ஆட்சியாளர்களால் முடிவுக்குக் கொண்டு வர முடியாது. தற்காலிகமாக ஓய்ந்தாலும் மீண்டும் கடல் வழியாக மட்டுமின்றி வான்வழியாகவும் தாக்கக் கூடும் என்ற அச்சம் இந்திய ஆட்சியாளர்களைப் பிடித்தாட்டுகிறது.

இதற்கான காரண கர்த்தாக்களே இந்திய பாசிச ஆட்சியாளர்கள்தான்! இஸ்லாமிய பயங்கரவாதத்துக்குத் தூண்டுகோலாக இருப்பது, இந்திய ஆட்சியாளர்கள் ஏவிவரும் அரசு பயங்கரவாதமும் இந்துவெறி பாசிச பயங்கரவாதமும் தான்! இதனால் ஒருபுறம், இந்துவெறியாட்டம் - அரசு பயங்கரவாதப் படுகொலைகள்; மறுபுறம், இஸ்லாமிய பயங்கரவாத எதிர்த்தாக்குதல்கள் என்ற நச்சு சுழற்சிக்குள் இந்திய நாடும் மக்களும் நிரந் தரமாகச் சிக்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாக். எதிர்ப்பு இந்துத்துவமே இந்திய தேசியம் என்பது தவறு; அதேபோல, அல்லா வின் ஆட்சியை நிறுவும் புனிதப் போர் என்பதும் தவறு. இரண்டுமே மதவெறி பயங்கர வாதத்துக்கு இந்த நாட்டையும் மக்களையும் பலியிடுவதாகும். முன்னதற்குச் சான்று குஜராத்; பின்னதற்குச் சான்று மும்பை. இரத்தத்தை இரத்தத்தால் கழுவ முடியாது என்ப தையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன. ●

படிப்பகம்

www.padippakam.com

# சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மோதல்:

# ஆதிக்கசாதித் திமிருக்கு விழுந்த பதிலடி!

## வன்முறை, மனிதாபிமானம் என்ற போர்வைக்குள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கொடுத்த பதிலடியைக் கண்டிப்பதை அனுமதிக்க முடியாது!

கடந்த நவம்பர் 12-ஆம் தேதியன்று சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர்களிடையே நடந்த மோதல், தமிழகத்தில் புரையோடிப் போயுள்ள சாதி-தீண்டாமையின் கோரத்தை மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. சட்டக் கல்லூரியில் சாதிவெறியர்களின் கொலைவெறித் தாக்குதலுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பதிலடி கொடுத்துள்ளதன் வாயிலாக, இந்த உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

தென்மாவட்டங்களைப் போல வெளிப்படையாக இல்லையென்ற போதிலும், சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் ஆதிக்க சாதித் திமிர் நீறுபூத்த நெருப்பாகவே நீடித்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக ஆதிக்க சாதிவெறி அமைப்புகள் சட்டக் கல்லூரியில் வேர்விடத் தொடங்கின. ''முக்குலத்தோர் மாணவர் பேரவை'' அதில் ஒன்று. தாழ்த்தப்பட்ட மாணவர்களால் தாக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாரதிகண்ணன், அதன் முக்கிய பிரமுகர்.

கடந்த 2007-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களிடம் தகராறு செய்து அடிதடியில் இறங்கியவர்தான் பாரதிகண்ணன். ஆறு மாதங்களுக்கு முன்பு கல்லூரியின் பெயரில் இருக்கும் ''அம்பேத்கர்'' என்ற வார்த்தையை நீக்கச் சொல்லி பாரதிகண்ணன் தலைமையில் ஆதிக்கசாதி மாணவர் கும்பல் தகராறு செய்தது. ''சிங்கங்களே, ஒன்று சேருங்கள்!'' என்று தேவர் சாதி மாணவர்களுக்கு அழைப்பு விடுத்து, கல்லூரி வளாகத்திலேயே இக்கும்பல் சுவரொட்டிகளையும் ஒட்டியது. இதற்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எதிர்ப்பு தெரிவிக்க, தேவர் சாதிவெறி மாணவர் கும்பல் கொடுவாள்களுடன் வந்து மிரட்டியது. இது பற்றி புகார் தெரிவிக்கப்பட்டு, பாரதிகண்ணனிடமிருந்து மூன்று கொடுவாள்களைப் போலீசார் கைப்பற்றினர். இருப்பினும், அவர் மீதோ, ஆதிக்க சாதிவெறி மாணவர்கள் மீதோ வழக்கோ, நடவடிக்கையோ இல்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீது போலீசு வாகனங்கள் மீது கல்லெறிந்தார்கள் எனப் பொய்வழக்கு போடப்பட்டது. சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில், பாரதிகண்ணன் தலைமையிலான ஆதிக்க சாதிவெறி பிடித்த மாணவர்கள் மின்விளக்குகளை அடித்து நொறுக்கியும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கியும் வெறியாட்டம் போட்டனர். இதுபற்றி கல்லூரி முதல்வரிடம் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திருப்பதியிலுள்ள அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் பயின்று வந்தபோதும், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவன் என்ற ஒரே காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ள கோகுல்ராஜ்.



அண்மையில், தேவர்சாதி வெறியர்களின் குலதெய்வமான முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, சுவரொட்டிகளைக் கல்லூரி வளாகத்தில் ஒட்டிய தேவர்சாதி மாணவர்கள், திட்டமிட்டே கல்லூரியின் பெயரில் அம்பேத்கர் பெயரை நீக்கியிருந்தனர். இது பற்றிக் கேட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களை அவமானப்படுத்தி, ஆத்திரமூட்டவும் செய்தனர். நவம்பர் 3-ஆம் தேதியிலிருந்து சட்டக்கல்லூரி தேர்வுகள் தொடங்கிய நிலையில், ''எந்தவொரு கீழ்ச்சாதிப் பயலும் தேர்வு எழுதக் கூடாது; மீறி எவனாவது தேர்வு எழுத வந்தால் வெட்டிச் சாய்ப்போம்'' என்று எச்சரித்து, பாரதிகண்ணன் தலைமையிலான கும்பல் கத்தி, அரிவாள், இரும்புத்தடிகளுடன் கல்லூரி வளாகத்தில் சுற்றி வந்து அச்சுறுத்தியது. இதனால், ''பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதவில்லை'' என்று கல்லூரி நிர்வாகமே அறிவித்தது. ஒரு சில தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தேர்வுகள் எழுதியுள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்த பாரதிகண்ணன், ஆறுமுகம், அய்யாபிள்ளை ஆகியோர் தலைமையிலான கும்பல், நவம்பர் 7-ஆம் தேதியன்று அம்மாணவர்களை பாரிமுனை பேருந்து நிலையம் அருகே சுற்றி வளைத்துத் தாக்கியுள்ளது.

மீண்டும் 12-ஆம் தேதியன்று தேர்வு எழுத வந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்க இச்சாதிவெறிக் கும்பல் திட்டமிட்டுள்ளதை அறிந்து, அவர்கள் கல்லூரி விடுதி மாணவர்களுக்குத் தகவல் தெரிவித்தனர். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கிரிக்கெட் மட்டை - கொம்புகளுடன் அணிதிரள்வதைக் கண்ட பாரதிகண்ணன், ஆறுமுகம் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வந்திறங்கி, சுவரேறிக் குதித்தனர். பாரதிகண்ணன் மதில் சுவரில் தனது கத்தியைக் கூர்தீட்டிக் கொண்டு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீது வெறியோடு பாய, அதில் சித்திரைச் செல்வன் என்ற மாணவரது காது துண்டானது. பலர் படுகாயமடைந்தனர். அதன்பிறகு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாரதிகண்ணனைச் சுற்றி வளைத்துத் தாக்கியதை ஊடகங்கள் வாயிலாக உலகமே பார்த்தது.

இந்த உண்மைகளை, மாணவர்கள் மோதலின் நேரடி சாட்சியங்களான வழக்குரைஞர் ரஜினிகாந்த் மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புக் குழுவில் செயல்படும் கல்பாக்கம் அணுமின் நிலைய ஓய்வு பெற்ற விஞ்ஞானி கோபால் ஆகியோர்


படிப்பகம்

www.padippakam.com



சட்டக் கல்லூரி வன்முறையைக் கண்டிப்பது என்ற பெயரில், சாதிமோதலை நடத்தும் நோக்கத்தோடு, மறியல் செய்யத் தூண்டி விடப்பட்ட உசிலம்பட்டி அரசுப் பள்ளியைச் சேர்ந்த ஆதிக்க சாதி மாணவர்கள் மீது தடியடி நடத்திக் கலைக்கும் போலீசு.

அளித்துள்ள வாக்குமூலங்களும், பேராசிரியர் அ.மார்க்ஸ் தலைமையிலான உண்மை கண்டறியும் குழுவினர் அளித்துள்ள அறிக்கையும் உறுதிப்படுத்துகின்றன.

சட்டக் கல்லூரி மாணவர் மோதலுக்கு நேரடி சாட்சியமான வழக்குரைஞர் ரஜினிகாந்த் அளித்த வாக்குமூலத்தில், ''அ.தி.மு.க. தலைவர்களின் ஆதரவு பாரதிகண்ணன் குழுவினருக்கு இருப்பதை உணர முடிந்தது'' என்று கூறியிருப்பதும், அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அறையில் இக்குழுவினர் தாக்குதலுக்கு முன் சதித்திட்டம் தீட்டியதாகச் செய்திகள் கசிந்திருப்பதும், சன் டி.வி.-ஜெயா டி.வி. களின் ஒளிபரப்புகளும் மிகப் பெரிய சாதிக் கலவரத்துக்கு இக்கட்சிகள் திட்டமிட்டுள்ளதை நிரூபிக்கின்றன. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கிடையே மோதல் நடப்பதற்கு முதல் நாளன்று, புழலில் உள்ள அம்பேத்கர் சிலை அசிங்கப்படுத்தப்பட்டு, சிலையின் நெற்றியில் நாமம் போட்டு, ''ஹே ராம்'' என்று எழுதி விட்டுப் போயுள்ளதும் இதை மெய்ப்பிக்கிறது.

•••

''என்னதான் இருந்தாலும் ஒரு மாணவனைப் பத்து பேர் சேர்ந்து கொண்டு நாயை அடிப்பது போல அடிக்கிறார்களே, இது என்ன நியாயம்?'' என்ற உருக்கமான 'நடுநிலை' முறையீடும், திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்ட அந்தக் காட்சிகளும், கடையக் கடையத் திரண்டு வரும் நஞ்சைப் போல, தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான மிகப் பெரிய வன்முறையாகத் திரண்டு எழுந்து வருகின்றன. ''தாழ்த்தப்பட்டவர்கள் தாக்குகிறார்கள்; நம்மாளு அடிபடுகிறான்; போலீசு வேடிக்கைப் பார்க்கிறது'' என்கிற 'பொதுக் கருத்து' கடைசித் 'தமிழனின்' மண்டை வரை இறக்கப்பட்டது. திட்டமிட்டபடி, தென் மாவட்டங்களில் மாணவர்களைத் தூண்டி சாதிக் கலவரத்தைப் பற்ற வைக்க ஆதிக்க சாதிவெறியர்கள் முயற்சித்தனர்.

ஈராயிரம் ஆண்டுகளாக பார்ப்பன - வருணாசிரம வழியில் அடிமைப்படுத்தி தாழ்த்தப்பட்டோர் மீது வன்முறையை ஏவியவர்கள், இன்று அரிதினும் அரிதாக தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஆதிக்க சாதிவெறியர்களுக்குப் பதிலடி கொடுத்ததைக் கண்டு, ''ஐயோ! வன்முறை!'' எனறு பெருங்கூச்சல் போடுகிறார்கள். பாப்பாபட்டி - கீரிப்பட்டி, மேலவளவு, திண்ணியம், கயர்லாஞ்சி... என இச்சாதிவெறியர்கள் நடத்தியவையெல்லாம் வன்முறையில்லை என்றால், இதுவும் வன்முறை இல்லைதான்!

மேலவளவில் தாழ்த்தப்பட்ட ஊராட்சித் தலைவரை வெட்டி எறிந்ததைப் போல, தேவர் ஜெயந்தி சுவரொட்டியில், சட்டக் கல்லூரியின் முன்னால் உள்ள அம்பேத்கர் பெயரையும் வெட்டுவோம் என்று கொக்கரிக்கிறார்கள் ஆதிக்க சாதி வெறியர்கள். ஏற்கெனவே மகாராஷ்டிராவில், மரத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்டபோது, அதை நீக்கச் சொல்லி மராத்தா ஆதிக்க சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோரைப் படுகொலை செய்து வெறியாட்டம் போட்டதற்கும், தற்போது இவர்கள் சென்னை சட்டக் கல்லூரியிலிருந்து அம்பேத்கர் பெயரை நீக்கி சுவரொட்டி வெளியிட்டதற்கும் தொடர்பேதும் இல்லை என்று கருத முடியுமா?

இவ்வளவுக்குப் பின்னரும், ஆதிக்க சாதிவெறியர்களுக்கு எதிராக எந்தவொரு தாழ்த்தப்பட்ட தலைவரும் வாய் திறக்கவில்லை. ஈழத் தமிழர் படுகொலைக்கெதிராக வீரவசனம் பேசும் எந்தவொரு 'தமிழினத் தளபதி'யும், இங்கே ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டவருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவுமில்லை.

'சூத்திர' கருணாநிதி அரசோ, கல்லூரி முதல்வரையும் போலீசு அதிகாரிகளையும் தற்காலிகப் பணிநீக்கம் செய்து, விசாரணைக் கமிஷன் நாடகமாடிக் கொண்டே, சட்டக்கல்லூரி மோதலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் அவர்களது பெற்றோர் உறவினர்களையும் குறிவைத்து கைது செய்து வதைக்கிறது. சாதிவெறி பிடித்து கொலைவெறித் தாக்குதலில் இறங்கிய பாரதிகண்ணன் மீது சாதாரண பிரிவுகளின் கீழ் வழக்கு போட்டுள்ள மு.க. அரசின் போலீசு, தாக்குதலுக்கு ஆளான சித்திரைச் செல்வன் மீது கொலை முயற்சி வழக்கு போட்டு, ஆதிக்க சாதிவெறியர்களுக்குத் தனது விசுவாசத்தைக் காட்டியுள்ளது. மறுபுறம், சட்டக் கல்லூரி மாணவர் மோதலைச் சாக்காக வைத்து, மாணவர்கள் அரசியல் - சமூக - பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பெயரளவிலான ஜனநாயக உரிமையையும் பறித்து, சுயநிதிக் கல்லூரிகளைப் போல கொத்தடிமைக் கூடாரங்களாக மாற்றி விடவும், சட்டக் கல்லூரியை ஆளரவமற்ற இடத்திற்கு மாற்றி விடவும் ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இந்நிலையில், சாதி-மதவெறி அமைப்புகளைத் தடை செய்து, கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்ட ஆதிக்க சாதி வெறியர்களையும், அவர்களின் புரவலர்களான சாதிவெறித் தலைவர்களையும் கைது செய்து, அவர்களின் வாக்குரிமை, இட ஒதுக்கீடு உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் ரத்து செய்யக் கோரி அனைத்து மாணவர்களும் உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து போராட்டத்தைத் தொடர வேண்டும். இத்தகைய போராட்டங்களைக் கட்டியமைக்காமல், ஆதிக்க சாதிவெறியர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள அரசையும் ஓட்டுக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி வீழ்த்தாமல், சாதி-தீண்டாமையை ஒழிக்க முடியாது. தமிழகம் சாதிவெறியர்களின் சொர்க்க பூமியாக மாறுவதையும் தடுக்க முடியாது.

• குமார்

www.padippakam.com

# கருப்பு ஒபாமாவை வெள்ளை மாளிகை தேர்வு செய்தது ஏன்?

**ஆர்.எஸ்.எஸ்.க்கு வாஜ்பாயி என்ற மிதவாத முகமூடி பயன்பட்டதைப் போல, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஒபாமா என்ற முற்போக்கு முகமூடி தேவைப்படுகிறது.**

அமெரிக்காவின் 44-ஆவது அதிபராக பாரக் ஒபாமா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். வெற்றி பெற்றதும் சிகாகோவில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் முன் ஒபாமா உரையாற்றியபோது, அங்கே எல்லா இன மக்களும் திரண்டிருந்தாலும், குறிப்பாக கருப்பின மக்களின் முகத்தில் இதுவரை இல்லாத ஒரு மகிழ்ச்சியும், ஆனந்தக் கண்ணீரும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இனவேறுபாடு, வயது வேறுபாடு இல்லாமல், அமெரிக்காவின் கனவை, அதன் முன்னோர்களின் இலட்சியத்தை அந்த இரவின் வெற்றிச் செய்தி உறுதி செய்திருப்பதாக ஒபாமா அந்த மக்களிடத்தில் உரையாற்றினார்.

2004-க்கு முன்னர் ஒபாமா என்றால் யாரென்றே பெரும்பாலான அமெரிக்க மக்களுக்குத் தெரியாது. 2007-இல் அவர் அதிபர் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்ததும் பலரும் வியப்புடன் பார்த்தனர். கென்யாவைச் சேர்ந்த ஆப்பிரிக்கருக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த வெள்ளையினப் பெண்மணிக்கும் பிறந்த ஒபாமா, தனது தாய்வழிப் பாட்டியிடம்தான் வளர்ந்தார். அவ்வகையில் அவர் கருப்பின மக்களின் போராட்டம் நிறைந்த அவல வாழ்க்கையை பெரிய அளவுக்கு உணர்ந்தவர் அல்ல. நல்ல கல்விப் புலமும், பேச்சுத் திறனும் கொண்ட ஒபாமாவுக்கு 90 சதவீதக் கருப்பின மக்களும், வெள்ளையர்களில் ஏறக்குறைய பாதிப்பேரும் வாக்களித்துள்ளனர்.

மொத்த வாக்குகளில் எழுபது சதவீதம் வெள்ளையர்களுக்குரியது என்றால், அவர்களில் கணிசமானோர் ஒபாமாவுக்கு வாக்களித்தது ஏன் என்ற கேள்வி முக்கியமானது. இன்னமும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கோலோச்சிவரும் வெள்ளை நிறவெறிக்கு பழக்கப்பட்ட மக்கள் ஒபாமாவை ஏற்பதற்கு எப்படி தயார் செய்யப்பட்டனர் என்பதே பரிசீலனைக்குரியது. கருப்பின மக்களின் வாக்குகளை மட்டும் வைத்து ஒபாமா இந்த வெற்றியை ஈட்டியிருக்க முடியாது.

இதையெல்லாம் விட, அமெரிக்காவின் முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள், ஊடக முதலாளிகள் இவர்கள்தான் அமெரிக்க அதிபரை தேர்வு செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். இவை எவற்றிலும் கருப்பினத்தவர் தீர்மானிக்கும் நிலையில் இல்லை என்றால், ஒபாமா அமெரிக்க முதலாளிகளின் செல்லப்பிள்ளையாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதுதான் விசயம். முதலில் ஜனநாயகக் கட்சியின் முடிவுகளை எடுக்கும் மேல்மட்டத்தில் கருப்பினத்தவர்கள் எவரும் தீர்மானகரமாக இல்லை. குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி இரண்டுமே வெள்ளையர்களின் கைகளில்தான் உள்ளது. இதில் குடியரசுக் கட்சி வெளிப்படையாக வெள்ளை நிறவெறியர்களை ஆதரித்தும், முதலாளிகள், உயர் வகுப்பினரை ஆதரிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை அமல்படுத்தியும் வரும் கட்சியாகும். ஜனநாயகக் கட்சியோ இவற்றை மறைமுகமாக ஆதரிக்கும் கட்சியாகும். நேரத்துக்கேற்றபடி அமெரிக்க முதலாளிகள் இந்தக் கட்சிகளை மாறி மாறிப் பயன்படுத்திக் கொள்வர்.

அடுத்து இரண்டு கட்சிகளால் அதிபர் பதவிக்கு தெரிந்தெடுக்கப்படும் நபர்களை ஊடக முதலாளிகள் முன்னிறுத்துவார்கள். இவர்களைப் பிரபலங்களாக மாற்றும் வகையில் பல செய்திகள், கருத்துக் கணிப்புகள், நவீன தொழில் நுட்ப விளம்பரங்கள் முதலியவற்றைச் செய்வார்கள். இந்தச் செலவுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இரண்டு கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களும் முதலாளிகள் மற்றும் நிறுவனங்களிடம் வசூல் செய்வார்கள். முதலாளிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து பல மில்லியன் டாலரை நன்கொடையாகக் கொடுப்பார்கள்.

ஜனநாயக நாடு என்று பீற்றப்படும் அமெரிக்காவின் அதிபர் தெரிவு இப்படித்தான் முதலாளிகளின் தயவால்

**அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாரக் ஒபாமா (ஒலிவாங்கி முன் நிற்பவர்), துணை அதிபராகவுள்ள ஜோ பிடேன் (இடதுபுறம்) மற்றும் ஒபாமா அமைக்கவுள்ள அமைச்சரவையில் இடம் பெறப் போகும் ரஹ்ம் இமானுவெல் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com


பாரக் ஒபாமா அதிபர் தேர்தலில் வென்றதைக் கேள்விப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் சிகாகோவைச் சேர்ந்த கருப்பினப் பெண் அன்டோனெட்டி ஹார்க்ரோ.

செய்யப்படுகிறது. ஆக, ஒபாமாவைத் தேர்வு செய்த ஜன நாயகக் கட்சி, அவருக்கு ஆதரவளித்த ஊடக முதலாளிகள், நன்கொடையை அள்ளிக் கொடுத்த நிறுவனங்கள் இவை எவற்றிலும் கருப்பினத்தவர் இல்லை என்பதிலிருந்து, ஒபாமாவை வெள்ளையர்கள் நிரம்பி வழியும் நிறுவனங் கள்தான் தேர்வு செய்து வெற்றி பெற வைத்தன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதுவரை இல்லாத அளவுக்கு ஒபாமா தனது தேர்தல் செலவுகளுக்காக அறுநூறு மில்லியன் டாலருக்கு மேல் வசூல் செய்திருக்கிறார். அமெரிக்க அதிபர் தேர்தலில் இது ஒரு சாதனையாம். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜான் மெக்கைன் கூட இதில் பாதியளவுதான் வசூல் செய்திருக் கிறார் என்றால், இந்தத் தேர்தலில் முதலாளிகள் ஒரு மனதாக ஒபாமாவைத் தேர்வு செய்துள்ளனர் என்று அறியலாம். ஆறா யிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமை நிர்வா கிகள், பிரபலமான வழக்கறிஞர்கள், சட்ட நிறுவனங்கள், வால் ஸ்ட்ரீட்டின் பங்குச் சந்தை மற்றும் முதலீட்டு நிறுவ னங்கள் ஆகியோர்தான் ஒபாமாவின் புரவலர்கள்.

ஆக, ஒபாமாவை கட்சிக்குள் தேர்வு செய்து, காசும் கொடுத்து, பிரபலப்படுத்திய பின்னர் வெல்ல வைத்தது அத்த னையிலும் முதலாளிகள்தான் முடிவெடுத்துள்ளனர் என்றால், இந்த நாடகத்தின் சென்டிமெண்ட் உணர்ச்சி மட்டும் கருப்பின மக்களுக்குச் சொந்தமானது என்று சொல்லலாம். ஆனாலும், 228 ஆண்டுகளாகியிருக்கும் அமெரிக்க அதிபர் வரலாற்றில் முதன் முறையாக ஒரு கருப்பினத்தவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது, இன்னமும் இனவெறியின் கொடு மைகளை அனுபவித்து வரும் மக்களை மகிழ்ச்சியில் திக்கு முக்காட வைத்திருப்பதையும் நாம் அங்கீகரிக்கவேண்டும்.

ஆனால், இந்த மகிழ்ச்சி அலைவரிசையில் கருப்பினத் தவர் மட்டுமல்ல, உலக மக்களும் என்ன பெறப் போகி றார்கள் என்பது எல்லாவற்றையும் விட முக்கியமானது. எந்த நெருக்கடியான காலத்தையும் சந்திப்பதற்கு முதலாளித்துவம் தனது முகமூடிகளை தேவைக்கேற்றபடி மாற்றி கொள்ளும் என்ற தந்திரம்தான் இந்த மகிழ்ச்சியில் மறைபடும் செய்தி. இதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு தென்னாப்பிரிக் காவின் வரலாறு மிகவும் எடுப்பானது ஆகும்.

•••

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையினச் சிறுபான்மை யினர் கருப்பின பெரும்பான்மையினரை அடக்கி ஆண்டு வந்த போது பெயரளவுச் சலுகைகள் கூட அவர்களுக்கு வழங் கப்படவில்லை. இதை எதிர்த்து உலக அளவில் பொதுக்க ருத்து உருவானதும், வெள்ளையர்களின் மாமன் மச்சான் உறவு முறை நாடுகளான மேற்கத்திய நாடுகள்கூடத் தென்னாப்பிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதித்தன. இதில் யாருக்கு பாதிப்பு இருந்ததோ இல்லையோ, தென்னாப்பிரிக்காவின் வளர்ந்து வந்த முதலாளிகளுக்கு பிரச்சினை வந்தது, 80-களின் இறுதியில் நன்கு வளர்ந்து விட்ட அந்த முதலாளிகள், தமது வர்த்தகத்தை உலக அளவிலும், ஏன் ஆப்பிரிக்கக் கண்டத்தில்கூடச் செய்யமுடி யாமல் சிரமப்பட்டனர்.

அப்போதுதான் அவர்கள் கருப்பினத்தவருக்கு வாக்க ளிக்கும் உரிமையை மட்டும் வழங்கினால், தமது பிரச்சி னைகள் தீர்ந்து விடுமென்று உணர்ந்து கொண்டார்கள். அதன்பின் 90-களில் நெல்சன் மண்டேலா விடுதலை செய் யப்பட்டார். உடனே அவரது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசும் ஆட்சிக்கு வந்தது, உலக நாடுகளும் தமது தடைகளை நீக்கி விட்டன. இப்போது இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்து பதினான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த ஆட்சி மாற்றத்தால் வெள்ளையர்கள் எதையும் இழக்கவில்லை, கருப்பர்களும் எதையும் பெறவில்லை.

நாட்டின் சொத்துக்களில் 96 சதவீதம் சிறுபான்மை வெள்ளையர்களிடமே இன்றும் இருக்கிறது. வெள்ளையர் களின் தனிநபர் வருமானத்தில் பத்தில் ஒரு பங்குதான் கருப் பர்கள் பெறுகின்றனர். சந்தை மூலதனத்தில் 1.2 சதவீதம்தான் கருப்பர்களுடையது. கருப்பின மக்களில் 48 சதவீதம்பேர் வேலையற்றவர்களாக இருப்பதால், வன்முறை ஆண்டு தோறும் பெருகிவருகிறது. நாளொன்றுக்கு ஒரு டாலருக்கும் குறைவாக சம்பாதிப்போர் இந்த பதினான்கு ஆண்டுகளில் இருமடங்காகி விட்டனர்.

மற்றொருபுறம் வெள்ளை முதலாளிகள் ஆப்பிரிக்கா வோடும், உலக நாடுகளோடும் தமது வர்த்தகத்தைப் பல மடங்காக்கி சொத்துக்களைப் பெருக்கியிருக்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஒழிந்த கதையின் வர்த்தக ஆதாயம் இப்படித்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது. இதுதான் ஒபாமாவின் வெற்றிக்குப் பின்னாலும் மறைந்திருக்கிறது.

•••

கோமாளி அதிபர் புஷ்ஷின் இரண்டு ஆட்சிக் காலத் திலும் அமெரிக்கா பல நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறது. ஈராக்கிலும், ஆப்கானிலும் நடைபெற்று வரும் போர் நோக்க மற்று பெரும் பணத்தை விழுங்கும் சுமையாக மாறிவிட்டது. இந்த ஆக்கிரமிப்பு போர்களினால் உலக மக்களிடமிருந்து அமெரிக்கா தனிமைப்பட்டிருக்கிறது எனலாம். அமெரிக்கா விலும் போரை எதிர்த்து ஒரு மக்கள் கருத்து உருவாகியிருக் கிறது. இந்த எட்டாண்டுகளிலும் புஷ் எந்த நாட்டுக்குச் சென் றாலும் பெருந்திரளான மக்கள் அவரை எதிர்த்து ஆர்ப் பாட்டம் செய்திருக்கின்றனர். குறிப்பாக, இசுலாமிய மக்கள் அமெரிக்காவைக் கட்டோடு வெறுக்க ஆரம்பித்திருக்கின் றனர்.

எண்ணெய் விலை ஏற்றம், ரியல் எஸ்டேட் விலைச்சரிவு, நிறுவனங்களில் ஆட்குறைப்பு, அதிகரித்துவரும் வேலை யின்மை — இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சமீப மாதங் களில் பெரும் அமெரிக்க வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள்,

www.padippakam.com

நிதி நிறுவனங்கள் திவாலானது அமெரிக்க மக்களிடம் பெரும் சினத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இதுவரை அமெரிக்கா கண்ட மோசமான அதிபர்களில் புஷ்ஷுக்குத்தான் முதலிடம் என்பதைப் பல்வேறு கருத்துக் கணிப்புக்கள் நிரூபித்திருக்கின்றன. இதனால்தான் மெக்கைன் தனது அதிபர் தேர்தல் பிரச்சாரத்திற்காக புஷ்ஷைக் கூப்பிடவில்லை.

இப்படி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெயர் கெட்டிருக்கும் சூழ்நிலையில், அதைத் தூக்கி நிறுத்துவதற்காக அமெரிக்க முதலாளிகளுக்கு ஒரு ஒபாமா தேவைப்பட்டிருக்கிறார். புஷ்ஷை வெறுத்த அளவுக்கு ஒபாமாவை உலக மக்கள் வெறுக்க முடியாது. ஏனெனில் அவர் ஒரு கருப்பர். பெயரிலும் ஹுசைன் என்ற வார்த்தை முசுலீம்களை நினைவுபடுத்தும் வகையில் இருக்கிறது. அமெரிக்கா திவாலில் வாழ்க்கையை இழந்து நிற்கும் கருப்பினத்தவருக்கும், நடுத்தர வர்க்க வெள்ளையினத்தவருக்கும் புஷ்ஷுக்கு மாற்றாக, அவர்கள் அண்டை வீட்டுக்காரரை நினைவுபடுத்தும் ஒரு சாதரண எளிய நபராக ஒபாமா தென்படுகிறார்.

இப்படி ஒரு சூழ்நிலையில்தான் ஒபாமாவுக்கு அதிபர் பதவி என்ற ஜாக்பாட் அளிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க முதலாளிகள் தனக்கு வழங்கியிருக்கும் இந்த அரிய கவுரவத்தை ஒபாமாவும் நன்றியுடன் விசுவாசத்துடன் தமது பேச்சிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுத்துகிறார். ஈராக்கிலிருந்து படைகள் திரும்பப் பெறப்படும் என்று சவடால் விட்டவர், இப்போது தந்திரமாக ஈராக்கில் பயங்கரவாதத்திற்கெதிராக படை முகாம்கள் நிறுத்தி வைக்கப்படும் என்கிறார். ஆப்கானில் முன்பை விட கடுமையாக பின்லேடனுக்கு எதிரான போர் நடைபெறுவதற்காகக் கூடுதல் துருப்புக்கள் அனுப்பிவைக்கப்படும், தேவைப்பட்டால் பாக்.கிற்குள் இருக்கும் அல்-காய்தாவினருக்கு எதிரான படையெடுப்புகூட நடக்கும் என்கிறார். ஈரான் அணுஆயுதத்தைத் துறக்கவில்லையென்றால் கடும் நடவடிக்கை நிச்சயம் உண்டு என மிரட்டுகிறார்.



இவையெதுவும் அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கான வெளியுறவுக் கொள்கையைக் கடுகளவு கூட மாற்றவில்லை என்பதோடு, முன்பை விடத் தீவிரமாக நடைபெறப்போகிறது என்ற அபாயத்தையும் சுட்டிக் காட்டுகிறது. உள்நாட்டிலும் கடந்த ஆண்டுகளில் புஷ் எடுத்த எல்லா பொருளாதார நடவடிக்கைகளையும் இலியானாஸ் செனட்டராக இருந்த ஒபாமா ஆதரித்திருக்கிறார். சமீபத்திய பொருளாதார மீட்பு நடவடிக்கைகளால் திவாலான அமெரிக்க நிறுவனங்களைக் காப்பாற்றும் அரசின் முயற்சிக்கும் அவர் ஆதரவு கொடுத்திருக்கிறார்.

தனது தேர்தல் பிரச்சாரத்தில் அவர் வெள்ளை நிற வெறிக்கு எதிராக ஒரு சொல்கூடப் பயன்படுத்தியதில்லை. தன்னை ஒரு கருப்பராகவும் முன்னிலைப்படுத்தவில்லை. வெற்றி பெற்றதும் நடந்த கூட்டத்தில் பேசியபோதும்கூட, அமெரிக்காவின் நெருக்கடிகளை ஒரு சில நாட்களில் தீர்க்க முடியாது என்றதோடு, அமெரிக்க மக்கள் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கவேண்டும் என்று ஒபாமா வலியுறுத்தினார். அவரது கிச்சென் கேபினெட்டில் முதலாளித்துவ அடியாட்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். வெள்ளை மாளிகையின் தலைமை அதிகாரியாக ஒபாமா தேர்வு செய்திருக்கும் ரஹ்ம் இமானுவெல் இசுரேலின் தீவிர ஆதரவாளராக இருப்பதோடு, அதன் உளவுத் துறையான மொசாத்தோடு தொடர்புள்ளவர். அமெரிக்காவில் யூத லாபி என்றழைக்கப்படும் யூத மத செல்வாக்குக் குழு, வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தக் குழுவைச் சேர்ந்தவரை முன்னிலைப்படுத்துவதிலிருந்து இனிவரும் நாட்களில் பாலஸ்தீன மக்கள் படும் துன்பங்கள் பெருமளவு அதிகரிக்கப் போவதைப் பார்க்கலாம்.

அதேபோல துணை அதிபர் பதவிக்காக ஒபாமா தேர்வு செய்திருக்கும் நபரான ஜோ பிடேனும் யூத லாபியைச் சேர்ந்தவர் என்பதோடு, ஆயுத முதலாளிகளுக்கும், வால் ஸ்ட்ரீட் நிறுவனங்களுக்கும் நெருக்கமான நபருமாவார். இவையெல்லாம் அமெரிக்கா எனும் ஏகாதிபத்தியக் கட்டமைப்பின் விதிகளுக்குட்பட்டுத்தான் ஒபாமா போன்ற முகமூடிகள் உருவாக்கப்படுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**1960-களில் மார்ட்டின் லூதர் கிங்கும், மால்கமும், கருஞ்சிறுத்தைகளும் போராடிப் பெற்ற சம உரிமைகளின் ஆதாயத்தை, எந்தவிதப் போராட்டமுமின்றி, முதலாளிகளின் ஆதரவுடன் கைப்பற்றியதும்தான் ஒபாமாவின் சாமர்த்தியம்.**

ஆக, உலக அரங்கில் அமெரிக்கா தனிமைப்பட்ட நேரத்தில், உள்நாட்டில் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் வெறுப்புற்ற நேரத்தில் அதைத் தணிக்கும் வண்ணம் ஒரு நபர் முதலாளிகளுக்குத் தேவைப்பட்டார். அப்படி முதலாளிகள் தேடிக்கொண்டிருக்கும் போது, ஒபாமா தான் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார். இரண்டு தேவைகளும் ஒன்றையொன்று பதிலீடு செய்து கொண்டன. 1960-களில் மார்ட்டின் லூதர் கிங்கும், மால்கமும், கருஞ்சிறுத்தைகளும் போராடிப் பெற்ற சம உரிமைகளின் ஆதாயத்தை, எந்த விதப் போராட்டமுமின்றி, முதலாளிகளின் ஆதரவுடன் கைப்பற்றியதும்தான் ஒபாமாவின் சாமர்த்தியம்.

கருப்பர் அதிபரான வரலாற்று சிறப்புமிக்க சம்பவம் என்று ஊடகங்கள் போற்றும் இந்தக் காட்சி விரைவிலேயே மாறும். அப்போது கோமாளி புஷ்ஷுக்கும் திறமைசாலி ஒபாமாவுக்கும் வேறுபாடில்லை என்பதை உலக மக்கள் மட்டுமல்ல, அமெரிக்க மக்களே, அதிலும் குறிப்பாக ஏழைகளாக இருக்கும் கருப்பின மக்கள் புரிந்து கொள்வர்.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்! இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்!

## –புரட்சிகர இயக்கங்களின் பிரச்சார இயக்கம்

ஈழப்போர் தீவிரமடைந்து வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில், ஒட்டு மொத்த ஈழத் தமிழினத்தையும் அழித்தொழிக்கும் பயங்கரவாதப் போரை நடத்தி வருகிறது, சிங்கள பாசிச அரசு. சிங்கள அரசின் பாசிச இனவெறிக்கும், அந்த அரசு பயங்கரவாதப் போரைத் தீவிரப் படுத்தி வருவதற்கும் முக்கிய காரணம், இந்திய அரசு அதற்கு உறுதுணையாக நிற்கிறது என்பதுதான். இருப்பினும், தெற்காசியப் பிராந்திய வல்லரசான இந்தியாவின் மேலாதிக்கத்தையும் சிங்கள இனவெறி அரசோடு கூட்டுச் சேர்ந்து ஈழத் தமிழர்களை ஒடுக்கும் இந்தியாவின் சதிச் செயலையும் எதிர்க்காமல், ஈழப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமே கெஞ்சி கேட்கும் அடையாளப் போராட்டங்களை நடத்துகின்றன, தமிழக ஓட்டுக்கட்சிகள். இவற்றின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தியும் ஈழத்தமிழருக்கு சிங்கள அரசு மட்டுமின்றி, இந்திய அரசும் தான் எதிரி என்பதை விளக்கியும், ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தொடர்பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.




கோத்தகிரியில்...




கோட்டக்குப்பத்தில்...



கிருஷ்ணகிரியில்...

அண்மையில், மலேகானில் நடந்த குண்டு வெடிப்புக்கு ஆர்.எஸ்.எஸ். கும்பலே காரணம் என்று நிரூபணமாகி, காவியுடை தரித்த இந்துவெறி பெண் சன்னியாசி விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகள், சதிகள்,பயங்கரவாதப் படுகொலைகளை அம்பலப்படுத்தியும், இப்பார்ப்பன பயங்கரவாத கும்பலை வீழ்த்த அணிதிரளுமாறு உழைக்கும் மக்களை அறைகூவியும் இப்புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

19.10.08 அன்று **கோத்தகிரியில்**, நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தினர், "ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணைநிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்! ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைப்போரை ஆதரிப்போம்!" எனும் முழக்கத்துடன் செங்கொடி ஏந்தி, ஜீப் நிலையம் அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இப்பகுதியில், ஈழத்தமிழர் படுகொலைக்கு எதிராக எந்த ஓட்டுக்கட்சியும் குரலெழுப்பாத நிலையில், உணர்ச்சி மேலிட நடந்த இந்த ஆர்ப்பாட்டம் பகுதிவாழ் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது. 13.11.08 அன்று **அதிராம்பட்டினத்தில்**, ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசுக்கெதிராக வி.வி.மு; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

19.11.08 அன்று **கிருஷ்ணகிரியில்** பு.ஜ.தொ.மு; வி.வி.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில், சிங்கள இனவெறி அரசோடு கள்ளக்கூட்டுச் சேர்ந்து ஈழத்தமிழரை அழித்தொழிக்கும் இந்திய அரசையும், அதன் தெற்காசிய மேலாதிக்கத்தையும் சாடி, பகுதிவாழ் மக்களின் ஊக்கமான பங்கேற்போடு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டம்-**நெல்லிக்குப்பத்தில்**, வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்து ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணைபோகும் இந்திய அரசைச் சாடியும், இந்துவெறி பாசிச பயங்கரவாதத்தை வீழ்த்த அறைகூவியும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. புதுச்சேரி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த இப்புரட்சிகர அமைப்புகள், 22.11.08 அன்று **கோட்டக்குப்பத்தில்** இதே முழக்கத்தின் கீழ் பொதுக்கூட்டத்தை நடத்தின. இப் பொதுக்கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களின் நெஞ்சில் புரட்சிகர அரசியலைப் பதியவைத்தன.

– பு.ஜ.செய்தியாளர்கள்

www.padippakam.com

# இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்கொள்வது எப்படி?

கடந்த 08.11.08 அன்று சென்னை சேத்துப்பட்டு பகுதிச் சுவர்களில் விநோதமாய்ப் படர்ந்திருந்தது ஒருவிதக் காளான். ''இந்து மதவெறிக் கொலைகாரன்'' அத்வானிக்கு 82-ஆவது பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள்தான் அவை!

மக்கள் கலை இலக்கியக் கழகம், பெரியார் திராவிடர் கழகம் ஆகிய புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள் செயல்படும் இப்பகுதியில், சேவா பாரதி, தலித் இந்துக்கள் சபை, திராவிடர் பறையர் முன்னேற்றக் கழகம், பிரம்ம குமாரிகள் சங்கம் எனப் பல 'அவதாரம்' எடுத்துக் கடந்த காலங்களில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் காலூன்ற முயன்று வந்தது. அப்போதெல்லாம் இப்பார்ப்பன பாசிஸ்டுகளின் தந்திரத்தை அம்பலப்படுத்தி, இந்த நச்சுப்பாம்புகளை சேத்துப்பட்டு பகுதியில் அண்டவிடாமல் விரட்டியடித்தனர் இவ்வமைப்பினர்.

இந்நிலையில், அடுத்தகட்ட படையெடுப்புக்கு முன்னறிவிப்பாய், அத்வானியின் பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததைக் கண்ட ம.க.இ.க. மற்றும் பெரியார் தி.க.வினர், அச்சுவரொட்டிகளைக் கருப்பு மையிட்டு அழித்து, உடனே எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இப்பிரச்சினையில் ம.க.இ.க., பெரியார் தி.க.வினரை நேருக்குநேர் சந்திக்கத் திராணியில்லாத இந்து வெறியர்கள், தோழர்களைத் தண்டிக்க போலீசிடம் தஞ்சம் புகுந்தனர்.

உதவி ஆணையர், காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார், ம.க.இ.க., பெரியார் தி.க., தோழர்களை அழைத்து ''போஸ்டர் ஒட்ட பி.ஜே.பி.க்கு இருக்கும் ஜனநாயகத்தை''ப் பற்றி வகுப்பெடுத்தனர்.

''அவுங்க கேஸ் கொடுத்திருக்காங்க; சமாதானமா போயிருங்க. மையிட்டு அழித்த சுவரொட்டிகளைக் கழுவிவிட்டு, மன்னிப்புக் கடிதம் எழுதி கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்''- என்றதுதான் தாமதம், ''நாண்டுகிட்டு செத்தாலும் சாவேனே தவிர, அழித்த சுவரொட்டியைக் கழுவமாட்டேன்'' என முகத்திலறைந்து எதிர்வினையாற்றினார் போலீசு நிலையம் சென்றிருந்த தோழர்களில் ஒருவர்.

''சரி, நீங்கள் அழித்த சுவரொட்டிகள் மீது மீண்டும் அதே சுவரொட்டியையாவது ஒட்டிக் கொள்ளட்டுமே''- என்று போலீசு 'இறங்கி' வந்த போதும், ''மீண்டும் ஒட்டினால் மீண்டும் அழிப்போம். சட்டப்படி என்ன செய்கிறீர்களோ செய்து கொள்ளுங்கள்''- என்று உறுதியாய் நின்றனர் தோழர்கள்.

மறுநாள் சுவரொட்டி அழிக்கப்பட்டதன் நோக்கத்தை விளக்கியும், பா.ஜ.க. பார்ப்பன பாசிஸ்டுகளின் கோர முகத்தையும், இதற்குத் துணைபோகும் போலீசின் கைக்கூலித்தனத்தையும் அம்பலப்படுத்தி, ம.க.இ.க., பெரியார் தி.க., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து சேத்துபட்டு பகுதி முழுவதும் தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்தி, இந்து மதவெறி பாசிசக் கும்பலுக்கெதிராக மக்களின் ஆதரவைத் திரட்டின.

இதனைக் கண்டு பாசிசக் கும்பலுக்கு ஆத்திரம் தலைக்கேறியது. போலீசுக்கோ இது கௌரவம் சம்பந்தபட்ட பிரச்சினையானது. விளைவு, சுவரொட்டிகளை மையிட்டு அழித்தக் 'குற்றத்திற்காக' ம.க.இ.க.வைச் சேர்ந்த தோழர் வாசுதேவன், பெரியார். தி.க.வைச் சேர்ந்த தோழர் ராஜன் ஆகியோர் மீது பிணையில் வரமுடியாத, கொலை முயற்சி உள்ளிட்ட நான்கு கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்து சிறையிலடைத்தது.

சுவரொட்டியில் இருந்த அத்வானியின் முகத்தை மையிட்டு அழித்ததற்கே கொலை முயற்சி வழக்கும் சிறை தண்டனையுமென்றால், குஜராத், மும்பை, பகல்பூர், கோவை எனப் பல இடங்களில் மதக் கலவரம் நடத்தி ஆயிரக்கணக்கான முசுலீம்களைப் படுகொலை செய்த, அரியானா மாநிலம் துலினாவில் ஐந்து தாழ்த்தப்பட்டவர்களை உயிருடன் அடித்துக் கொன்ற ''கொலைகாரன்'' அத்வானிக்கு தூக்குத் தண்டனை கொடுத்திருக்க வேண்டும். இந்நேரம் அத்வானியின் கல்லறையில் மரமும் வளர்ந்திருக்க வேண்டும்.

ஆனால், நாடறிந்த இந்த கொலைகாரனுக்கு சட்டமும் நீதிமன்றமும் என்ன தண்டனையை வழங்கியுள்ளது? இம்மதவெறி கலவரங்களுக்காக அத்வானி மீது ஒரு 'பெட்டி கேஸாவது' போட்டிருக்கிறதா?

இப்படிப்பட்ட கொலைகாரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து சுவரொட்டி ஒட்டக்கூடாது என்ற பொது நோக்கத்தில்தான் அத்வானியின் பிறந்தநாள் சுவரொட்டி மீது ம.க.இ.க.வும், பெரியார் தி.க.வினரும் மையிட்டு அழித்தனரே தவிர, வேறெந்த ''உள்நோக்க''மும் அவர்களுக்குக் கிடையாது.

இப்பார்ப்பன-பாசிசக் கும்பல், தனக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பவர்களையெல்லாம் வன்முறையால்

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள ஓரிக்கை கிராமத்தில் நடந்த ஆர்.எஸ்.எஸ்.இன் ஆயுதப் பயிற்சி முகாமிற்கு (ஷாகா) எதிராகச் சட்டப்படியான முறையில்போராடியவர்களை உருட்டு கட்டை கொண்டு தாக்கும் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள்.




படிப்பகம்

www.padippakam.com

மட்டுமே எதிர்கொண்டு வருகிறது. ஆனால், மற்றவர்கள் மட்டும் இவர்களை எதிர்க்கும்போது ''சட்டம் சொல்கிறபடி'' நடந்து கொள்ளவேண்டும் என உபதேசம் செய்கிறது.

''சாதிக்கொரு நீதி'' பேசும் பார்ப்பன-பாசிசக் கும்பலிடம், இப்பித்தலாட்டத்தைத் தவிர, வேறென்ன நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

ஆர்.எஸ்.எஸ்.ஐயும்-பி.ஜே.பி.யையும் மற்ற ஓட்டுக் கட்சிகளைப் போல பார்க்க முடியாது. அடிப்படையிலேயே இவை இந்து மதவெறி பிடித்த, ஆதிக்கசாதிவெறி பிடித்த, ஆயுத பயிற்சி எடுத்துக் கொண்ட ஒரு பாசிச வன்முறைக் கும்பல். இவர்களை ஒழித்துக் கட்டாமல், சமூக அமைதியைப் பாதுகாக்க முடியாது. எனவே, இப்பாசிஸ்டுகளின் ஒவ்வொரு அசைவையும் - சுவரொட்டிகள் ஒட்டுவதில் தொடங்கி, விளக்கு பூஜை, ஷாகா நடத்துவது அனைத்தையும் கண்காணித்து, மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, இப்பாசிஸ்டுகளுக்கெதிராக மக்களை அணிதிரட்டியாக வேண்டும்.

தனது எதிரியை வன்முறையால் மட்டுமே அணுகும் இக்கும்பலை, சட்டம், ஜனநாயகம் என்ற வரம்பிற்குள் மட்டுமே நின்று கொண்டு எதிர்கொள்ளவும் முடியாது. அவசியமான பொழுது சட்டத்தை மீறியும் தான் எதிர்கொண்டாக வேண்டும். அவாளின் ''மொழியில்'' சொன்னால் தானே ''அவாளுக்குப் புரியும்''!

சிறையிலிருந்து வெளிவந்த தோழர்களை, ம.க.இ.க., பெரியார் தி.க., வி.சி. அமைப்புகளும், பகுதி மக்களும் பெருந்திரளாக அணிதிரண்டு வரவேற்றனர். பின்னர், அவர்கள் அங்கிருந்து முழக்கமிட்டபடியே ஊர்வலமாய்ச் சென்று, அருகிலுள்ள அம்பேத்கர் மற்றும் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, ''இப்பாசிஸ்டுகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட''ச் சூளுரைத்தனர்.

பார்ப்பன பாசிசத்தை வேரறுக்க வேண்டிய அவசியத்தை சேத்துப்பட்டு பகுதி மக்கள் உணர்ந்துள்ளனர் என்பதற்கு சான்றாக அமைந்தது சிறைசென்று வந்த தோழர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி.

சந்தேகமிருந்தால், ஆர்.எஸ்.எஸ். கும்பலே, ஒட்டிப் பாருங்கள் இன்னொரு சுவரொட்டியை!

**- ம.க.இ.க., சென்னை.**

# இந்து பயங்கரவாதமும் ''இந்து''க்களின் மௌனமும்

## மலேகான் குண்டு வெடிப்பைக் கண்டிக்காத ''இந்து''க்களின் பாரபட்சம், ஆர்.எஸ்.எஸ்.க்குத் தெம்பூட்டுகிறது.

செப்டம்பர் 29, 2008 அன்று நடந்த மலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக பெண் சாமியார் பிரக்ஞா சிங் தாக்கூர், புனேவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ரமேஷ் உபாத்யாய், இராணுவப் பணியிலிருக்கும் லெப்டினன்ட் கர்னல் பிரசாத் சிறீகாந்த் புரோகித் மற்றும் தீவிர இந்து அமைப்புகளைச் சேர்ந்த ஏழுபேரும் கைது செய்யப்பட்டிருப்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

மராட்டியப் போலீசின் பயங்கரவாத எதிர்ப்பு படைப் பிரிவின் கையிலிருக்கும் பதிவு செய்யப்பட்ட உரையாடலின்படி அந்தப் பெண் சாமியாரும் இந்த வழக்கில் இன்னமும் தலைமறைவாக இருக்கும் ராம்ஜி கல்சங்க்ராவும் இப்படி பேசிக்கொள்கிறார்கள்: ''என்னுடைய வண்டி குண்டுவெடிப்புக்குப் பயன்பட்டிருக்குமேயானால், ஏன் இவ்வளவு குறைவான நபர்கள் இறந்திருக்கிறார்கள்?'', என்று பிரக்ஞா கேட்டதற்கு கல்சங்க்ரா, ''அந்தக் கூட்டத்தின் நடுவில் வண்டியை நிறுத்த என்னால் முடியவில்லை'' என்று பதிலளிக்கிறார்.

ஒருவேளை அப்படி நிறுத்தியிருந்தால் ஐந்து பேருக்குப் பதில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட இந்தப் பெண்சாமியாருக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று ஒதுங்கிய இந்து மதவெறியர்கள் இப்போது இவருக்கு ஆதரவு கொடுப்பதில் போட்டி போடுகிறார்கள். காரணம் வர இருக்கும் தேர்தலில் இந்து அலையைக் கிளப்பி வாக்குகளைப் பெறவேண்டும் என்பதுதான். பிரக்ஞா தீவிரமான மதவெறியைக் கக்கும் பிரபலமான பேச்சாளர். சென்ற முறை குஜராத்தில் நடந்த தேர்தலில்

**பா.ஜ.க.வின் ''தேசிய''த் தலைவர் ராஜ்நாத் சிங் (வலது ஓரம்); ம.பி. முதல்வர் சவுகான் (இடது ஓரம்) மற்றும் பிற முக்கிய பா.ஜ.க. தலைவர்களுடன் மலேகான் குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பெண் துறவி பிரக்ஞா சிங் தாகூர் (வலமிருந்து மூன்றாவது).**



www.padippakam.com





மலேகான் குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள (இடமிருந்து) இந்திய இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினென்ட் கர்னல் பிரசாத் சிறீகாந்த் புரோகித்; மேஜர் (ஓய்வு) ரமேஷ் உபாத்யாய்; முன்னாள் ஏ.பி.வி.பி. உறுப்பினர் சமீர் குல்கர்னி மற்றும் "தர்ம குரு" தயானந்த் பாண்டே.

மோடியுடன் ஓரே மேடையில் பேசியிருக்கிறார். இது போக பா.ஜ.க தலைவர் ராஜ்நாத் சிங், ம.பி பா.ஜ.க. முதல்வர் சவுகான் ஆகியோரின் அருகில் இவர் இருக்கும் புகைப்படமும் வெளியாகி இருக்கிறது.

சங்கப்பரிவாரங்களின் எல்லா முக்கியத் தலைவர்களுக்கும் இந்த பெண் சாமியார் அறிமுகமாயிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ் தலைமையில் எல்லா வானரங்களும் கூடி இந்த வழக்கில் பிரக்ஞாவுக்கு எப்படி உதவ முடியும், அவருக்கு நியமிக்கப்படவேண்டிய வழக்கறிஞர், அதற்கான கட்டணம் எல்லாம் பேசி முடிவெடுத்திருக்கிறார்கள். இப்போது அத்வானியே இந்த அம்மாவுக்காக குரல் கொடுக்க, உடனே மன்மோகன் சிங் இந்த வழக்கு சம்பந்தமாக அத்வானியோடு போனில் பேசியும், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனை நேரில் அனுப்பியும் விளக்கமளிக்கச் செய்திருக்கிறார். மேலும், உண்மையறியும் சோதனையின் போது பதிவு செய்யப்பட்ட குறுந்தகடெல்லாம் அத்வானியிடம் போட்டுக் காண்பிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

விசாரணை நடக்கும் போதே அதன் விவரங்கள் ஒன்றுவிடாமல் இந்து மதவெறியருக்குப் போகிறது என்றால் குற்றவாளிகள் எளிதில் தப்பித்து விடலாமே? இந்த சலுகை உலகில் வேறெந்தக் குற்றவாளிக்கும் கிடையாதே? தற்போது இந்த பெண் சாமியாரைக் காப்பாற்றுவதற்காக சிவசேனா, உமா பாரதி, பா.ஜ.க மூன்றுக்கும் பெரிய போட்டியே நடக்கிறது. உமா பாரதியோ அந்த சாமியாரிணிக்காக ம.பி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தருவதாகவே கூறியிருக்கிறார்.

இசுலாமியத் தீவிரவாதிகள் குண்டு வைத்ததும் நாடும், ஊடகங்களும், இந்து மதவெறி அமைப்புக்களும் ஆடிய ஆட்டமென்ன? ஐ.எஸ்.ஐ சதி, ஜிகாதிப் போர், இறந்தவர்களின் துயரக் கதைகள் என்றெல்லாம் கிளப்பி விடுபவர்கள், இப்போது நேர்மாறாக ஏதோ தேச பக்தர்களைப் போல இந்த பயங்கரவாதிகளைக் காப்பாற்றுகிறார்கள். காங்கிரசும் இந்துக்களைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக இந்த வழக்கில் அடக்கி வாசிக்கிறது. இசுலாமியர்கள் குண்டு வைத்தால், நாடு முழுவதும் அப்பாவிகளைக் கொத்துக் கொத்தாய் கைது செய்யும் அரசாங்கம், இதில் ஆதாரத்துடன் கைது செய்யப்பட்டிருக்கும் பெண் சாமியாருக்காக அத்வானியுடன் போனில் பேசி விளக்கமளிக்கிறது என்றால், இதன் அபாயத்தைப் புரிந்து கொள்ளலாம்.

**அகமதாபாத் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட தனது மகன் அப்படிக் குற்றம் செய்திருப்பின் அவனைத் தூக்கில் போடவேண்டும் என்று பேசினார், ஒரு இசுலாமியத்தாய். பெண் சாமியார் பிரக்ஞா சிங்கின் தந்தையோ, தன் மகளின் பயங்கரவாத நடவடிக்கைக்காக தான் பெருமைப்படுவதாக பேட்டி கொடுக்கிறார்.**

அகமதாபாத் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட தனது மகன் அப்படிக் குற்றம் செய்திருப்பின் அவனைத் தூக்கில் போடவேண்டும் என்று பேசினார் ஒரு இசுலாமியத் தாய். இங்கோ பெண் சாமியாரின் தந்தை ஆர்.எஸ்.எஸ் இன் உறுப்பினராக இருப்பவர் தான் பெருமைப்படுவதாக பேட்டி கொடுக்கிறார். ஆக நாடு முழுவதும் இத்தகைய பொதுக் கருத்து இருக்கும் பட்சத்தில் இந்து மதவெறியர்கள் குண்டு வெடிப்பதை பெரிய அளவில் செய்தாலும் அது குறித்து யாரும் கவலைப்படப் போவதில்லை. இசுலாமியத் தீவிரவாதிகள் இசுலாமிய மக்களிடமே தனிமைப்பட்டிருக்கும் போது, இந்து பயங்கரவாதிகள் இந்துக்களின் நேரடியான ஆதரவைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், இதுதான் இந்தியாவைச் சூழ்ந்திருக்கும் பெரிய அபாயம்.

இது வெளிநாட்டிலிருந்து அல்ல, உள்நாட்டிலிருந்தே தூண்டிவிடப்படும் பயங்கரவாதம். மேலும் குண்டு வெடிப்பு என்ற தீவிரமான செயல்பாடுகளுக்கே இந்தத் தீவிரவாதிகள் சமூகத்தாலும், சட்டத்தாலும் தண்டிக்கப்படவில்லை என்றால், இவர்கள் முசுலீம்களுக்கெதிரான கலவரத்தில் என்னவெல்லாம் செய்வார்கள்? அதையும் இனிமேல் செய்யவேண்டுமென்பதில்லை, குஜராத் 2002 கலவரத்திலேயே இதைப் பார்த்திருக்கிறோம்.

பூனேவில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜர்



படிப்பகம்

www.padippakam.com

மூலம்தான், அவர் பணியில் இருக்கும் போதுதான் ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்து இந்து பயங்கரவாதிகளுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இசுலாமியத் தீவிரவாதி களுக்குப் பல சுற்றுக்கள் அபாயங்கள் தாண்டிக் கிடைக்கும் இந்த நவீன வெடி மருந்து இந்து பயங்கரவாதிகளுக்கு சுலபமான வழியில், கைக்கெட்டும் தூரத்தில் இந்திய இராணுவத்திடமி ருந்து கிடைக்கும் என்றால், இசுலாமிய மக்களின் கதி என்ன? ஏற்கெனவே பல கலவரங்களில் இசுலாமிய மக்களை இராணுவம் கொன்றதிலிருந்து, அதன் இந்து சார்பு வெளிப்பட்டிருக்கிறது. தற்போது இவர்களே குண்டு வெடிப்பில் ஈடுபடுகிறார்கள் என்றால், இந்திய இராணுவம் இந்து மதவெறியர் களின் இராணுவமன்றி வேறென்ன?

இந்த விசயத்தை மேலோட்டமாகக் கண்டிக்கும் துக்ளக் சோ, ஒருவேளை இராணுவம் மற்றும் உளவுத் துறைகள் பயங்கரவாதத்திற்கு எதிராக இத்தகைய எதிர் நடவடிக்கைகளில் (அதாவது குண்டு வெடிப்புக்கள்) ஈடுபட்டால், அது இரகசியமாக இருக்கவேண் டுமென ஆலோசனை கூறுகிறார். இதன்மூலம் இந்திய உளவுத் துறை அமைப்புகள் இத்தகைய நடவடிக்கை களில் ஈடுபடலாம் என அங்கீகாரமும் வழங்குகிறார். இசுலாமியத் தீவிரவா திகள் குண்டு வெடித்தால், அது நிரூபிக்கப் படாமலேயே அவர்களைக் கொன்று அழிக்க வேண்டுமெனச் சாமி யாடும் இந்த மொட்டைத் தலையன், இந்து பயங்கரவாதத்திற்கு மட்டும் இனப்பாசத்தோடு வக்காலத்து வாங் குவதை என்னவென்று சொல்ல? மற்ற குண்டுவெடிப்புக்களின் போது மத்திய அரசு தீவிரவாதிகளை மென்மையாக நடத்துகிறது, பொடா சட்டம் மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும் என்று துள்ளியவர்கள், இப்போது கேட்டுப் பார்க்க வேண்டியதுதானே?

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நிரூபிக்கப்படுவ தற்கு முன்பே, சிமி இயக்கம் இந்திய அரசால் தடை செய்யப்பட்டிருக்கிறது. அதன் தலைவர்கள், தொண்டர்கள் பலரும் எந்தக் குற்றமும் நிரூபிக்கப் படாமல் வதைக்கப்படுகின்றனர். ஆனால், இப்போது கைது செய்யப் பட்ட இந்து பயங்கரவாதிகள் எல்லா இந்து மதவெறி அமைப்புக்களிலும் இருந்து வருவதற்கு எல்லா வகை ஆதா ரங்களும், புகைப்படமும், வீடியோவும் இருந்தாலும் விசுவ ஹிந்து பரிஷத், பஜ் ரங் தள், அபிநவ பாரத், ஹிந்து ஜாக் கரன் மன்ஞ், துர்கா வாஹினி, ஆர்.எஸ்.எஸ் போன்ற உண்மையான பயங்கரவாத அமைப்புக்கள் எவையும் தடை செய்யப்படவில்லை. அல்லது அப்படி தடைசெய்யவேண்டுமென ஒரு விவாதம் கூட ஊடகங்களிலும், தேசிய அரங்கிலும் நடைபெறவில்லை. அது மட்டுமல்ல, தடை செய்யப்பட வேண்டிய இந்த இயக்கங்களின் தலை வர்கள் எல்லாம் வெளிப்படையாக பிரக்ஞா சிங்கிற்கு ஆதரவளித்து வருகி றார்கள்.

நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பான வழக்கில் எந்தக் குற்றமும் செய்யாத அப்சல் குருவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நாட்டில், பட்டவர்த்தனமாக பயங்க ரவாத செயல்களைச் செய்யும் தலை வர்கள் அங்கீகாரத்துடன் உலா வந்தால் என்ன நடக்கும்? நிச்சயமாக பாசி சம்தான் வரும். எப்படி ஹிட்லர் சட்ட பூர்வ வழிகளில் தொடங்கி, பின்னர் ஆட்சியைக் கைப்பற்றி எதிரிகளை சட் டப்படியே வேட்டையாடினானோ அதுதான் இங்கும் நடக்கப்போகிறது என்று கணித்தால் அது மிகை மதிப்பீ டல்ல. பாசிசத்திற்கு முன்னோட்டமாக இங்கிருக்கும் எல்லா நிறுவனங்களும், அரசு அமைப்புகளும் இந்துத்வத்திற்கு ஆதரவாக இயங்குமாறு மாற்றப்பட்டி ருக்கின்றன. அதனால்தான் மலே கானில் அப்பாவி இசுலாமிய மக்களின் உயிரைக் குடித்த பயங்கரவாதிகள் தியாகிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

இசுலாமிய தீவிரவாதத்திற்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அந்த மதத்தின் அப்பாவி மக்களையே பல இன்னலுக்குள்ளாக்குகிறது என்றால், தீவிரவாதத்திற்குப் பலியான இளைஞர்களை எப்படி நடத்துமென்று விளக்கத் தேவையில்லை. இதனால் இசுலாமிய தீவிரவாதத்திற்கு ஆள் பிடிப் பதற்கும், குண்டு வைப்பது போன்ற நட வடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் மிகுந்த பிரயத்தனங்கள் செய்ய வேண்டும். முக்கியமாக, இந்து மதவெ றியர்கள் நடத்திய கலவரங்களில் தமது உற்றார் உறவினரைப் பலிகொடுத்து, அதற்குப் பழிவாங்கும் முகமாகச் சில இளைஞர்கள் தீவிரவாதப் பாதையை மேற்கொள்கிறார்கள். அதுவும் இந்து மதவெறியரை இந்த நாட்டின் சட் டமும், நீதியும் தண்டிக்கப் போவ தில்லை என்பதை தமது சொந்த அனுப வத்தில் உணர்ந்து அப்படி மாறுகி றார்கள். இப்போது இந்து பயங்கரவா தத்திற்கு கிடைக்கும் வரவேற்பு அந்த எண்ணத்தை வளர்க்கவே உதவி செய்யும்.

ஆகவே, இந்து பயங்கரவாதத்தின் வருகையும், இருப்பும், அது தண்டிக்கப் படாததும் பல இன்னல்களை இந்நாட் டிற்கு ஏற்படுத்தும் என்பது மட்டும் நிச் சயம். இந்த அபாயத்தை நாம் சட்டபூர் வமாகப் போராடி ஒழிக்க முடியாது என்பதால், இவர்களை மக்கள் மன் றத்தில் வைத்து அம்பலப்படுத்தித் தண் டிக்க வேண்டும். அது நிறைவேறாத பட் சத்தில், இந்து மதவெறி பாசிசம் நாட்டை கைப்பற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதையே மலேகான் குண்டு வெடிப்பிற்காகக் கைது செய்யப்பட்ட இந்து பயங்கரவா திகள் நாட்டிற்கு அளிக்கும் செய்தி.

● இளநம்பி


**இந்துவெறி பயங்கரவாதிகளைத் தோலுரித்துக் காட்டும் நூல்கள்**

**குண்டுவைப்புகளில் ஆர்.எஸ்.எஸ்.பயங்கரவாதிகள்** விலை: ரூ.7.00

(இரகசியக் குண்டு தயாரிப்பு, தாக்குதல்களில் ஈடுபட்டுவரும் இந்துவெறி பயங்கரவாதிகளை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தும் பிரசுரம்)

**இந்து என்று சொல்லாதே! ராமன் பின்னே செல்லாதே!** விலை: ரூ.20.00

—துரை.சண்முகம்

(கொலைகார ராமனின் கூட்டாளிகளை அம்பலப்படுத்தும் அரசியல் கவிதை நூல்)

கிடைக்குமிடம்

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை- 600 002. தொலைபேசி: 044 - 2841 2367.

www.padippakam.com

# பொருளாதார நெருக்கடி:
# எரிகிற வீட்டிலும் பிடுங்கும் வக்கிரம்

## பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது என்ற பெயரில் தரகு முதலாளிகளுக்குச் சலுகைகள் வாரிவாரி வழங்கப்படுகின்றன.

''எதைத் தின்றால் பித்துத் தெளியும்?''- இந்தக் கேள்வி தான் இப்பொழுத் மன்மோகன் சிங்கையும், ப.சிதம்பரத்தையும் குடைந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு மாதங்களுக்குள் வங்கியில் இருந்து 2,60,000 கோடி ரூபாய் சந்தையில் கொட்டி விட்டோம்; முதலாளிகளுக்கு வழங்கப்படும் வங்கிக் கடனுக்கான வட்டியையும் இயன்றவரைக் குறைத்து விட்டோம். ஆனாலும், பங்குச் சந்தை சரிந்து கொண்டே போகிறதே எனத் திகைத்துப் போய் நிற்கிறார்கள், அவர்கள்.

பங்குச் சந்தைக் சரியச் சரிய, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் (நவ. 22 நிலவரப்படி ரூ. 50.20) சரிந்து கொண்டே போகிறது. தரகு முதலாளிகளோ சந்தையில் பணத்தை இன்னும் கொட்ட வேண்டும்; வட்டியை இன்னும் குறைக்க வேண்டும் என நெருக்கடி கொடுக்கிறார்கள். இதற்கு மேலும் பணம் வேண்டும் என்றால், அரசு வங்கிகளின் சாவிகளை அம்பானி-டாடாவிடம் ஒப்படைத்துவிடுவது தவிர வேறு வழியில்லை.

இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில், தரகு முதலாளிகள் இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டார்கள். ''முறை சார்ந்த தொழில்களில் 25 முதல் 30 சதவீதம் வரையும்; மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளில் 50 சதவீதம் வரையும் வேலையிழப்பு ஏற்படும்'' எனத் தரகு முதலாளிகளின் சங்கமான அசோகாம் அறிக்கை வெளியிட்டது. அடுத்த ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டியிருப்பதால், காங்கிரசு கும்பல் இந்த அறிக்கையால் ஆடிப்போனது. தரகு முதலாளிகளை அழைத்துச் சமரசம் பேசினார், பிரதமர் மன்மோகன் சிங். அவர்களோ, தொழிலாளர்களைப் பிணைக்கைதியாக வைத்துக்கொண்டு, கைமாறாக என்ன தருவீர்கள் எனப் பேரம் நடத்தினார்கள். பகிரங்கமாகவும், பச்சையாகவும் நடந்த இப்பேரத்தையடுத்து, அரசுத் துறை வங்கிகள் ஒன்றன்பின் ஒன்றாக கடனுக்கான வட்டியை மேலும் குறைப்பதாக அறிவித்தன.

ஆனாலும், இந்தியப் பொருளாதாரம் சண்டிக் குதிரையைப்போல எழுந்து நிற்கவே மறுக்கிறது. அமெரிக்க - ஐரோப்பியச் சந்தைகளை நம்பி இயங்கிவரும் அனைத்துத் துறைகளும் இப்பொழுது கடும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளன.

• திருப்பூரை மையமாகக் கொண்டு இயங்கும் ஆயத்த ஆடை ஏற்றுமதித் தொழில், 2008-09 ஆம் ஆண்டில் 20 முதல் 30 சதவீத வீழ்ச்சியைச் சந்திக்கும்; இதனால் 20 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ஏ.சக்திவேல் கூறியிருக்கிறார்.

• குஜராத்திலுள்ள சூரத் நகரை மையமாகக் கொண்டு இயங்கும் வைரப்பட்டைத் தீட்டும் தொழிலில் ஏறத்தாழ ஏழு இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ''சூரத்தின் வைர உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதம் அமெரிக்காவுக்குத் தான் ஏற்றுமதி செய்யப்படுவதால், இத்தொழில் 20 சதவீத வீழ்ச்சியைச் சந்திக்கும்; இதனால் 25,000 முதல் 35,000 தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள்'' என மதிப்பிடப்பட்டுள்ளது.

• கேரள மாநிலத்தில் உற்பத்தியாகும் முந்திரி, மசாலாப் பொருட்கள், தேங்காய் நார் தயாரிப்புகள், கைத்தறி ஆடைகளுக்கு அமெரிக்காதான் முக்கியமான ஏற்றுமதி சந்தை என்பதால், இத்துறைகள் அனைத்தும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்கிறார், சி.பி.எம். கட்சியின் மாநிலச் செயலர் பினரயி விஜயன்.

• மென்பொருள் ஏற்றுமதி மற்றும் அயல்பணி ஒப்படைப்பு ஆகிய துறைகளில் ஏறத்தாழ 2,000 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு(ரூ.1,00,000 கோடி ரூபாய்) வியாபார இழப்பு ஏற்படும் எனக் கூறப்படுகிறது. இதனால் எத்தனை ஆயிரம் ஊழியர்கள் வேலையிழப்பார்கள் என்பது மட்டும் ''இரகசியமாக'' வைக்கப்பட்டுள்ளது.

''இந்த நெருக்கடி தங்களுக்குப் புதிய வாய்ப்புகளைத் திறந்து விடும்'' என இத்துறையின் ஜாம்பவான்கள் கூறிக் கொண்டாலும், இன்ஃபோசிஸ், சத்யம், விப்ரோ ஆகிய நிறுவனங்களில் புதிதாக ஊழியர்களை நியமிப்பது 40 சதவீதம் வரை அடிபட்டு போகும் என ''பிசினஸ் வேர்ல்டு'' என்ற ஆங்கில வர்த்தக இதழ் குறிப்பிடுகிறது. கடந்த பிப்ரவரிக்குப் பிறகு, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், ஐ.பி.எம்., ஹெச்.பி., யாகூ, பத்னி கம்ப்யூட்டர் சிஸ்டம்ஸ் ஆகிய நிறுவனங்களில்

''நெருக்கடி''யைத் தீர்ப்பதற்காக அரசுக்கும் தரகு முதலாளிகளுக்கும் இடையே நடந்த கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அம்பானி (இடமிருந்து மூன்றாவது), சுனில் மித்தல் (நான்காவது), ஆனந்த் மஹிந்த்ரா (ஆறாவது) உள்ளிட்ட பலர்.





படிப்பகம்

www.padippakam.com

மட்டும் 28,000 ஊழியர்கள் வேலையில் இருந்து துரத்தப் பட்டுள்ளனர்.

''எஃகு, சிமெண்ட், தகவல் தொழில் நுட்ப சேவைகள், கட்டுமானத் தொழில்களில் வேலையிழப்பு கடுமையாக இருக்கும்'' என்கிறது அசோகாம் அறிக்கை. ''ஜவுளி-ஆயத்த ஆடைத் தொழிலில் ஏற்கெனவே ஐந்து இலட்சம் வேலை யிழப்பு ஏற்பட்டுவிட்டது; அத்துறையில் இன்னும் ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள்; 2009-இல் பெரிய முதலாளித்துவ நிறுவனங்கள் உருவாக்கும் வேலை வாய்ப்புகளில் மூன்று இலட்சம் வாய்ப்புகள் காணாமல் போகும்'' என்கிறது, ''இந்தியா-டுடே'' சார்பாக நடத்தப் பட்ட ஆய்வு. இதுபோக, நாடெங்கும் 10 இலட்சம் தினக்கூலித் தொழிலாளர் வேலையிழப்பார்கள் என்ற குண்டை பல்வேறு கருத்துக் கணிப்புகள் தூக்கிப் போடு கின்றன.

ஊழியர்களை வேலையைவிட்டுத் தூக்காத நிறுவனங் கள்; சம்பளமில்லா விடுப்பில் அனுப்புவது; ஊதியத்தையும் மற்ற பிற நலன்களையும் வெட்டுவது எனத் தந்திரமான வழி களில் இறங்கியுள்ளன.

வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு என்ற கிடுக்கிப் பிடிக்குள் மக்கள் சிக்கிக் கொண்டு மூச்சுத் திணறிக் கொண்டுள்ளனர். மன்மோகன் சிங் இந்த இக்கட்டான நேரத் தில் கூட மக்களின் தவிப்பைக் கண்டு கொள்ளாமல், முதலா ளிகளின் இலாபம் சரிந்து விழுவதைப் பற்றிக் கவலைப்படு கிறார்.

140 அமெரிக்க டாலருக்கு மேல் விற்றுக் கொண்டிருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை, இந்த நெருக்கடிக்குப் பிறகு 60 அமெரிக்க டாலருக்கு கீழாகச் சரிந்துவிட்டது. இப் பொழுது எரிபொருள் விலையைக் குறைத்தால், பொருளா தாரச் சரிவு மட்டுப்படும் என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் கூட ஆலோசனை கூறிவருகின்றனர். ஆனாலும், மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு விலையைக் குறைக்க மறுத்திருக்கிறார், மன்மோகன் சிங்; அதே சமயம், விமானங்களில்பயன்படுத் தப்படும் எரிபொருளின் விலையை ரூ. 71028/-லிருந்து ரூ. 39380/-ஆகக் குறைத்து, தனியார் முதலாளிகளுக்குக் கருணை காட்டியிருக்கிறார்.

நிதிச் சந்தையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி தனியார் புகுந்து விளையாட அனுமதிக்கப்பட்டதால்தான், அமெ ரிக்காவில் வீட்டுக் கடன் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறும் பொருளாதார நிபுணர்கள், இப்பொழுது அரசு நிதிச் சந்தை யைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார்கள். ஆனால், மன் மோகன் சிங்கோ இப்படிப்பட்ட சமயத்தில், இந்திய காப்பீடு துறையில் அந்நியப் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனம் போடுவதற்கு இருந்த வரம்பை 26 சதவீதத்தில் இருந்து 49 சதவீதமாக உயர்த்தி, பன்னாட்டுச் சூதாட்டக் கும்பலுக்கு ரத்தினக் கம்பளம் விரித்திருக்கிறார்.


அமெரிக்க நெருக்கடியால் வீழ்ச்சியைச் சந்தித்து வரும் வைரப் பட்டை தீட்டும் தொழிலில் மட்டும் 35,000 தொழிலாளர்கள் வேலையிழப்பர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

முதலாளிகளுக்குச் சலுகைகளை வாரி வழங்கினால், அத னால் ஏற்படக்கூடிய பலன்கள் சொட்டுச் சொட்டாகத் தொழி லாளர்களையும், உழைக்கும் மக்களையும் வந்தடையும் என்ற தாராளமயக் கொள்கை பெருந்தோல்வியில் முடிந்து விட்டதைத்தான் இந்த நெருக்கடி உணர்த்துகிறது. ஆனால், மன்மோகன் சிங்கோ, அமெரிக்கா சொல்லிக் கொடுத்த அதே செக்குமாட்டுப் பாதையில்தான் பயணத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்.

இந்த நெருக்கடி பற்றியும், மக்களின் சுமை பற்றியும் முதலைக் கண்ணீர் விடாத எதிர்க்கட்சிகளே கிடையாது. ஆனால், அவர்களிடம் மன்மோகன் சிங் நடைமுறைப்படுத் திவரும் தனியார்மயம் - தாராளமயத்திற்கு மாற்றான பொருளாதாரத் திட்டமோ, கொள்கையோ உண்டா? தனியார்மயம் -தாராளமயத்தை எதிர்ப்பதா கக் கூறும் போலி கம்யூனிஸ்டுகள் கூட, அவர் கள் ஆளும் மேற்கு வங்கத்தில் தனியார்மயத் திற்குத் தான் வால் பிடிக்கிறார்கள் என்றால், மற்ற முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகளின் பித்த லாட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை.

பொதுமக்கள், தேர்தல், ஓட்டுக்கட்சிகள், தனியார்மயம் - தாராளமயம் என்ற செக்கு மாட்டுத்தனத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற வேண்டிய தருணமிது. நக்சல்பாரி புரட்சியாளர்கள் முன் வைக்கும் அரசி யல்-பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு போராட வேண்டிய வேளையிது!

● குப்பன்

''கடன் அட்டை'' வலையில் வீழ்த்தப்பட்ட நடுத்தர வர்க்க நுகர்வோர், அக்கடனுக்கு வசூலிக்கப்படும் பல்வேறு விதமான கட்டணக் கொள்ளையை எதிர்த்து சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



# அமெரிக்க பயங்கரவாதம்

## அமெரிக்க இராணுவம் ஈராக்கில் நடத்தி வரும் பயங்கரவாத போர்க் குற்றங்களை அம்பலப்படுத்தும் ஒப்புதல் வாக்குமூலங்கள்.

ஈவிரக்கமற்ற படுகொலைகளால் ஈராக் நாட்டையும் ஆப்கனையும் குதறிக்கொண்டிருக்கும் அமெரிக்க நாசகார அரசுப் படையினரின் மத்தியில் இருந்தும் ஆக்கிரமிப்புப் போருக்கு எதிர்ப்புக் குரல்கள் தோன்ற ஆரம்பத்துள்ளன. சென்ற தலைமுறையில் வியட்நாம் போருக்கு எதிராக அமெரிக்கா முழுவதும் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த முன்னாள் படைவீரர்களின் உந்துதலால் இவ்வாண்டு மார்ச் மாதத்தில் "குளிர்காலப் போர்வீரர்கள்: ஈராக், ஆப்கானிஸ்தான்" எனும் நிகழ்வு அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஈராக், ஆப்கன் போர்களில் பங்கெடுத்த அமெரிக்க வீரர்களில் 200 பேருக்கும் மேலானோர், அமெரிக்க ராணுவம் அந்நாடுகளில் செய்துள்ள படுகொலைகளையும், மனிதவிரோதச் செயல்களையும் அம்பலப்படுத்தினார்கள். நான்கு நாட்கள் நடந்த அச்சந்திப்பில் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' எனும் பேரால் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோர்களுக்கு எதிராக அமெரிக்கப் படை நடத்திய மனித உரிமை மீறல்கள் விலாவாரியாகப் பதிவு செய்யப்பட்டன. அமெரிக்காவின் பேரால் தாங்கள் செய்த கொடூரச் செயல்கள் மனசாட்சியை உறுத்தியதால் அவற்றை அம்பலப்படுத்துவதென்று முடிவு செய்த அப்போர்வீரர்களின் சாட்சியங்கள் தொகுக்கப்பட்டு "குளிர்காலப் போர்வீரர்கள்: ஈராக், ஆப்கானிஸ்தான்: ஆக்கிரமிப்பின் சாட்சியங்கள்" என்ற நூலாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

அந்நூலில் பதிவாகியிருக்கும் அமெரிக்க இராணுவத்தின் வான்வெளி உளவமைப்புப் பிரிவின் கீழ் ஈராக்கிற்கு சென்ற மைக்கேல் பிரிஸ்னர் எனும் முன்னாள் படைவீரரின் வாக்குமூலம் கீழே தரப்பட்டுள்ளது.

•••

"அமெரிக்க இராணுவத்தில் நான் சேர்ந்தபோது இனவெறி என்பதே இராணுவத்தில் கிடையாது எனச்சொன்னார்கள். இவ்வெறியைக் களைவதற்காக, இராணுவத்தில் சேர்ந்த அனைவருக்கும் 'சம வாய்ப்பு' என்னும் பயிற்சி தந்தார்கள். ஒவ்வொரு இராணுவ யூனிட்டிலும் இனவெறிக்கூறுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அங்கே சமத்துவமின்மையும், இன ஒதுக்கலும் ஒழிக்கப்பட்டு விட்டதாகவே நான் உணர்ந்தேன்.

ஆனால் செப்டம்பர் 11, 2001 (இரட்டைக்கோபுரங்கள் தகர்ப்பு)க்குப் பிறகு 'முக்காடு மண்டையர்கள்', 'ஒட்டகம் ஓட்டிகள்' போன்ற சொற்களும், இச்சொற்களை விட அதிக துவேசமான 'பழுப்பர்கள்' எனும் சொல்லும் இராணுவத்தில் புழக்கத்தில் வந்தன. கட்டளையிடும் தகுதியில் உள்ள உயர் பதவி வகிப்பவர்கள்தான் இச்சொற்களைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். உடனடியாக இராணுவம் முழுக்க இன வெறியை உமிழும் வார்த்தைகள் சர்வசாதாரணமாகப் புழங்க ஆரம்பித்தன.

2003-இல் நாங்கள் ஈராக்கிற்கு சென்றபோது, எங்கள் அகராதியில் 'ஹாஜி' எனும் புதிய வார்த்தை சேர்ந்தது. ஹாஜி என்றால் 'எதிரி' என எங்கள் அகராதியில் பொருள்படும். ஒவ்வொரு ஈராக்கியனுமே எங்களுக்கு 'ஹாஜி'தான். 'ஹஜ்' பயணம் மேற்கொள்பவர்களைக் குறிக்கும் 'ஹாஜி' எனும் இசுலாமின் மிக உயர்வான சொல், மிக மோசமான விசயத்துக்கு எங்களால் பயன்படுத்தப்பட்டது.

அமெரிக்க இராணுவம் ஈராக்கில் நடத்தி வரும் பயங்கரவாத போர்க் குற்றங்களை அம்பலப் படுத்திய முன்னாள் படைவீரர் மைக்கேல் பிரிஸ்னர்.



நாங்கள் ஈராக்கில் எதிர்கொண்ட 'ஹாஜி'க்களில் ஒன்றைப் பற்றி சொல்லப்போகிறேன். "ஈராக்கில் ஐந்தாறு வீடுகள் மட்டும் தற்போது இராணுவத்துக்கு சொந்தமாகி விட்டதென்றும், அவ்வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களை விரட்டி விடவேண்டுமென்றும்" எங்களுக்குக் கட்டளையிட்டனர். அவ்வீடுகளுக்கு சென்று 'இனி இவ்வீடுகள் உங்களுடையதல்ல' என்பதைச் சொன்னோம். ஆனால், அவர்களுக்கு மாற்று ஏற்பாடோ, இழப்பீடோ நாங்கள் தரவில்லை. அவர்கள் எங்கு போவது என்பதையும் சொல்லவில்லை. அக்குடும்பத்தினர் குழப்பமும் பீதியுமடைந்தனர். அடுத்து என்ன செய்வது என்பதை அறியா அம்மக்கள் வீடுகளை உடனடியாகக் காலி செய்யவில்லை. உடனே அவர்களை அங்கிருந்து நாங்கள் வலுக்கட்டாயமாய் விரட்டி அடித்தோம்.

ஒரு பெண்மணி, இரண்டு சிறுமியர், நடுத்தர வயதுடைய இரு ஆண்கள் இவர்களைத் தவிர ஒரு முதி


படிப்பகம்

www.padippakam.com

யவர் ஆகியோர் அடங்கிய குடும்பம் ஒன்றை வீதியில் வீசி எறிந்தோம். வீட்டை விட்டு வெளியேற மறுத்துப் போராடிய முதியோர் உள்ளிட்ட ஆண்கள் அனைவரையும் கைது செய்து சிறைச்சாலைக்கு அனுப்பினோம்.

இவ்வாறு நூற்றுக்கணக்கான குடும்பத்தினரை அவர்கள் வசித்து வந்த வீடுகளில் இருந்து விசாரணை எனும் பெயரால் சில மாதங்களிலேயே துரத்தி அடித்தோம்.

இதன் பின்னர் நடந்த ஒரு விசாரணைச் சம்பவம், ஈராக்கில் நாங்கள் நடத்தி வரும் ஆக்கிரமிப்பின் இயல்பை எனக்குத் தெளிவாக உணர்த்தியது.


அந்த விசாரணைக் கைதி ஏற்கெனவே உள்ளாடைகள் உரியப்பட்டு அம்மணமாக இருந்தான். அவனது புறங்கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. தலையை கோணிப் பையால் மூடியிருந்தனர். அவனை, சுவர் ஒன்றின் முன்னால் அவனுடைய மூக்கு சுவரை உரசும் வண்ணம் நிறுத்தி இருந்தோம். முகத்தைக் கூட பார்க்க முடியாத அக்கைதியின் மண்டையை உரசினாற்போல் உலோக நாற்காலி ஒன்றினால் சுவரில் ஓங்கி அடிக்கவேண்டியதே, எனக்குக் கொடுக்கப்பட்ட வேலை. விசாரணைக்கான கேள்வியை சக படைவீரன் கைதியிடம் கேட்பான். அவனிடம் இருந்து வரும் பதில் எதுவாய் இருப்பினும், எனது வேலை அவனது காதை உரசினாற்போல ஓங்கிப் பெரும் சப்தம் வரும் வரை சுவற்றில் அடிப்பதுதான். அவன் களைத்துச் சோர்ந்துவிடும் வரை மாற்றி மாற்றி இதனைச் செய்தோம்.

அவன் ஒழுங்காக நிற்கிறானா என்பதைச் சோதிக்கும்படி என்னுடைய சார்ஜெண்ட் உத்தரவிட்டார். அவன் காலில் ஏதோ பிரச்சினை மாதிரி தெரிந்தது. அவனது காலில் காயம் ஒன்று இருந்ததால் நேராக நிற்க இயலாமல், அவன் தரையை நோக்கிச் சரிந்தவண்ணம் இருந்தான். அவனை நேராக நிற்க வைக்க உத்தரவு வரவே, அவன் கால்களைப் பிடித்து நேராக நிறுத்தினேன். ஆனால், பலனில்லை. மீண்டும் மீண்டும் சரிந்து விழுந்தான். உத்தரவைச் சரியாக நான் நிறைவேற்றவில்லை என்று சார்ஜெண்ட் என் மீது கோபப்பட்டு, அக்கைதியை அவரே தூக்கி எழுப்ப அவனுடைய முகத்தைச் சுவரில் தடார் என்று மோதவைத்து நிறுத்தினார். மீண்டும் சரிந்த கைதியை மாறிமாறிச் சுவற்றோடு சேர்த்து அறைந்தார். சற்று நேரத்தில் எல்லாம், சார்ஜெண்ட் வெளியே போய் விட்டார். இப்போது கீழே சரிந்து விழுந்த கைதியைத் தூக்கி நிறுத்தினேன். அவனது முகத்தோடு சேர்த்துக் கட்டியிருந்த கோணிப்பையில் இருந்து இரத்தம் பீறிட்டு வெளியேறிக் கொண்டிருந்தது.

அவனை அப்படியே உட்கார வைத்து விட்டேன். சார்ஜெண்ட் வரும் அறிகுறி தெரிந்ததும், மீண்டும் அவனை எழுப்பி நிற்க வைப்பதை ஆரம்பித்தேன்.

நான் செய்த இந்த இராணுவ் சேவையை எண்ணிப் பார்க்கையில் மிகவும் வெட்கப்படுகிறேன். எங்காவது வயதான மனிதர்களைப் பார்க்கும்போதெல்லாம், ஈராக்கில் வீடுகளை விட்டு எங்களால் ஸ்ட்ரெச்சர்களில் கட்டாயமாகத் தூக்கிப் போடப்பட்டு ஈராக் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்ட முதியவர்கள் நினைவுக்கு வந்து நான் குற்ற உணர்வுக்கு உள்ளாகிறேன்.

குழந்தைகளோடு இருக்கும் தாய்மார்களைப் பார்க்கும்போதெல்லாம் எங்களால் வெளியேற்றப்பட்ட எண்ணற்ற தாய்மார்களும் அவர்களின் குழந்தைகளும் கதறக் கதற



**அபு-கிரைப் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த ஈராக்கியர்களை நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்து, அக்குரூரத்தை ரசிக்கும் அமெரிக்கச் சிப்பாய்கள்: அமெரிக்க வக்கிரத்தின் வகை மாதிரி.** (கோப்புப் படம்).

அழுத கண்ணீர் நினைவில் எழும்புகிறது. ஆயுதம் தரித்த நாங்கள் தெருவில் வீசி எறிந்த குழந்தைகள் நினைவில் வந்து என்னை வதைக்கின்றனர்.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுகிறோம் என்று எங்களிடம் சொன்னார்கள். உண்மையில் பயங்கரவாதி நான்தான். பயங்கரவாதமே எங்கள் படை எடுப்புதான்.

இனவெறிதான், இப்பேரழிவுகளையும் அடுத்தவர்களின் நாட்டை அநியாயமாக ஆக்கிரமித்திருப்பதையும் நாங்கள் நியாயப்படுத்தும் முக்கிய கருவியாக உள்ளது.

எங்கள் வீரர்களிடம் இந்த வெறி மட்டும் இல்லாமல் இருந்தால், தாங்களும் ஈராக்கின் சாதாரண மக்களைப் போன்றவர்கள்தான் என்பதனையும், அமெரிக்காவின் கோடீஸ்வரர்களால் ஏவப்பட்ட படையினர்தாம் நாங்கள் என்பதையும் உணர்வார்கள்.

'நான் ஈராக்கில் பல குடும்பங்களை நடுத்தெருவுக்கு வீசி எறிந்தேன். ஈராக்கை விட்டு இங்கு (அமெரிக்கா) வந்து பார்த்தால், பொருளாதாரப் பின்னடைவால் இங்கும் பல குடும்பங்கள் நடுத்தெருவிற்கு வந்துள்ளன. நம்முடைய எதிரி எங்கோ ஐந்தாயிரம் மைல்களுக்கு அப்பால் இல்லை. அவர்கள் இங்கேதான் (அமெரிக்காவில்) தத்தம் வீடுகளில் இருக்கின்றார்கள். நாம் அணிதிரண்டு போராடினால் இப்போரை நம்மால் நிறுத்த முடியும். இந்த அரசையே நிலை குலைய வைக்க முடியும். நம்மால் புதியதோர் உலகை உருவாக்கவும் முடியும்.''

***மொழியாக்கம்: செங்கதிர்***

www.padippakam.com

# ஆதிக்க சாதிவெறியர்கள் கொட்டம் தமிழகத்தின் அவமானம்

## அரசும், திராவிடக் கட்சிகளும் ஆதிக்க சாதிவெறியர்களுக்குப் பக்கபலமாக இருப்பதால், தீண்டாமை தமிழகமெங்கும் தாண்டவமாடுகிறது.

**தீ**ண்டாமைக் கொடுமையைத் திமிரோடு பறைசாற்றி வந்த உத்தப்புரம் சுவர் தகர்க்கப்பட்ட பின்னர், தாழ்த்தப்பட்டவர்கள் ஆதிக்க சாதி வெறியர்களால் தாக்கப்படுவது தமிழகத்தில் தொடர் நிகழ்வாகியிருக்கிறது. கடந்த 6 மாதங்களில் நடைபெற்ற இத்தகைய சம்பவங்களில் சில..

• நவம்பர் 2-ஆம் தேதியன்று உத்தப்புரம் சென்று விட்டுத் திரும்பிய புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியின் காரை எழுமலை எனும் கிராமத்தின் அருகே தேவர்சாதி வெறியர்கள் அடித்து நொறுக்கினர். எழுமலையில் தேவர் சிலை அவமதிக்கப்பட்டுவிட்டதாக கூறியே இத்தாக்குதலில் ஈடுபட்டனர். இத்தாக்குதலைக் கண்டித்து நடந்த சாலைமறியல் போராட்டத்தின்போது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுரேஷ் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞர் கொல்லப்பட்டார்.

• உத்தப்புரத்தில் கடந்த ஐந்து மாதங்களாக நடந்து வரும் அடுத்தடுத்த மோதல்களில் ஆதிக்க சாதியினர் மீது சாதாரண கிரிமினல் சட்டத்தின் கீழ் கூட வழக்குப் பதிவு செய்யாமல், தாழ்த்தப்பட்ட மக்களின் மீது வெடிமருந்துச் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்; போலீசார் ஆதிக்கச் சாதி வெறியர்களுக்குச் சாதகமாக செயல்படுகிறதென்பதை அங்கு சென்று வந்த உண்மையைக் கண்டறியும் குழுவினர் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளனர் போலீசினுடைய ''அவுட்போஸ்ட்'' கூட கொடிக்கால் பிள்ளைமார்களின் வீடுகளிருக்கும் பகுதிகளில் அமைந்திருப்பதை அதிர்ச்சியுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

• வேலூர் அருகே இருக்கும் சோலையூர் ஊராட்சிக்குட்பட்ட பல்லாந்திட்டு கிராமத்தில் தாழ்த்தப்பட்டோரை ஊருக்குள் வரவிடாமல் தடுக்கும் நோக்கத்தில் கம்பி வேலி ஒன்றை ஆதிக்க சாதியினர் அமைத்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மனித உரிமை அமைப்புகளும் இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தன. இத்தீண்டாமை வேலியை அகற்றாவிட்டால் அக்டோபர் 22-ஆம் தேதி தாங்களே வேலியை அகற்றும் போராட்டம் நடத்துவோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்த பின்னர்தான், மாவட்ட நிர்வாகம் தலையிட்டது. பின்னர் ஆதிக்க சாதியினரே வேலியை அகற்றி இருக்கின்றனர்.

• செத்த மாட்டைத் தூக்க மறுத்ததற்காக விருதுநகர் மாவட்டம் தெற்கு ஆனைக்குட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 10 குடும்பத்தினர் மீது ஆயுதங்களால் சாதிவெறியர்கள் தாக்குதல் நடத்தி இருக்கின்றனர். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டப்பட்ட சுடுகாட்டில் அதே ஊரில் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் இறந்தபோது ஆதிக்க சாதியினர் பிணத்தை எரிக்க அனுமதிக்க மறுத்ததால் 2 நாட்கள் வரை பிணத்தை எரிக்கவோ, புதைக்கவோ முடியாமல் தாழ்த்தப்பட்டோர் அவதிப்பட்டுள்ளனர்.

• அருப்புக்கோட்டையை அடுத்துள்ள கல்லூரணியில் அருந்ததியர் திருமணம் ஒன்றிற்கு டிஜிடல் பேனர் வைத்ததைப் பொறுக்காமல், அருந்ததியினர் கோவில் திருவிழாவின்போது தீச்சட்டி ஏந்தி ஊர்வலம் வருவதற்கு ஆதிக்க சாதியினர் தடை விதித்தனர். போலீசு முன்னிலையில் சமரசக் கூட்டம் நடத்தப்பட்ட பின்னர், 30 பேர்கள் மட்டும் ஊர்வலம் செல்லலாம் என முடிவெடுக்கப்பட்டது. திட்டமிட்டபடி அருந்ததியர் ஊர்வலம் வந்தபோது, நூற்றுக்கும் மேற்பட்டோர் கூடி நின்று அருந்ததியினர் மீது கற்களால் தாக்கினர். 50 பேருக்கு மேல் காயமுற்றனர்.

**மதுரை மாவட்டம் கோட்டைபட்டியில் சாலை மறியல் செய்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சுரேஷின் சடலத்தைத் 'தூக்கி'ச் செல்லும் போலீசார்: ஆதிக்க சாதிவெறிக்கு ஒத்தூதும் அரசு பயங்கரவாதம்.**




படிப்பகம்

www.padippakam.com

போலீசார் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கைப் பதியவில்லை. சமரசக்கூட்டத்தில் கலந்து கொண்டவர் ஒருவரே தாக்குதலில் ஈடுபட்டிருந்த போதிலும் அவரைக் கைதும் செய்யவில்லை.

● செஞ்சி அருகிலுள்ள சொரத்தூர் காலனியை சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், அங்கிருக்கும் கோவிலுக்குச் சென்று வழிபடும் உரிமையை வன்னிய சாதியினர் பல ஆண்டுகளாக மறுத்து வந்திருக்கின்றனர். இந்த அநீதிக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகும் கூட, வன்னியர்கள் அவர்களை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை. போலீசிடம் முறையிட்டும் எந்தப் பலனுமில்லாத காரணத்தால் ஆகஸ்டு ஆறாம் தேதி சொரத்தூர் காலனியைச் சேர்ந்த பெண்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொங்கலிட்டுச் சாமி கும்பிடுவதென்று முடிவெடுத்து, பொங்கல் வைத்தனர். போலீசோ, பொங்கல் வைத்த பெண்களைத் தடியடி நடத்தி விரட்டியடித்ததோடு, 28 பெண்கள் உட்பட 30 பேரை கைது செய்தது.

● சேலம் மாவட்டம் கவுண்டம்பட்டி திரௌபதி அம்மன் கோவிலில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர், அதற்கெதிராக தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வந்தனர். இதன் விளைவாக அக்கோவில் ஒன்பது மாதங்களுக்கு முன்பாக மூடப்பட்டது. இதற்கெதிராக கோவிலில் நுழையும் உரிமை கோரி தாழ்த்தப்பட்டோர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர், இந்து அறநிலையத் துறையின் கீழ் வரும் அந்தக் கோவிலின் உள்ளே சென்று வழிபட அனைவருக்கும் உரிமை உண்டென உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பின் படி செப்டம்பர் 8-ஆம் தேதியன்று கோவிலில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைவதைத் தடுக்க முடியாத ஆதிக்க சாதியினர், திரௌபதி அம்மனையே ஒதுக்கி வைத்தனர். கோவிலில் இருந்த பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வேறு கோவிலில் வழிபாடு நடத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

● திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டத்தில் இருக்கும் பந்தப்புளி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரை அவ்வூரிலிருக்கும் கன்னநல்லூர் மாரியம்மன் கோவிலில் வழிபட விடாமல் தேவர் சாதியினர் தடுத்து வருகின்றனர். இதற்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் வழக்கு நடத்தி கோவிலில் வழிபடும் உரிமையைப் பெற்றார்கள். ஆனால், தேவர்களோ நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்தனர். தீர்ப்பை அமல்படுத்த வேண்டிய அதிகார வர்க்கமும் ஒடுக்கப்பட்ட மக்களை இழுத்தடித்து அலைக்கழித்து வந்தது. முடிவில் செப்டம்பர் 23-ஆம் நாள் கோவிலுக்குள் நுழையலாம் என அதிகார வர்க்கமும், ஆதிக்க சாதியினர் மற்றும் தலித் மக்கள் அடங்கிய சமாதான கமிட்டியும் முடிவு செய்தன. ஆனால், அந்த நாளன்று பூசாரி கோவிலைப் பூட்டிவிட்டுக் காணாமல் போய்விட்டார். தொடர்ந்து சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் காரணம் காட்டிய அரசு, கோவிலை ''சீல்'' வைத்து விட்டது. தாங்கள் ஏமாற்றப்பட்டதைக் கண்டு கொதித்தெழுந்த எழுபது குடும்பங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் குடும்ப அட்டைகளை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு அருகில் உள்ள மலைக்குச் சென்றுவிட்டனர்.



**ஆதிக்க சாதிவெறிக்கெதிராக கலகம்:**
**அதிகாரிகளிடம் குடும்ப அட்டைகளை ஒப்படைத்துவிட்டு பந்தப்புளி கிராமத்தைவிட்டு வெளியேறும் தாழ்த்தப்பட்டோர்.**

● கோவை அருகே உள்ள ஊஞ்சம்பாளையத்தைச் சேர்ந்த அருந்ததியர் சாதி இளைஞர் சிற்றரசு, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் அதே ஊரைச் சேர்ந்த கோமதி என்ற கவுண்டர் சாதிப்பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். ஜூலை ஐந்தாம் தேதி, வெளியூர் சென்று திரும்பிய சிற்றரசுவை கவுண்டர் சாதிவெறியர்கள் தலையை நசுக்கிக் கொன்றனர். இதனை போலீசார் விபத்தாக வழக்குப் பதிவு செய்துள்ளனர். நூற்றுக்கணக்கான மக்கள் சிற்றரசுவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதைக் கூடச் சகிக்க முடியாத கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை, ''தாழ்த்தப்பட்ட மக்களின் ஊர்வலத்தால் வன்முறை பெருகி விட்டதென்றும், இத்தகைய ஊர்வலங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும்'' சோழனூர், சாமளாபுரம் பகுதிகளில் ஒருநாள் கடை யடைப்பை நடத்தியது.

● சேலம் மாவட்டம் காவலாண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞர், நாடார் சாதிப் பெண் ஒருவரைக் காதலித்துத் திருமணம் கொண்டார். ஜூன் மாதத்தில் நாடார் சாதியினர் அந்த இளைஞர் மீது கொடூரத் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

**ஈழவிடுதலையை ஆதரித்துப் பேசிய இயக்குநர்கள் அமீரும் சீமானும் கைது செய்யப்பட்ட போது, தேசிய பாதுகாப்புச் சட்டம் பற்றி தெளிவாக வகுப்பெடுத்த பத்திரிக்கைகள், ஆதிக்க சாதி வன்முறைகள் நிகழுகின்ற சமயங்களில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றி ஒருமுறை கூட எழுதியதில்லை.**

www.padippakam.com

ஆளும் வர்க்கத்தாலும், ஆதிக்க சாதியினராலும் தலித்துகளுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை மூடி மறைப்பதில் ஊடகங்களின் பங்கும் முக்கியமானதாகும், ஈழ விடுதலையை ஆதரித்துப் பேசிய இயக்குநர்கள் அமீரும் சீமானும் கைது செய்யப்பட்ட போது, தேசிய பாதுகாப்புச் சட்டம் பற்றி தெளிவாக வகுப்பெடுத்த பத்திரிக்கைகள், ஆதிக்க சாதி வன்முறைகள் நிகழுகின்ற சமயங்களில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றி ஒருமுறை கூட எழுதியதில்லை.

மறுபுறம், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தினாலே அனைத்தும் சரியாகிவிடும் என்று தலித் விடுதலை பேசும் பல்வேறு இயக்கங்களும் கிளிப்பிள்ளையைப்போலச் சொல்லி வருகின்றன.

ஆனால், அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது யார்? ஆதிக்க வெறி கொண்ட போலீசு, அதிகார வர்க்கத்தைக் கொண்ட அரசு எந்திரம் தானே! சாதிவெறிக் கொடுமைகளை வழக்காகவே பதிய மறுத்தல், அல்லது சமரசமாகப் போகச் சொல்லிக் கட்டைப்பஞ்சாயத்து செய்தல், பல இடங்களில் ஆதிக்கசாதியுடன் சேர்ந்து கொண்டு தாக்குதல் ஆகியவற்றை செய்வதுதான் போலீசுத்துறை. அப்படியே வழக்கு பதிவானாலும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை எனத் தீர்ப்பெழுதுவதுதான் நீதித்துறை. சென்னகரம்பட்டி அம்மாசி படுகொலை, மேலவளவு முருகேசன் படுகொலை, தாழ்த்தப்பட்டோரின் வாய்களில் மலத்தைத் திணித்த திண்ணியம் வழக்கு ஆகிய அனைத்து வழக்குகளிலும் வன்கொடுமை நிரூபிக்கப்படவில்லை என்றுதானே சாதிக்கறை படிந்த நீதித்துறை தீர்ப்பு எழுதியது?. இவற்றை எல்லாம் தாண்டி தப்பித்தவறி தாழ்த்தப்பட்டோருக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலும், அதை நடைமுறைப்படுத்த மறுக்கிறது, சாதிவெறி பிடித்த அதிகார வர்க்கம். இந்தக் கேடுகெட்ட அரசியலமைப்பின் மூலம் சாதி வெறியை ஒழிக்க முடியாது; மாறாக, சாதிவெறி பிடித்த இன்றைய அரசியலமைப்பு முறையைத் தகர்ப்பதன் மூலமே விடுதலையை வென்றெடுக்க முடியும் எனும் திசையை நோக்கி இனி தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும், புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் பயணிக்க வேண்டும்.

• கவி

# மே. வங்கம்: போலி கம்யூனிச ஆட்சிக்கெதிராக பழங்குடியின மக்களின் பேரெழுச்சி!

**சந்தால் பழங்குடியின மக்கள் நடத்தி வரும் போராட்டம், சமூக பாசிஸ்டுகளாக சி.பி.எம். சீரழிந்து போயிருப்பதை அம்பலப்படுத்துகிறது.**

பேரெழுச்சி! போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்க மாநிலம் இது வரை கண்டிராத பழங்குடியின மக்களின் ஆயுதம் தாங்கிய பேரெழுச்சி! கடந்த நவம்பர் முதல் வாரத்தில் வெடித்தெழுந்த இப்பேரெழுச்சி மித்னாபூர், புருலியா, பங்குரா மாவட்டங்களில் புயல் போலச் சுழன்று வீசியது. ''ஐயோ! மாவோயிஸ்டு பயங்கரவாதிகள்! சிங்கூர்-நந்திகிராமத்தைத் தொடர்ந்து இங்கேயும் ஊடுருவி விட்டார்கள்'' என்று அலறியது, மே.வங்க போலி கம்யூனிச அரசு. ''மூன்று மாவட்டங்களில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்து விட்டது'' என்று புலம்பின முதலாளித்துவ நாளேடுகள். ''இம்மாவட்டங்களில் எங்கள் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பில்லை'' என்றுபீதியில் கூச்சலிட்டனர் அரசு அதிகாரிகளும், போலீசாரும்.

வில்-அம்பு, கோடாரி, அரிவாள் முதலான மரபு வழி ஆயுதங்களுடன் பல்லாயிரக்கணக்கான சந்தால் பழங்குடியின மக்கள், இம்மாவட்டங்களிலுள்ள போலீசு நிலையங்களை முற்றுகையிட்டு, போலீசாரை உள்ளே வைத்துப் பூட்டினர். இம்மாவட்டங்களை இணைக்கும் அனைத்து நெடுஞ்சாலைகளையும் அகலமான குழிகளை வெட்டித் துண்டித்தனர். சாலையில் மரங்களை வெட்டிப் போட்டு தடையரண்களை உருவாக்கினர்.

''கடந்த பத்தாண்டுகளாக மாவோயிஸ்டு தீவிரவாதிகள் என்று பொய்க் குற்றம் சாட்டி வதைத்துச் சிறையிடப்பட்டுள்ள அனைத்து அப்பாவி பழங்குடியினரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்; கடந்த நவம்பர் முதல் வாரத்தில் லால்கார் பகுதியில்

**மரங்களை வெட்டி ஆயுதமேந்தி சாலை மறியல்: போலி கம்யூனிச கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக சந்தால் பழங்குடியின மக்களின் போர்க்கோலம்.**



www.padippakam.com



சந்தால் பழங்குடியினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் உள்ளிட்டு, மேற்கு வங்க அரசின் கொள்கைகளைக் கண்டித்து இந்திய சோசலிஸ்ட் ஐக்கிய மையக் கட்சியினர் கொல்கத்தாவில் நடத்திய பேரணி.

வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டுப் பழங்குடியினரை மிருகத்தனமாக வதைத்த குற்றத்துக்காக, போலீசு உயரதிகாரி ராஜேஷ்சிங், சந்தால் பழங்குடியின மக்கள் முன்பு தோப்புக்கரணம் போட்டுப் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்; தாக்குதலில் ஈடுபட்ட லால்கார் போலீசார் மக்கள் முன் மூக்கு தரையில் படும்படி கீழே படுத்து மன்னிப்பு கேட்க வேண்டும்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்குவதோடு, புறக்கணிக்கப்பட்ட இம்மாவட்டங்களில் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்'' என்ற கோரிக்கைகளுடன் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

வறுமை-வேலையின்மை, அரசின் புறக்கணிப்பு, போலீசின் அடக்குமுறை முதலானவற்றால் ஏற்கெனவே குமுறிக் கொண்டிருந்த சந்தால் பழங்குடியின மக்களை, நவம்பர் 3-ஆம் தேதியிலிருந்து கட்டவிழ்த்து விடப்பட்ட போலீசு அடக்குமுறையானது பேரெழுச்சிக்குத் தள்ளியது. சந்தால் பழங்குடியின மக்கள் மீதான போலீசு வெறியாட்டத்துக்குக் காரணம் என்ன?

மே.வங்கத்தின் மித்னாபூர், புருலியா, பங்குரா மாவட்டங்கள், காடுகள் நிறைந்த பின்தங்கிய பகுதியாகும். சந்தால் பழங்குடியின மக்கள் நிறைந்துள்ள இம்மாவட்டங்களில் சமூக நலத் திட்டங்கள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு, சந்தால் பழங்குடியின மக்கள் வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இப்பகுதியில் இயங்கிவரும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் இம்மக்களை அமைப்பாக்கி, அரசியல்படுத்திப் போராட்டங்களைக் கட்டியமைத்து வந்தனர். நக்சல்பாரி தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில், மே.வங்க போலீசு பயங்கரவாதிகள் இப்பகுதியில் அப்பாவி மக்கள் மீது வன்முறை-வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விடுவதும், மாவோயிஸ்டு தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி அப்பாவிகளைக் கைது செய்து வதைப்பதும் கேள்விமுறையின்றித் தொடர்ந்து கொண்டிருந்தது.

இச்சூழலில், உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளுக்கு விசுவாச சேவை செய்துவரும் போலி கம்யூனிச ஆட்சியாளர்கள், இப்பகுதியில் மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவக் கிளம்பினார்கள். ஏற்கெனவே சிங்கூர்-நந்திகிராமத்தில் சி.பொ.மண்டலத்தை நிறுவி, மக்களின் எதிர்ப்பை மிருகத்தனமாக ஒடுக்கி, நாடெங்கும் அம்பலப்பட்டுப் போன சி.பி.எம்.ஆட்சியாளர்கள். இம்முறை இத்திட்டம் பற்றி மக்களுக்குத் தெரிவிக்காமல், சதிகார முறையில் நிறைவேற்றிடத் துடித்தனர்.

இருப்பினும், ஜிண்டால் எனும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனத்தின் எஃகு ஆலைக்காக சந்தால் பழங்குடியினர் வாழும் காட்டுப் பகுதிகளை அழித்து 5,000 ஏக்கரில் சி.பொ.மண்டலம் நிறுவப்படவுள்ள உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கியதும், மாவோயிஸ்டுகள் இச்சிறப்புபொருளாதார மண்டலத்துக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டுப் பழங்குடியின மக்களைப் போராட்டத்துக்கு அணிதிரட்டி வந்தனர். கடந்த நவம்பர் 2-ஆம் நாளன்று அவசர அவசரமாக இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அறிவிக்கப்பட்டு, மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா மற்றும் மைய அரசின் அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் ஆகியோர் விழாவில் பங்கேற்று விட்டுத் திரும்பும் வழியில், மாவோயிஸ்டுகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தி எச்சரித்தனர். இத் தாக்குதலில் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டதைத் தவிர, வேறு எவருக்கும் பாதிப்பில்லை.

இருப்பினும், மறுநாளே மாவோயிஸ்டு பயங்கரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டை என்ற பெயரில் பழங்குடியின மக்கள் மீது மே.வங்க போலீசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. பழங்குடியின மக்களின் அற்ப உடைமைகளையும், சைக்கிள்-பாத்திரங்கள் போன்றவற்றைக் கூட விட்டுவிடாமல் நாசமாக்கிய போலீசார், மூன்று பள்ளிக்கூட மாணவர்களை அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகப் பொய் வழக்கு போட்டு கைது செய்து வதைத்தனர். சீதாமணி முர்மு என்ற பெண்ணை துப்பாக்கிக் கட்டையால் போலீசார் தாக்கியதில் அவரது கண்களில் இரத்தம் பீறிட்டு, இன்று அவர் பார்வையிழந்துள்ளார். பல கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. பலருக்கு எலும்பு முறிந்து மருத்துவமனைகளில் கிடத்தப்பட்டுள்ளனர். ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர், வியாபாரி, கண்பார்வையற்ற முதியவர் உள்ளிட்டு நூற்றுக்கும் மேற்பட்டோர் தீவிரவாதிகள் என்று கைது செய்யப்பட்டுக் கொடூரமாக வதைக்கப்பட்டனர். உள்ளூர் போலீசும் ரிசர்வ் போலீசும் சேர்ந்துகொண்டு விடியவிடிய 3 நாட்களுக்கு நடத்திய இத்தாக்குதலால் மித்னாபூர் மாவட்டமே பீதியில் உறைந்து போனது.

போலீசு அடக்குமுறையால் துவண்டுபோன சந்தால் பழங்குடியின மக்களிடம் நம்பிக்கையூட்டி அணிதிரட்டிய மாவோயிஸ்டுகள், லால்கார்-ஜார்கிராம் பகுதியில் 600-க்கும் மேற்பட்ட கிராமத் தலைவர்களைக் கூட்டி விவாதித்து, அதனடிப்படையில் 10 அம்சக் கோரிக்கைகளுடன் போராட்டத்தைத் தொடர முடிவு செய்தனர். மித்னாபூர், புருலியா, பங்குரா மாவட்டங்களில்

www.padippakam.com

இதுபோன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டு, மக்கள் கமிட்டிகள் உருவாக்கப்பட்டு அவற்றை ஒருங்கிணைக்கும் ''போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டி'' நிறுவப்பட்டது. அதன் வழி காட்டுதலின்படி, நவம்பர் 6-ஆம் தேதி இரவு 5,000 பேருக்கு மேலாக வில்-அம்பு, கோடரி, அரிவாள்களு டன் அணிதிரண்ட பழங்குடியின மக்கள் லால்கார் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுச் சூறையாடி, போலீசாரை நையப்புடைத்துக் கொட்டடியில் தள்ளிப் பூட்டினர். தொலைபேசி-மின்சார இணைப்புகளைத் துண்டித்தனர்.

மறுநாள், நவம்பர்-7; அந்நவம்பர் புரட்சி நாளில் மேற்கு மித்னாபூர் மாவட்டமெங்கும் ஆயுதமேந்திப் பல்லாயிரக்கணக்கில் திரண்டு பேரணி நடத்திய பழங்குடியின மக்கள், அம்மாவட்டத்தை இணைக்கும் நெடுஞ்சாலைகளில் அகலமான குழிகள் வெட்டி முற்றாகத் துண்டித்தனர். சாலைகளில் மரங்களை வெட்டிப்போட்டுத் தடையரண்களை ஏற்படுத்தினர். சமரசம் பேச வந்த கீழமை நீதிமன்ற துணை மாஜிஸ்திரேட் பழங்குடியின மக்களால் ''கெரோ'' செய்யப்பட்டதால், அவரும் போலீசாரும் வாகனங்களை விட்டுத் தப்பியோடினர்.

அடுத்த இரு நாட்களில் மித்னாபூர் மாவட்டம் மட்டுமின்றி சந்தால் பழங்குடியினர் நிறைந்த புருலியா, பங்குரா மாவட்டங்களிலும் வில்-அம்பு, கோடாரி, அரிவாள், துடப்பக்கட்டையுடன் போலீசு அடக்குமுறைக்கு எதிராகவும், சி.பொ.மண்டலத்துக்கு எதிராகவும் பல்லாயிரக்கணக்கானோரின் எழுச்சிமிகு பேரணிகள் தொடர்ந்தன. இம்மாவட்டங்களிலும் தேசிய நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டு, போலீசு நிலையங்களும் அரசு அலுவலகங்களும் முற்றுகையிடப்பட்டன. போலீசாரும் அரசு உயர் அதிகளாரிகளும் இம்மாவட்டங்களை விட்டுத் தப்பியோடினர். நவம்பர் 10-ஆம் தேதியன்று பல்வேறு பழங்குடியின அமைப்புகள் ஒன்றிணைந்து தாஹிஜூரி எனுமிடத்தில் சாலை மறியல் நடத்தியபோது, தடியடி நடத்திக் கலைக்க முயன்ற போலீசாரை 5000-க்கும் மேல் திரண்ட பழங்குடியின மக்கள் ஏறத்தாழ 5 கி.மீ.தொலைவுக்குத் துரத்தி துரத்தி வந்து விரட்டியடித்தனர். இம்மூன்று மாவட்டங்களில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்து, பழங்குடியின மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளும் 'விடுதலைப் பிரதேசங்களாக'க் காட்சியளித்தன.

அரண்டு போன போலிக் கம்யூனிச ஆட்சியாளர்கள் சர்வகட்சி கூட்டத்தைக் கூட்டி, பழங்குடியின மக்களிடம் சமரசம் பேச வருமாறு அழைத்தனர். ஆனால், எல்லா ஓட்டுக்கட்சிகளும் தங்களுக்குப் பழங்குடியின மக்களிடம் செல்வாக்கு இல்லை என்று கூறி மறுத்துவிட்டன. மித்னாபூர் மாவட்டம், பின்பூர் தொகுதியில் பழங்குடியின மக்கள் ஆதரவோடு வெற்றி பெற்ற ஜார்கந்து கட்சி (நரேன்பிரிவு) எம்.எல்.ஏ.கூடச் சமரசப் பேச்சுவார்த்தைக்குத் தூது செல்ல மறுத்துவிட்டார். இதற்கிடையே, போலீசு அடக்குமுறையைக் கண்டித்து, திரிணாமூல் காங்கிரசு கட்சியினர் மித்னாபூர் மாவட்ட நீதிமன்றத்தில் தர்ணா போராட்டம் நடத்தினர். இந்திய சோசலிஸ்ட் ஐக்கிய மையக் கட்சியினர் ஜார்கிராம் பகுதியில் கடையடைப்புப் போராட்டத்தையும், பேரணி-மறியல் போராட்டங்களையும் நடத்தினர். ஜார்கந்த் திசாம் கட்சி மூன்று மாவட்டங்களில் வெற்றிகரமாக கடையடைப்புப் போராட்டத்தை நடத்தியது.

மே.வங்க 'இடது சாரி' கூட்டணியிலுள்ள வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான நந்தகோபால் பட்டாச்சார்யா, ''அரசு அடக்குமுறையின் எதிர்விளைவுதான் சந்தால் பழங்குடியனரின் எழுச்சி'' என்று 'இடதுசாரி' அரசைச் சாடியுள்ளார். கூட்டணியிலுள்ள பார்வர்டு பிளாக் கட்சியின் செயலரான அசோக் கோஷ், ''பழங்குடியின மக்களை நீண்டகாலமாகப் புறக்கணித்து ஒடுக்கியதால் ஏற்பட்ட கோபத்தின் வெளிப்பாடுதான் இக்கிளர்ச்சி. இதற்கு மாவோயிஸ்டுகள் மீது பழிபோடுவதில் பயனில்லை'' என்று சி.பி.எம். ஆட்சியாளர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

மறுபுறம், நந்திகிராம வழியில் மோட்டார் சைக்கிள் ரௌடிப் படைகளைக் கொண்டு தாக்க சி.பி.எம்.குண்டர்களை ஏற்பாடு செய்தனர். சி.பி.எம்.கட்சியின் அமைச்சர் சுஷந்தா கோஷ், மாவட்டச் செலாளர் தீபக் சர்க்கார் ஆகியோர் தலைமையில் வெடிகுண்டுகளுடன் குண்டர் படை கட்டியமைக்கப்பட்ட போதிலும், பழங்குடியின மக்களின் கோபாவேசத்தைக் கண்டு அஞ்சி, இத்தாக்குதல் திட்டத்தை சி.பி.எம்.கட்சி நிறுத்தி வைத்துவிட்டது.

வேறுவழியின்றி பழங்குடியின மக்களின் போராட்டத்தை ஒருங்கிணைக்கும் ''போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்களை கமிட்டி''யிடம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த விழைவதாக அரசு அதிகாரிகள் அறிவித்தனர். மக்கள் கமிட்டியினரோ, இப்பேச்சுவார்த்தை பல்லாயிரக்கணக்கான பழங்குடியின மக்கள் முன் பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும்; அதற்கு முன் போலீசு அதிகாரிகள் மக்களிடம் தோப்புக்கரணம் போட்டு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர். அதிகார வர்க்கமோ தங்களை ''கெரோ'' செய்து அவமானப்படுத்தி விடுவார்கள் என்று அஞ்சி , இதற்கு உடன்பட மறுத்தது.

இந்த இழுபறியோடு போராட்டத்தை மேலும் நீட்டித்தால், கூலி-ஏழைகளான பழங்குடியினருக்கு மண்ணெண்ணெய் முதலான அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் இடர்ப்பாடுகள் பெருகும் என்பதால் போராட்டத்தைத் தற்காலிகமாக விலக்கிக் கொண்டு, போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தைச் சமூகப் புறக்கணிப்பு செய்யுமாறு பழங்குடியினருக்கு மக்கள் கமிட்டி அறைகூவல் விடுத்துள்ளது. இதனால் போராட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதாகவோ, அதிகார வர்க்க-போலீசு ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்பட்டு விட்டதாகவோ கருத முடியாது. மக்கள் கமிட்டியின் சமூகப் புறக்கணிப்பு அறிவிப்பினால், இனி தவித்த வாய்க்கு தண்ணீர் கூட பழங்குடியின மக்கள் கொடுக்க மாட்டார்கள் என்று உள்ளூர அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறது அதிகார வர்க்கமும் போலீசும். இதுவே பழங்குடியின மக்களின் பேரெழுச்சிக்குக் கிடைத்த வெற்றி.

நேற்று, சிங்கூர்-நந்திகிராமத்தில் சி.பி.எம். குண்டர்களையும் போலீசையும் கொண்டு வெறியாட்டம். இன்று, மித்னாபுரில் அதிகார வர்க்கத்தையும் போலீசையும் கொண்டு பாசிச பயங்கரவாதம். மே.வங்கத்தை ஆளும் போலி கம்யூனிச சி.பி.எம். கட்சியினர் உழைக்கும் மக்களின் எதிரிகளாக, பாசிஸ்டுகளாகச் சீரழிந்து விட்டதற்கு அண்மைக் கால நிரூபணங்களே இவை. இப்போலி கம்யூனிஸ்டுகளை நேற்றுவரை நம்பிய மே.வங்க உழைக்கும் மக்களே. அவர்களின் பாசிச ஒடுக்குமுறைக்கும் முதலாளித்துவ சேவைக்கும் எதிராகப் பேரெழுச்சியில் இறங்கியுள்ள நிலையில், புரட்சியை நேசிக்கும் சி.பி.எம். அணிகள் இனியும் இத்துரோகக் கட்சியில் நீடிக்க அடிப்படை ஏதாவது இருக்கிறதா?

● மனோகரன்


www.padippakam.com

# வர்க்க உணர்வை வளர்த்தெடுப்போம்! முதலாளிகளின் கருணையைப் புறக்கணிப்போம்!

புதுச்சேரி மாநிலம் வடமங்கலம் இந்துஸ்தான் யுனிலீவர் நிறுவனம், தமது தொழிலாளர்களின் குடும்பத்தினரை அழைத்து ஒருவேளை உணவும் பரிசுப் பொருளும் வழங்கும் 'குடும்பத் தினவிழா(!)'வை கடந்த 16.11.08 அன்று நடத்தியது.

தொழிலாளர்களை கொத்தடிமையாக நடத்தி வருவது மட்டுமல்ல, தொழிற்சங்கம் அமைத்தக் 'குற்றத்திற்காக'வே தொழிலாளிகள் பலரை பழிவாங்கி வருகிற நிறுவனத்திற்கு 'குடும்ப விழா' நடத்த என்ன அருகதை இருக்கிறது?

இதே நிறுவனத்தால் பழி வாங்கப்பட்ட பாண்ட்ஸ் ஷூ டிவிசன், எச்.யு.எல். டீ டிவிசன், மற்றும் கோத்ரெஜ் சாரலி தொழிலாளர்களிடம், இச்'சன்மானத்தை'ப் புறக்கணித்து, தன்மானத்தோடு தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்டியமைக்க அறைகூவி, ''ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை'' அறிவித்தது, பு.ஜ.தொ.மு. இணைப்புச் சங்கமான இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன்.



நிர்வாகத்தின் தடையுத்தரவையும் போலீசின் மிரட்டலையும் முறியடித்து, 'குடும்ப தினவிழா' நடந்த மண்டபத்தின் அருகாமையிலேயே அடையாள உண்ணாவிரதத்தை அறிவித்தபடியே நடத்தி, நிறுவனத்தின் முகத்தில் கரியைப் பூசியது, இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன்.

வழக்கத்திற்கு மாறாக, இம்முறை கூடுதல் பரிசுப் பொருள்களை நிர்வாகம் வழங்கியிருப்பதும்; அப்பரிசுப் பொருளை பெற்றுக்கொண்டு திரும்பிய தொழிலாளர்கள் இப்போராட்டப் பந்தலைக் கடந்தபோது குற்றவுணர்வில் முகத்தை திருப்பிக் கொண்டு சென்றதும் இப்போராட்டத்திற்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி என்றால், அது மிகையல்ல!

— இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன், வடமங்கலம்.

# "அரசு நிலத்தை ஆக்கிரமித்த கல்வி வியாபாரியைக் கைது செய்!"

திருச்சி உறையூர் சோழராஜபுரம் பகுதி மக்கள் பொதுப்பயன்பாட்டிற்காகப் பயன்படுத்திவரும் வருவாய்த் துறைக்குச் சொந்தமான அரசு நிலத்தை, அதிகாரிகளின் ஒத்துழைப்போடு வளைத்துப் போட்டு, தனலெட்சுமி சீனிவாசன் மெட்ரிக் மேநிலைப்பள்ளி என்ற பெயரில் புதிய 'கடை' திறந்துள்ளான், முன்னாள் சாராய வியாபாரியும் இன்னாள் கல்வி வியாபாரியுமான தனலெட்சுமி சீனிவாசன்.

இந்நிலையில், இப்பகுதியில் செயல்பட்டுவரும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தை பகுதி மக்கள் அணுகியதையடுத்து, அவர்களை ஒருங்கிணைத்து ''சோழராஜபுரம் மக்கள் பாதுகாப்பு கமிட்டி'' என்றொரு போராட்டக் கமிட்டி உருவாக்கப்பட்டது. இப்பிரச்சினையையொட்டி 6 மாதங்களாக தொடர்பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட இவ்வமைப்பினர், கடந்த 01.06.08 அன்று பெருந்திரளாக பகுதி மக்களை அணிதிரட்டி மாபெரும் முற்றுகைப் போராட்டத்தை நடத்தி, அப்பள்ளி ஆக்கிரமித்த நிலத்தை முள்வேலியிட்டு மீட்டனர்.

நிலைமை விபரீதமாவதைக் கண்டு பதறிப்போன நிர்வாகமும் உடந்தையாகச் செயல்பட்ட அதிகாரிகளும் ஓடோடிவந்து 'பேச்சுவார்த்தை' நாடகத்தை அரங்கேற்றினர். 01.06.08 அன்று நடந்த இப்பேச்சுவார்த்தையில் பொதுமக்கள் பயன்படுத்திவரும் புறம்போக்கு நிலத்தை பள்ளி நிர்வாகம் பயன்படுத்தக்கூடாது; மூன்று நாட்களுக்குள் மாற்று வழியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு கட்டுப்பட்டு கையெழுத்திட்டது பள்ளி நிர்வாகம்.

ஆனால், பள்ளி நிர்வாகம் இவ்வொப்பந்தத்தின்படி நடக்க இதுநாள்வரை மறுத்து வருகிறது. எனவே போராட்டக் கமிட்டி, இவ்வொப்பந்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி 24.11.2008 அன்று உறையூர் - சாலை ரோடு அருகே ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக அறிவித்தது.

கடந்த 6 மாத காலமாக செயலுக்கே வராத(!) பேச்சுவார்த்தை முடிவைக் காரணம் காட்டி, கடைசி நேரத்தில் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதியை ரத்து செய்தது, போலீசு.

பொது நிலத்தை மீட்பதற்காக ம.க.இ.க.வுடன் இணைந்து திருச்சி-உறையூர் சோழராஜபுரம் பகுதி மக்கள் பள்ளியின் முன் நடத்திய போராட்டம்.



அரசு, அதிகார வர்க்கத்தின் வர்க்கப் பாசத்தை நடைமுறையில் உணர்ந்து கொண்டுவிட்ட பகுதி மக்கள், அக்கல்விக் கொள்ளையனிடமிருந்து பொது நிலத்தை மீட்கும் அடுத்த கட்டப் போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றனர்.

— ம.க.இ.க., திருச்சி

www.padippakam.com

# இலங்கைக்கு ஈழம்! இந்தியாவுக்கு காசுமீர்!

***''காஷ்மீர் எங்கள் நாடு. பாதியை இந்தியாவும், பாதியை பாகிஸ்தானும் பிடுங்கிக் கொண்டன. எங்களுக் குச்சுதந்திரம்தான் தேவை.''***

— இரண்டு மாதங்களுக்கு முன்பு, காஷ்மீர் பள்ளத்தாக் கில் இந்திய அரசுக்கு எதிரான போராட்டம் மீண்டும் தீவிர மாக நடைபெறத் தொடங்கியபொழுது, ஒரு காஷ்மீர் முசுலீம் முதியவர் தன்னிடம் இப்படிக் கூறியதாக எழுத்தாளர் அருந்த திராய், ''காஷ்மீருக்கும் மக்களுக்கும் விடுதலை'' என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழ விடுதலையை ஆதரித்துக் கருத்துச் சொல்லியிருக்கும் தமிழக மக்களில் கூட பெரும்பாலானவர்கள் அந்த காஷ்மீர் முசுலீம் முதியவரின் கருத்தை ஆதரிப்பாளர்களா என உறுதி யாகச் சொல்ல முடியாது. காஷ்மீருக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கருத்தை ஆதரிப்பது ஒருபுறமிருக்கட்டும்; ஈழத்தில் உடனடியாக சிங்கள அரசு போர் நிறுத்தத்தை அறி விக்க வேண்டும் என ஒருமித்த குரலில் கூறும் தமிழகம்; அதற்காகச் சட்டத்திற்கு உட்பட்ட வழிகளில் போராட்டங் களை நடத்தி வரும் தமிழக மக்கள், இந்திய அரசு காஷ்மீரில் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் எனக் கோரச் சொன் னால், அதிர்ந்துதான் போவார்கள்.

ஈழ மண்ணில் சிங்கள இராணுவம் குவிக்கப்பட்டிருப்பது போல, காஷ்மீரில் இந்திய இராணுவம்-ஏறத்தாழ அதை இந்து இராணுவம் என்று கூடச் சொல்லலாம்- குவிக்கப்பட் டுள்ளது. காஷ்மீரின் மொத்த மக்கட் தொகை ஒரு கோடி; அம்மாநிலத்தின் பள்ளத்தாக்கு பகுதியில் மட்டும் இந்திய இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளைச் சேர்ந்த ஐந்து இலட்சம் துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளன. தீவரவாதத் துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்க இராணுவம் ஈராக்கை ஆக்கிரமித்திருப்பது போல, எல்லை தாண்டி வரும் தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் இந்திய இரா ணுவம் காஷ்மீரை ஆக்கிரமித்திருக்கிறது.

சிங்கள இனவெறி பாசிஸ்டான மகிந்த ராஜபக்சே, ஈழத்தில் நடைபெறும் போரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராக மட்டும் சித்தரிப்பதை, அப்போர் ஈழத் தமிழ் மக்களைக் குறிவைக்க வில்லை எனக் கூறுவதைத் தமிழகம் நம்ப மறுக்கிறது. அதுபோலத்தான், காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத் தின், துணை இராணுவப் படைகளின் கைகளில் உள்ள துப்பாக்கிகள் 'முசுலீம் பயங்கரவாதிகளை' மட்டும் சுட்டுப் பொசுக்கவில்லை; நிராயுதபாணிகளான காஷ்மீர் மக்களை-ஆண், பெண், முதிய வர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றிச் சுட்டுப் பொசுக்கி வருகிறது; கையெறி குண்டுகளை வீசி அவர்களின் உடைமைகளை அழித்து வருகி றது.

ஈழத்தைப் போல, இந்தியாவின் காஷ்மீர் போரில் பீரங்கி களும், போர் விமானங்களும் பயன்படுத்தப்படாமல் இருக் கலாம். ஆனால், ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் அடிமைப் படுத்தப்பட்ட மக்களை எப்படி அடக்கி ஒடுக்குமோ, அவமா னப்படுத்துமோ, அதுபோலத்தான் இந்திய இராணுவம் கடந்த பதினேழு ஆண்டுகளாக காஷ்மீரில், 'தன் சொந்த நாட்டு மக்களிடம்' நடந்து வருகிறது. ஊரடங்கு உத்தரவு, குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தாக்குவது; சோத னைச் சாவடிகள், தேடுதல் வேட்டை, பாலியல் வன்புணர்ச்சி, ஆட்களைக் கடத்துவது, சட்டவிரோதப் படுகொலை, மிரட் டிப் பணம் பறிப்பது, போராளிக் குழுக்களை உடைத்து கைக் கூலி அமைப்புகளை உருவாக்குவது என ஈழத்தில் காணப் படும் அவலங்கள் அனைத்தையும் காஷ்மீரிலும் காண முடியும்.

ஈழத்தமிழர்கள் மீது ஏவிவிடப்படும் மனிதத் தன்மை யற்ற தாக்குதல்களுக்காக எந்தவொரு சிங்களச் சிப்பாயும் தண்டிக்கப்படுவதில்லை. அது போலவே, காஷ்மீர், மணிப் பூர், நாகலாந்து, திரிபுரா மாநிலங்களில் நடந்து வரும் சுயநிர் ணய உரிமைப் போராட்டங்களை ஒடுக்க இறக்கிவிடப்பட் டுள்ள இந்திய இராணுவம் நடத்தும் அத்துமீறல்களுக்காக, அவர்களைச் சட்டப்படி தண்டிப்பதில் இருந்து பாதுகாக்க, ''ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம்'' என்ற பெயரில் ஒரு தனிச் சட்டமே பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. தடா வும், பொடாவும் எப்படி ஒரு போலீசுக்காரனுக்குச் சர்வாதி கார உரிமைகளை வழங்கியதோ, அதுபோல இந்தச் சட்டம் மறைமுகமான இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு வழி கோலு கிறது.


**காசுமீரில் ''காணாமல் போன'' 10,000 பேரைக் கண்டுபிடிக்க வலியுறுத்தி, ''காணாமல் போன'' இளைஞர்களின் புகைப்படங்களை ஏந்திக் கொண்டு சீறிநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்கத்தைச் சேர்ந்த தாய்மார்கள்.**





படிப்பகம்

ஈழத்தமிழ் மக்கள் இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழ், அரசியல், பொருளாதார, கலாச்சார தளங்களில் உரிமையற்றவர்களாக, இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதால்தான், இந்த இன ஒதுக்கலைச் சட்டப்படியான வழியில் தீர்க்க முடியாமல் போனதால்தான், ஈழத் தமிழர்கள் தங்களின் சுய நிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். காஷ்மீர், அசாம், மணிப்பூர், திரிபுரா மாநிலங்களில் ஆயுதப் போராட்டம் நடைபெறுவதற்கு - அரசின் மொழியில் சொன்னால் தீவிரவாதம் - அம்மக்கள் இனரீதியாக ஒடுக்கப்படுவதும், ஒதுக்கப்படுவதும்தான் காரணம்.




மணிப்பூரைச் சேர்ந்த மனோரமா என்ற பெண்ணைக் கடத்திக் கொண்டு போய், பாலியல் பலாத்காரப்படுத்திச் சுட்டுக் கொன்ற அசாம் துப்பாக்கிப் படைப் பிரிவினரைக் கண்டித்து, ''இந்திய இராணுவமே எங்களையும் பாலியல் பலாத்காரப்படுத்து'' என்ற பதாகையை ஏந்திக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய மணிப்பூர் தாய்மார்கள். (கோப்புப் படம்).

இன்னும் சொல்லப்போனால், இந்தியா ஒரு தேசம் அல்ல; பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடம். தமிழர், மலையாளிகள், கன்னடர், தெலுங்கர், மராட்டியர்கள் போன்ற தேசிய இனங்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ''உரிமைகளை'' அனுபவித்துக்கொண்டு, ''தேசிய ஒருமைப்பாட்டின்'' கீழ் ''அமைதியாக'' வாழும் பொழுது, காஷ்மீர் மற்றும் நாகலாந்து, அசாம், மணிப்பூர் உள்ளிட்ட வடகிழக்கு இந்திய மாநிலங்களில் மட்டும் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் - அரசின் மொழியின் சொன்னால் பிரிவினை வாதம் - ஏன் நடக்கிறது என்ற கேள்வி எழலாம். அம்மக்கள், தங்களின் இன உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டு, சொரணையற்று வாழ விரும்பவில்லை என்பதுதான் இதற்குப் பதில்.

•••

**பி**ரிட்டிஷ் ஆட்சியின் கீழிலிருந்த பகுதிகளையும், குறுநில மன்னர்களின் கீழிலிருந்த பகுதிகளையும் இணைத்து 1947 ஆகஸ்டு 15-இல் 'சுதந்திர' இந்தியா உருவாக்கப்பட்ட பொழுது, அன்று ஒன்றாக இருந்த காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகவோ, பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவோ இருக்கவில்லை. அன்று, காஷ்மீர் தனி நாடாக, அரிசிங் என்ற இந்து மன்னனின் ஆட்சியின் கீழிலிருந்தது; மன்னராட்சியைத் தூக்கியெறிவதற்கான போராட்டங்கள் அப்பொழுது காஷ்மீரில் நடந்து வந்தன.

காஷ்மீரில் முசுலீம்கள் பெரும்பான்மையாக வாழ்வதையே காரணமாக வைத்து, பாகிஸ்தான் அந்நாட்டைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளுவதற்காக, வடக்குப் பாகிஸ்தானில் வாழும் பழங்குடியினருக்கு இராணுவப் பயிற்சி அளித்து, அவர்களை காஷ்மீருக்குள் அனுப்பியது. இந்த ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்றுவதாக வாக்குறுதி அளித்து, மன்னர் அரிசிங்குடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு ஒன்றுபட்டிருந்த காஷ்மீரை தன்னுடன் இணைத்துக் கொண்டது இந்தியா. இதனையடுத்து நடந்த இந்தியா-பாக். போரின் முடிவில் காஷ்மீர் துண்டாடப்பட்டு, இந்தியா-பாகிஸ்தான் இடையே பங்கு போட்டுக்கொள்ளப்பட்டது.

இப்போரின் முடிவில், ''காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்திருப்பதா, பாகிஸ்தானுடன் இணைந்திருப்பதா, இல்லை, தனி நாடாகப் போவதா?'' என்பது குறித்து காஷ்மீர் மக்களிடம் ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஐ.நா. மன்றத்தில் இந்தியா வாக்குறுதி அளித்தது. ஐம்மு - காஷ்மீர் மக்களைத் திருப்திபடுத்துவதற்காக, அம்மாநிலத்திற்குத் தனிப்பட்ட உரிமைகள் அரசியல் சாசனச் சட்டம் 370 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டன.

இந்தியா பொது ஜன வாக்கெடுப்பு குறித்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு விட்டது என்பதோடு, அம்மாநில மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த தனி உரிமைகளையும் சிறுகச் சிறுகக் கழிப்பறை காகிதமாக்கிவிட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் ''தீவிரவாதம்'' வளர்ந்ததற்கு இந்தியாவின் இத்துரோகம் தான் அடிப்படையான காரணம். ''தீவிரவாதத்தை'' பாகிஸ்தான் தூண்டிவிடுவதற்கும் இதுதான் அடிப்படையாக இருக்கிறது. காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முத்தரப்பு பேச்சு வார்த்தை - இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் மக்களின் பிரதிநிதிகள் - நடத்த வேண்டும் என்ற காஷ்மீர் மக்களின் நியாயமான கோரிக்கையைக் கூட இந்தியா ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது.

> **ஊரடங்கு உத்தரவு, சோதனைச் சாவடிகள், தேடுதல் வேட்டை, பாலியல் வன்புணர்ச்சி, ஆட்களைக் கடத்துவது, சட்டவிரோதப் படுகொலை, மிரட்டிப் பணம் பறிப்பது, பொருளாதாரத் தடை - என ஈழத்தில் காணப்படும் அவலங்கள் அனைத்தையும் காஷ்மீரிலும் காண முடியும்.**

காஷ்மீர் முசுலீம்கள் அனைவரும் பாகிஸ்தானோடு இணைவதையே விரும்புகிறார்கள் என இந்தியாவின் பிற பகுதிகளில் செய்யப்பட்டு வரும் பிரச்சாரம்கூட அவதூறானதுதான். பிரிந்து கிடக்கும் காஷ்மீரை ஒன்றிணைத்து அதனை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரும் ஐம்மு-காஷ்மீர் விடு

www.padippakam.com

தலை முன்னணி போன்ற போராளி அமைப்புகள், இந்தியாவின் ஆக்கிரமிப்பின் கீழுள்ள ஜம்மு-காஷ்மீரில் மட்டுமல்ல, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் கீழுள்ள ஆசாத் காஷ்மீரிலும் இயங்கி வருகின்றன.

ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு எதிராக புத்த மதவெறி தூண்டிவிடப்படுவதைப் போன்று, காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு எதிராக இந்து மதவெறி தூண்டிவிடப்படுகிறது. ஜம்மு-காஷ்மீரில் சமீபத்தில் அமர்நாத் யாத்திரைக்கு நிலம் ஒதுக்கப்பட்டது தொடர்பாக நடந்த போராட்டங்களே இதற்கு சாட்சி. பாகிஸ்தானோ, இச்சுயநிர்ணய உரிமைப் போரை முசுலீம் மத அடிப்படைவாதத்துக்குள் மூழ்கடித்துவிட முயலுகிறது.

இந்தியாவில் இருப்பதைப் போன்று இலங்கையிலும் மாநில அரசை உருவாக்கினால், இதற்காக 1987-இல் உருவாக்கப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை அமல்படுத்தினால், ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற நரித்தனமான யோசனையை இந்திய ஆளும் கும்பல் முன்வைத்து வருகிறது. பஞ்சாயத்து போர்டு போன்ற மாநில அரசை உருவாக்குவது சுயநிர்ணய உரிமைக்கு ஈடாகாது என்பதும்; இம்மாநில உரிமை என்ற மோசடி இந்தியாவிலேயே தோல்வியடைந்துவிட்டது என்பதையும்தான் காஷ்மீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும் நடைபெற்று வரும் போராட்டங்கள் நிரூபிக்கின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த பிழைப்புவாதத் திராவிடக் கட்சிகள் ஈழத்தமிழர் போராட்டத்தை, ''சென்டிமெண்ட்'' அடிப்படையிலேயே ஆதரிக்கும்படி தமிழக மக்களைப் பழக்கப்படுத்தியுள்ளன. இக்குறுகிய இனவாதக் கண்ணோட்டத்திற்கு மாறாக, ''அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்'' என்ற பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தின் கீழ் ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரிக்க தமிழகம் முன்வர வேண்டும். அப்பொழுதுதான் தமிழக மக்களால், ஈழத் தமிழர் போராட்டத்தை மட்டுமின்றி, இந்தியாவில் நடைபெற்றுவரும் பல்வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிக்க முடியும்; அது மட்டுமின்றி, தமிழகத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராட முடியும்!

● திப்பு

# இந்தியாவின் நிலவுப் பயணம்: வல்லாதிக்கக் கனவுக்கு வரிப்பணம் சூறை!

உலகை வெல்லத் துடிக்கும் ''பேரரசுகள்'' தங்கள் கொடி பறக்க இந்தப் பூமிப் பந்தில் இடம் போதாமல் நிலவிலும், செவ்வாயிலும் துண்டு போட்டு இடம் பிடித்து வருகின்றன. இந்த வரிசையில் தன்னையும் ஒரு வல்லரசாகச் சேர்த்துக் கொள்ள இந்திய அரசு துடிக்கின்றது.

1957-ஆம் ஆண்டு சோவியத் யூனியன் ஸ்புட்னிக் செயற்கைக்கோளை முதன்முறையாக விண்ணில் செலுத்திய போது, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரஷ்யர்கள் தங்களைத் தாக்குவர் எனும் வதந்தி அமெரிக்க மக்களிடையே பரப்பப்பட்டது. சோவியத்துக்குத் தாம் சளைத்ததல்ல என்பதை நிரூபிக்க அமெரிக்காவும் ஒரு செயற்கைக்கோளை அனுப்பியது. இவ்விரு நாடுகளும் தங்களது வலிமையை நிரூபிக்க அடுத்தடுத்து செயற்கைக்கோள்களை அனுப்பி, விண்வெளி யுத்தம் நோக்கிச் சென்றன. பனிப்போர் காலகட்டத்தில் நடந்த இந்தப் போட்டி தற்போது மீண்டும் வேறுதளத்தில் தலைதூக்கியுள்ளது.

சீனா விண்வெளிக்கு மனிதனை அனுப்பியதுடன், 2007-இல் பயனற்ற செயற்கைக்கோள் ஒன்றை ஏவுகணையைச் செலுத்தித் தகர்த்தது. பல ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்கா இதனைச் செய்திருந்தாலும், அமெரிக்காவும் தனது பலத்தை நினைவூட்ட மீண்டும் ஒரு செயற்கைக்கோளைத் தனது ஏவுகணையைச் செலுத்தித் தகர்த்தது. ஜப்பானும் தன் பங்குக்கு அதிநவீன செயற்கைக்கோள் ஒன்றை விண்ணுக்கு அனுப்பியது.

தனது இராணுவ வலிமையை நிரூபித்துக் கொள்ள நினைக்கும் எல்லா நாடுகளும், அணுஆயுதச் சோதனைக்கு அடுத்து குறி வைத்திருப்பது விண்வெளி ஆராய்ச்சியைத்தான். இந்தியா ஏற்கெனவே இரண்டு முறை அணுகுண்டுச் சோதனை செய்துவிட்டதால், இனி அடுத்தது விண்வெளியில் சாதனை படைப்பதுதான் பாக்கி. விண்வெளிக்கு செயற்கைக்கோள் அனுப்புவதெல்லாம் இப்போது யார் வேண்டுமானாலும் செய்துவிடுவதால், ஏதாவது பெரிதாகச் செய்ய வேண்டும் என யோசித்தவர்களின் மூளையில் உதித்ததுதான் 'சந்திராயன்' எனும் நிலவுப் பயணத் திட்டம்.

தனது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் அணுகுண்டு வெடித்த பா.ஜ.க. அரசு, பதவிக்கால முடிவில் 'இந்தியா ஒளிர்கிறது' என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக நிலவுக்கு ஆளனுப்பும் 380 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்தை அறிவித்தது. இத்திட்டம் 2020-இல் நிலவுக்கு மனிதனை அனுப்புவதை இலக்காகக் கொண்டு, சந்திராயன் 1,2,3 என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாகத்தான் கடந்த நவம்பர் 14-ந் தேதி, நேரு பிறந்த நாளன்று, இந்தியா, சில ஆராய்ச்சிக் கருவிகளையும் இந்தியக் கொடியையும் நிலவில் இறக்கியது.

அக்டோபர் 22-ஆம் நாள் விண்கலம் புறப்பட்டதிலிருந்து நவம்பர் 14-ஆம் நாளன்று நிலவில் தரையிறங்கியது வரை அனைத்துச் செய்திகளையும், துல்லியமான அறிவியல் தகவல்களுடன், தலைப்புச் செய்தியாகப் பதிவு செய்த பத்திரிக்கைகள், இந்தியா ஒரு பேரரசாக மாறிவரும் செய்தியை மிகக் குதூகலத்துடன் பதிவு செய்தன.

நிலவில் தடம் பதித்த ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் வரிசையில் இந்தியா சேர்ந்துள்ளது என்றும், மற்ற நாடுகள் நிலவில் தடம் பதிப்பதை மட்டுமே நோக்கமாக வைத்திருக்கையில் நாம் தான் அதில் ஆராய்ச்சி செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறோம் என்றும், நிலவின் நிரந்தர இருட்டுப் பகுதியான துருவப் பகுதிகளில் தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யப்போகிறோம் என்றும் இந்திய விண்வெளி ஆய்வுக் கழக அறிவியலாளர்கள் கூறி வருகின்றனர்.




படிப்பகம்

www.padippakam.com

சந்திராயன் பற்றிப் பேட்டிய ளித்த முன்னாள் அரசவைக் கோமாளி கலாமோ 'எதிர்கா லத்தில் செவ்வாய்க்குச் செல்லும் திட்டத்திற்கு நிலவு சிறந்த தளமாக இருக்கும்' என்று கூறி இருக்கிறார். சந்திராயன் வெற்றி' பெற்றிருப் பதன் மூலம் உலக நாடுகளின் கூட்டு விண்வெளி ஆராய்ச்சியில் இடம் பெற இந்தியா தகுதி பெற் றுள்ளது என்றும், கோள்களுக்கி டையிலான தொடர்புகளை அதி கப்படுத்துவதற்கும், புதிய குடி யேற்றங்களை உருவாக்குவ தற்கும் இந்த வெற்றி பயன்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார். மேலும் இதன்மூலம் அங்குள்ள கனிமவளங்களை நாம் இங்கு கொண்டுவந்து பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறி யுள்ளார்.

விண்வெளியிலோ, நிலவிலோ யாரும் இடங்களைக் கைப்பற்றவோ, அங்குள்ள கனிமவளங்களைக் கொள் ளையடிக்கவோ கூடாது என்பதற்கான சர்வதேச விண்வெளி ஒப்பந்தமும் (1967), நிலவு ஒப்பந்தமும்(1979) அனைத்து நாடுகளுக்கிடையே நடைமுறையில் உள்ளது. அத னையெல்லாம் மறந்துவிட்டு, நிலவில் குடியேற்றத்தை உரு வாக்கிக் கனிம வளங்களைக் கொண்டு வரப்போவதாகக் கூறுகிறார் அப்துல் கலாம். இந்த நாட்டு மக்களுக்குச் சொந் தமான கனிமச் சுரங்கங்களை எல்லாம் அந்நியனுக்கு தாரை வார்த்துவிட்டு, நிலவிற்கு சென்று கனிமம் கொண்டு வருவோம் என்கிறார், இந்த அறிவாளி (!).

செவ்வாய்க் கோளுக்குச் செல்வதற்கான தளமாக நிலவைப் பயன்படுத்தும் திட்டம், அமெரிக்காவின் இரா ணுவதளமாக நிலவைப் பயன்ப டுத்தும் திட்டத்திற்குச் சிறிதும் குறைந்ததல்ல. பூமியில் நடத்த முடியாத படு பயங்கரமான ஆயுதச் சோதனைகளை நிலவில் நடத்திப் பார்த்துச் சோதிக்கவிருக்கும், அமெரிக் காவின் அடுத்த நிலவுப் பயணம் திட்டமிடப்பட்டுள்ள அதே 2020-ல் தான், இந்தி யாவும் தனது நிலவுப் பய ணத்தின் கடைசிக் கட்டத்தை செயல்ப டுத்தப் போகிறது என்பதனை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.



**விண்ணை நோக்கிச் சீறிப் பாயும் சந்திராயன் - 1 விண்கலம்: வறுமையின் நடுவே வாணவேடிக்கை.**

இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத் தலைவர் மாதவன் நாயர் சந்திராயனின் வெற்றி, விண்வெளி வர்த்தகத்தில் இந்தி யாவுக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்தியி ருப்பதாக கூறியுள்ளார். மற்ற நாட்டு செயற்கைக்கோள்களை நமது ஏவுதளத்திலிருந்து செலுத் துவதையும், விண்வெளிக்கு சுற் றுலாப் பயணிகளைக் கொண்டு செல்வதையும்தான் விண்வெளி வர்த்தகம் என்கின்றனர். இதுவரை நாட்டின் வளர்ச் சிக்காக, விண்வெளித் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் எனக் கூறிவந்த இவர்கள் இப்போது இந்தக் கண்டுபிடிப் புகள் வியாபாரமாக்கப்பட்டு புதிய சந்தையைத் தோற்றுவித் துள்ளதை ஒப்புக் கொள்கின் றனர். இந்திய விண்வெளி ஆய்வுக் கழகம், ஆன்ட்ரிக்ஸ் என்ற பெயரில் ஒரு வியாபார நிறுவனத்தை நடத்தி வருகிறது. அதன் வேலையே இது போன்ற விண்வெளிவர்த்தகத்தில் ஈடுபடுவ துதான். இதுவரை இத்தாலி, இஸ்ரேல் போன்ற நாடுகளின் செயற்கைக் கோள்கள் இந்திய ஏவுகலன்கள் மூலம் ஏவப்பட்டுள்ளன.

**வல்லரசுக் கனவின் மறுபக்கம்: படிக்கவும், விளையாடவும் வேண்டிய வயதில் சாக்கடைக் கழிவை அள்ளும் சிறுவன்.**



ஏற்கெனவே உள்ள இராணுவ பலத்தைக் கொண்டு தெற்கா சியப் பிராந்தியத்தின் வல்லரசா கவும் ஏகாதிபத்தியத்தின் நம் பத்தக்க அடியாளாகவும் இந்தியா மாறிவருகிறது.

மேலும், இந்திய ஆளும் வர்க்கத்தின் பெரும்பங்கா ளிகளான தரகு முதலாளிகளின் வணிக விரிவாக்கமும், இந்திய துணை வல்லரசுக்கனவும் வேறு வேறல்ல. இந்திய ஆளும் வர்க் கத்தின் விரிவாக்கக் கனவுக்கு இசைவாகக் கட்டமைக்கப்பட்டி ருக்கும் விண்வெளி வர்த்தகப் போட்டியில் ரிலையன்சு நிறு வனம் தன்னையும் ஒரு பங்கா ளியாக "சந்திராயன் 2"-இல் சேர்த்துக் கொள்ள இருக்கிறது. ஆளும் வர்க்கத்தின் பேராசை அத்துடன் முடிந்து விடுவ தில்லை. தன்னை மாபெரும் வல்லரசாகக் காட்டிக்கொள்ள அதற்கு அணுகுண்டும் தேவை. விண்வெளி வித்தைகளும் தேவை. ஆனால் அதற்காகக் கொட்டி வீணடிக்கப்படுவதோ உழைக்கும் மக்களின் வரிப் பணம் என்பதுதான் வேதனை.

• அழகு

www.padippakam.com

# விவசாயத்தை நாசமாக்கும் சாராய ஆலை

## நிலத்தடி நீரைக் கொள்ளையிடும் சாராய ஆலைக்கு எதிராக கல்லாக்கோட்டை விவசாயிகளின் போர்.

காரைக்காலைச் சேர்ந்த வாசுதேவன் என்பவர் தலைமையிலான ஆறுபேர் கொண்ட கும்பல், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டத்திலுள்ள கல்லாக்கோட்டை கிராமத்தில் 20 ஏக்கர் நிலத்தை வாங்கி, ''போல்ட்-நட்'' தயாரிக்கும் ஆலைத் தொடங்கப் போவதாக அறிவித்தது. பின்னர் பாட்டில் தண்ணீர் தயாரிக்கப் போவதாகக் கூறிப் பஞ்சாயத்து அனுமதி பெற்றது. இப்போது ''கால்ஸ்'' என்ற நிறுவனத்தின் பெயரில் சீமைச்சாராய வடிப்பு ஆலைக்கான எல்லா கட்டுமான வேலைகளையும் வேகமாகச் செய்து வருகின்றது. இரண்டு பெரிய ஆழ் குழாய் (சுமார் 480 அடி ஆழம்) கிணறுகளைத் தோண்டி அன்றாடம் 6 லட்சம் லிட்டர் நிலத்தடி நீரை இப்போதே உறிஞ்ச ஆரம்பித்து விட்டது இந்த ''கால்ஸ்'' கும்பல். இது தவிர, இன்னும் பத்து ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டி ஆலையை இயக்கத் தீர்மானித்துள்ளது.

நிலத்தடி நீர்தான் இப்பகுதிவாழ் மக்களின் ஒரே ஆதாரம். இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டவுடனேயே ''கால்ஸ்'' ஆலையைச் சுற்றியுள்ள விவசாயக் கிணறுகளில் நீர் வற்றி விட்டது. மேலும் பத்து ஆழ் குழாய் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டால், கல்லாக்கோட்டையைச் சுற்றியுள்ள பதினெட்டு கிராமங்களும் அங்குள்ள மக்களும் விவசாயத்தை இழப்பதோடு, குடிக்கக் கூட நீரின்றித் தவிக்க வேண்டிய பேரபாயம் ஏற்படும்.

அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்தும், உள்ளூர் ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களுக்கு எலும்புத்துண்டுகளை வீசியும் சாராய ஆலையைத் தொடங்கியுள்ள ''கால்ஸ்'' கும்பல், சட்டப்படி முறையான அனுமதி எதையும் பெறவில்லை. முதலில் அனுமதியளித்த பஞ்சாயத்தும், மக்களின் எதிர்ப்பால் அனுமதியை ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனாலும், அதிகார வர்க்கம், போலீசு மற்றும் அடியாள்படையைக் கொண்டு சட்டவிரோதமாக ஆலைக் கட்டுமானப் பணிகளை வேகமாகச் செய்து வருகிறது ''கால்ஸ்'' கும்பல்.

கல்லாக்கோட்டையில் அமைக்கப்பட்டு வரும் சீமைச் சாராய வடிப்பு ஆலை (மேல் படம்); ஆலை அமைவதை எதிர்த்து நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் நடத்திய கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பரமானந்தம்.




இந்த அநீதிக்கு எதிராக கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக இப்பகுதிவாழ் மக்கள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆலையை அகற்றக் கோரி 2000-க்கும் மேற்பட்ட மக்கள் அணிதிரண்டு முற்றுகைப் போராட்டம் நடத்தியபோது, காங்கிரசு; தி.மு.க; ம.தி.மு.க; ஆகிய கட்சிகளின் உள்ளூர் தலைவர்கள் அடியாட்களுடன் வந்து மிரட்டினர். அக்குண்டர்களை கல்லாக்கோட்டை மக்கள் ஓடஓட அடித்து விரட்டினர். சாராய ஆலைக்கு சரக்குகளை ஏற்றிவரும் லாரிகள் ஊருக்குள் நுழைய அனுமதியில்லை என்று அறிவித்து, மீறி உள்ளே வரும் லாரிகளைச் சிறைபிடித்துத் திருப்பியனுப்பியுள்ளனர், இக்கிராம மக்கள்.


''கால்ஸ்'' கும்பலின் ஏவல்நாயாகச் செயல்படும் போலீசு, முற்றுகைப் போராட்டம் நடத்திய மக்கள் மீது குண்டாந்தடி தாக்குதல் நடத்தியதோடு, கொலைமுயற்சி உள்ளிட்ட பல கொடிய பிரிவுகளின் கீழ் முன்னணியாளர்கள் மீது பொய் வழக்குகளைப்போட்டுள்ளது. பிணை வழங்கிய நீதிமன்றமோ, நாகப்பட்டினத்தில் தங்கி காலை-மாலை என இருவேளையும் போலீசு நிலையத்தில் கையெழுத்திடுமாறு நிபந்தனை விதித்து, ''கால்ஸ்'' கும்பலுக்கு விசுவாசமாக நிற்கிறது. இதைப் புரிந்து கொண்ட முன்னணியாளர்கள், ஊருக்குத் திரும்பிவந்து, ''முடிந்தால் போலீசு ஊருக்குள் வந்து கைது செய்யட்டும், பார்க்கலாம்'' என்று உள்ளூர் மக்களின் பேராதரவோடு போராட்டத்தை தொடர்கின்றனர். ஊருக்குள் நுழைந்தால் காக்கிச் சட்டை கந்தலாகிவிடும் என்பதால் பம்மிப்பதுங்குகிறது போலீசு.

அதிகார பலமிக்க போலீசுக்கே இந்த கதி என்றால், உள்ளூர் ஓட்டுக் கட்சி துரோகிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையோ நாயை விடக் கேவலமாகி விட்டது. இத்துரோகிகளைச் சமூகப் புறக்கணிப்பு செய்துள்ள மக்கள், மளிகைக் கடை- தேநீர் கடைகளில் எந்தப் பொருளையும் வழங்குவதில்லை. உள்ளூரில் முடிதிருத்திக் கொள்ளக் கூட இத்துரோகிகளால் முடியவில்லை. பொது இடங்களில் நடமாடினால் கூட உழைக்கும் மக்கள் அவர்களைக் காறி உமிழ்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com





சீமைச் சாராய ஆலை எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. கணேசன் (மேல்படம்); ஆலையை எதிர்த்த போராட்டத்தின் பொழுது போலீசார் நடத்திய தடியடியில் கையெலும்பு முறிந்து காயமடைந்த திரு. தங்கராசு.

ஒற்றுமையுணர்வோடும் உறுதியோடும் தொடரும் கல்லாக்கோட்டை மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து, ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் இப்பகுதியெங்கும் தொடர் தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதன் தொடர்ச்சியாக 16.11.08 அன்று கல்லாக்கோட்டையில் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் ''கால்ஸ்'' சாராய அலையை விரட்டியடிப்போம் என்ற அறைகூவலுடன் பொதுக்கூட்டம்-கலைநிகழ்ச்சியை நடத்தின. சாராய ஆலை எதிர்ப்புப் போராட்ட முன்னணியாளர்கள் பங்கேற்புடன் நடந்த இப்பொதுக்கூட்டமும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும், பகுதிவாழ் மக்களின் போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சுவதாக அமைந்தது.

- பு.ஜ.செய்தியாளர்கள்

# மோதல் கொலையா? கட்டுக்கதையா?

**தில்லி போலீசு, பாட்லா ஹவுஸில் நடத்திய மோதல் கொலையின் பின்னே காங்கிரசின் அரசியல் இலாபம் மறைந்திருக்கிறது.**

தில்லியில் கடந்த செப்டம்பர் 13 அன்று குண்டு வெடித்த ஆறாவது நாள் - செப்டம்பர் 19 அன்று, அந்நகரின் தென்பகுதியில் உள்ள ஜாமியா நகரில், ''பாட்லா ஹவுஸ்'' என்ற அடுக்குமாடிக் குடியிருப்பில் தில்லி போலீசின் சிறப்புப் பிரிவு நடத்திய தேடுதல் வேட்டையில், ''இரண்டு முசுலீம் தீவிரவாதிகள் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும்; இருவர் தப்பியோடிவிட்டதாகவும்; ஒரு தீவிரவாதி கைது செய்யப்பட்டிருப்பதாகவும்'' அறிவிக்கப்பட்டது.

''கொல்லப்பட்ட தீவிரவாதிகளான முகம்மது பஷீர் என்ற அடிஃப் மற்றும் முகம்மது பக்ருதீன் என்ற சஜித் ஆகிய இருவரும் தில்லி குண்டு வெடிப்புக்குக் காரணமான இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்; அடிஃப்தான் அந்த அமைப்பின் தளபதி; ஜெய்ப்பூர், அகமதாபாத் நகரங்களில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கும் இவர்கள்தான் காரணம்'' என்று தில்லி போலீசு அறிவித்தது.

இந்த மோதல் நடந்த அடுத்த சில தினங்களிலேயே சாகிப் நிசார், ஷீஷன் உள்ளிட்ட பல முசுலீம் இளைஞர்கள் ஜாமியா நகரிலிருந்து கைது செய்யப்பட்டனர். ''இந்தியன் முஜாஹிதீன் அமைப்பின் தலைமையை அழித்தொழித்து விட்டதாக'' அறிவித்தார், தில்லி போலீசின் இணை கமிசனர். இம்மோதலின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், தில்லி போலீசின் மோதல் கொலை நாயகன் எனப் புகழப்படும் போலீசு ஆய்வாளர் மோகன் சாந்சர்மா மோதலின்பொழுது சுடப்பட்டு, சிகிச்சைப் பலனின்றி இறந்து போனார்.

இம்மோதல் பற்றிய ஆரவாரமெல்லாம் அடங்கிய பிறகு, பல்வேறு மனித உரிமை அமைப்புகள் மட்டுமின்றி, அவுட்லுக், ஃப்ரெண்ட்லைன், எக்கனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி உள்ளிட்ட பல்வேறு முதலாளித்துவ பத்திரிகைகளும் இம்மோதலின் உண்மைத் தன்மை பற்றி எழுப்பி வரும் சந்தேகங்கள் முன்னணிக்கு வந்துள்ளன. மேலும், மோதலில் கொல்லப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட 'தீவிரவாதிகள்' பற்றி தில்லி, உ.பி., மும்பை, ஜம்மு-காசுமீர் போலீசார் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள அறிக்கைகளும் ஒன்றுக்கு ஒன்று முரணாக அமைந்து, தில்லி போலீசாரின் வண்டவாளத்தைத் தண்டவாளம் ஏற்றி விட்டன

ஜாமியா நகரில் உள்ள பாட்லா ஹவுஸில் ''எல்.18'' என்ற பிளாட்டில் ஐந்து தீவிரவாதிகள் தங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததன் அடிப்படையில் தேடச் சென்றபொழுது நடந்த மோதலில் இருவர் கொல்லப்பட்டனர்; ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்; இருவர் தப்பியோடிவிட்டதாக 'இந்த சண்டை படத்திற்கு'த் திரைக்கதை எழுதியிருக்கிறது, தில்லி போலீசு. ''அந்த அடுக்குமாடிக் குடியிருப்புக்குள் நுழையவும், வெளியேறவும் ஒரேயொரு வழிதான் இருக்கும்பொழுது, அந்த வழியையும் போலீசார் சுற்றி வளைத்திருந்தபொழுது அந்த இரண்டு தீவிரவாதிகளும் ஆயுதந்தாங்கி நின்ற போலீசாரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு எப்படித் தப்பியிருக்க முடியும்?'' என்று பலரும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இந்தக் கேள்விக்கு தில்லி போலீசார் எந்தப் பதிலையும் இதுவரை சொல்லவில்லை. ஆனால், அவர்களின் சார்பாக பிரவீண் சுவாமி என்ற பத்திரிகையாளர், ''போலீசு ஆய்வாளர் மோகன் சாந்சர்மா சுடப்பட்டவுடன் வாசலில் நின்ற போலீசார் தங்களது அதிகாரியின் உயிரைக் காப்பாற்றப் போய்விட்டதைப் பயன்படுத்திக் கொண்டு அந்த இரண்டு தீவிரவாதிகளும் தப்பிவிட்டனர்'' என்று விளக்கமளித்துள்ளார். பாட்லா ஹவுஸிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்கு யாரும் நுழையமுடியாதபடி அரண் அமைத்து பெரும் போலீசு பட்டாளம் குவிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த

www.padippakam.com



**தில்லி – பாட்லா ஹவுஸில் நடந்த 'மோதல்' கொலைக்குப் பிறகு கைது செய்யப்பட்ட 'முசுலீம் தீவிரவாதிகள்', முகங்கள் மூடப்பட்ட நிலையில் நீதிமன்ற விசாரணைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.**

இரண்டு தீவிரவாதிகளும் தப்பியிருக்கி றார்கள் என்றால், அவர்களின் 'திற மையை' மெச்சுவதா? இல்லை, தில்லி போலீசின் 'தூங்குமூஞ்சிதனத்தை' நொந்து கொள்வதா என்பதை அந்தப் பத்திரிகையாளரிடம்தான் கேட்க வேண்டும்.

'மோதலில்' கொல்லப்பட்ட அடிஃப்பை இந்தியன் முஜாஹிதீன் அமைப்பின் மூளையாகக் காட்ட வேண்டும் என்பதற்காக தில்லி போலீசார், "உ.பி.யில் உள்ள அஸம்கர் ஊரில் அடிஃப் வைத்திருந்த வங்கிக் கணக்கில் மூன்று கோடி ரூபாய் பணம் இருந்ததாக"க் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், அந்த வங்கி மேலாளரோ அடிஃப் தனது வங்கிக் கணக்கில் வெறும் ரூ.1,400 மட்டுமே வைத்திருந் ததாகக் குட்டை உடைத்துவிட்டார்.

தில்லி குண்டு வெடிப்பை நடத்திய அடிஃப் பாட்லா ஹவுஸில் பதுங்கியி ருந்ததாக தில்லி போலீசார் கூறி வரு கின்றனர். ஆனால், அடிஃப் பாட்லா ஹவுஸில், எல்.18 என்ற பிளாட்டில் தங் கியிருக்கிறார் என்பதும், அவரது கைபேசி எண்ணும்கூட ஜாமியா நகர் போலீசாருக்கு 'மோதலுக்கு' முன்பே தெரியும். தில்லியில் யாராவது புதி தாகக் குடியேறினால், அவர் தன்னைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அப்பகுதி போலீசு நிலையத்தில் கூறிச் சான்று பெற வேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது. இதன்படி அடிஃப்பும் நடந்துகொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார். பதுங்க வந்த தீவிரவாதி இப்படி பகிரங்கமாக நடந்து கொள்வானா?

'மோதலில்' அடிஃப் சுட்டுக் கொல் லப்பட்டு, அவர் தீவிரவாதியாக போலீ சாரால் பட்டம் கட்டப்பட்ட அதே சமயம், பாட்லா ஹவுஸ் குடியிருப்பின் பராமரிப்பாளர், அடிஃப் ஜாமியா நகர் - பாட்லா ஹவுஸில் குடியேறியிருப்பது தொடர்பாக ஜாமியா நகர் போலீசார் அளித்திருந்த சான்றிதழைப் பத்திரிகை யாளர்கள் முன் காட்டினார். தனது குட்டு அம்பலப்பட்டுப் போனதைக் கண்ட தில்லி போலீசார், "அந்த சான் றிதழ் போலியாகத் தயாரிக்கப்பட்ட தாக" அறிக்கை விட்டனர்.

தீவிரவாதி எனக் குற்றம் சாட்டப் பட்டுக் கைது செய்யப்பட்டுள்ள சாகிப் நிஸாருக்கும் அகமதாபாத் குண்டு வெடிப்புக்கும் தொடர்புண்டு என்பது தில்லி போலீசாரின் கண்டுபிடிப்பு. அக மதாபாத்தில் குண்டு வெடித்த அதே நாளில், சூரத் நகரில் கொத்துக் கொத்தாக வெடிகுண்டுகள் கண்டுபிடிக் கப்பட்ட அதே தினங்களில் 'தீவிரவாதி' சாகிப் நிஸார் தில்லியில் முதுகலை வணிக மேலாண்மை தேர்வுகளை எழுதிக் கொண்டிருந்தார். அவரது விடைத் தாள்கள் உள்ளிட்டு, அவர் அத் தேர்வை எழுதியுள்ளதற்கான அனைத்து ஆதாரங்களும், யார் வேண் டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம் என்றபடி பகிரங்கப்படுத்தப்பட் டுள்ளன. "குண்டு வெடித்த அன்று அவர் அகமதாபாத்தில் இல்லை என்பது உண்மை; ஆனால், அவர் அக மதாபாத்துக்குச் சென்று வந்ததற்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாக" தில்லி போலீசார் சாகிப் நிஸார் மீது மொட்டையாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகின்றனர்.

ஷீஷன் என்ற முசுலீம் இளைஞர், சுட்டுக் கொல்லப்பட்ட அடிஃப்புடன் சேர்ந்து ஒரே அறையில் தங்கியிருந்தார் என்பதை வைத்தே அவருக்கும் குண்டு வெடிப்புகளுக்கும் தொடர்பிருப்பதாக தில்லி போலீசார் கதை கட்டி வருகின் றனர். ஷீஷன் ஐ.ஐ.பி.எம். என்ற மேலாண்மை கல்வி நிறுவனத்தில் சேரு வதற்காக, அக்கல்வி நிறுவனத்தின் நுழைவுத் தேர்வை எழுதும் பொருட் டுதான் தில்லி வந்து பாட்லா ஹவுஸில் தங்கியிருந்தார். ஷீஷன் இப்போலி மோதலைப் பற்றி "ஹெட்லைன்ஸ் டுடே" என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பேட்டியளித்தார் என்ற ஒரே காரணத்திற்காகதான், அவர் பேட் டியளித்துவிட்டு அத்தொலைக்காட்சி நிறுவனத்தின் படப்பிடிப்பு அரங்கத்தி லிருந்து வெளியேறிய மறுநிமிடமே கைது செய்யப்பட்டார். ஷீஷன் அளித்த பேட்டியின் ஒளிபரப்பும் போலீசின் நெருக்குதல் காரணமாகப் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. பாட்லா ஹவுஸின் பராமரிப்பாளரின் மகன் ஜியா வுர் ரஹ்மான், ஷகீல் ஆகிய முசுலீம் இளைஞர்களும் இப்போலி மோதலை அம்பலப்படுத்திக் கருத்துச் சொன்னதற்காகவே கைது செய்யப் பட்டுத் தீவிரவாதிகளாக நிறுத்தப்பட் டுள்ளனர்.

இம்மோதலில் சுட்டுக் கொல்லப் பட்ட முகம்மது பக்ருதீன் என்ற சஜித் இருபது வயதுக்கு மேற்பட்ட இளைஞர் என்கிறது தில்லி போலீசின் அறிக்கை. ஆனால், சஜித் 18 வயதுகூட நிரம்பாத சிறுவன் என்றும், ஜாமியா நகரில் உள்ள பள்ளியொன்றில் +1 வகுப்பில் சேருவ தற்காகவே அச்சிறுவன் தில்லி வந்ததா கவும் பிரெண்ட்லைன் ஆங்கில இதழ் குறிப்பிடுகிறது. (பிரெண்ட்லைன், அக்.24,2008, பக்.90)

பாட்லா ஹவுஸ் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட அடிஃப்தான் காசியில் மார்ச் 7, 2006 அன்று நடந்த குண்டு வெடிப்புக்குக் காரணம் என்பது தில்லி போலீசின் புலனாய்வு. போலீசு இணை கமிசனர் கர்னயில் சிங் காசியில் அடிஃபின் நண்பர்களுள் யார்யார் எங் கெங்கு குண்டு வைத்தார்கள் என்பது பற்றியெல்லாம் விலாவாரியாக பத்திரி கைகளுக்கு பேட்டியளித்தார். அதேச மயம் உ.பி. போலீசோ காசி குண்டு வெடிப்புக்கு வங்காள தேசத்தைச் சேர்ந்த ஹூஜி அமைப்புதான் காரண மென்றும் அக்குண்டு வெடிப்புக்குக் காரணமான முகம்மது ஜுபைரை கடந்த மே 9 அன்று சுட்டுக் கொன்று விட்டதாகவும்; முகம்மது வாலியுல்லா விற்கு 10 வருட தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டதாகவும்; மீதியுள்ள மூன்று குற்றவாளிகள் வங்க தேசத்

www.padippakam.com


திற்குத் தப்பிவிட்டதாகவும் அடித்துக் கூறி வருகிறது.

''அஸம்கர் குழு'' என்று அழைக்கப்படும் அடிஃப் கோஷ்டிதான் ஹைதராபாத் குண்டு வெடிப்புக்கும் காரணம் என்பது தில்லி போலீசின் கண்டுபிடிப்பு. ஆனால், மைய அரசோ ஹூஜி அமைப்பைச் சேர்ந்த ஷஹித் பிலால்தான் ஹைதராபாத் குண்டு வெடிப்புக்குக் காரணம் என்று கூறியிருப்பதோடு, பாகிஸ்தானில் பதுங்கியுள்ள பிலாலைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டு பாகிஸ்தான் அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

''அபு அல்-காமாதான் இந்தியன் முஜாஹிதீன் அமைப்புக்குத் தலைமை தாங்குவதோடு, லஷ்கர்-இ-தாய்பா என்ற தீவிரவாத அமைப்பின் களத் தளபதியாகவும் செயல்படுவதாக'' தில்லி போலீசார் இம்மோதலுக்குப் பின் அறிவித்தனர். ஆனால், ஜம்மு-காசுமீர் போலீசோ, ''அல்-காமா கடந்த ஏப்ரலிலேயே இறந்து விட்டதாகவும்; ஜெய்ப்பூர், அகமதாபாத், பெங்களூர், தில்லி குண்டு வெடிப்புகளுக்கும் ஜம்மு-காசுமீரில் இயங்கும் தீவிரவாத அமைப்புகளுக்கும் எவ்வித் தொடர்பும் கிடையாது'' என்றும் அறிவித்திருக்கிறது.

தீவிரவாதிகள் சுட்டுதான் போலீசு ஆய்வாளர் மோகன் சர்மா இறந்து போனதாக போலீசார் கூறுகின்றனர். ஆனால், ஜாமியா நகர் பகுதி மக்களோ, ''அந்த இளைஞர்கள் போலீசை நோக்கிச் சுட்ட ஓசை எங்களுக்குக் கேட்கவில்லை'' என்று கூறியுள்ளனர். அதே சமயம், மோதலுக்கு முன்பாக, ஏறத்தாழ ஒரு வாரமாக போலீசார் ஜாமியா நகர் பகுதியில் வட்டமிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டதாகக் கூறுகின்றனர்.

ஜாமியா நகர் பாட்லா ஹவுஸில் தீவிரவாதிகளைத் தேடப் போவதாகத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்குச் செய்தி கொடுத்துவிட்டு மோகன் சர்மா தலைமையில் வந்த போலீசார், எல்-18 பிளாட்டில் தங்கியிருந்த இளைஞர்களைக் கீழே இழுத்து வந்து அடித்ததாகவும், அப்பொழுது நடந்த கைகலப்பில் போலீசாரின் துப்பாக்கித் தவறுதலாக வெடித்து ஆய்வாளர் மோகன் சர்மாவைக் காயப்படுத்தியதாகவும், அதனால் ஆத்திரமடைந்த போலீசார் அந்த இரு இளைஞர்களையும் அதே இடத்தில் சுட்டுக் கொன்றதாகவும்



**பாட்லா ஹவுஸ் 'மோதலின்' பொழுது 'தீவிரவாதிகளால் சுடப்பட்ட' நிலையில் அழைத்து வரப்படும் போலீசு ஆய்வாளர் மோகன் சந்த் ஷர்மா.**

பிரஃபுல் பித்வாய் என்ற பத்திரிகையாளர் பிரெண்ட்லைன் (அக். 24, 2008, பக். 97) ஏட்டில் குறிப்பிட்டுள்ளார். அவுட்லுக் என்ற ஆங்கில இதழும் மோகன் சர்மா போலீசார் தவறுதலாகச் சுட்டதனாலேயே இறந்து போனதாகக் குறிப்பட்டுள்ளது. (அவுட்லுக், அக். 6, 2008, பக்.30, 31)

இம்'மோதல்' பற்றிய இத்தணை சந்தேகங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் தில்லி போலீசார் எவ்வித நியாயமான விளக்கத்தையும் அளிக்கவில்லை. மாறாக, ''ஒரு போலீசு அதிகாரியை இழந்திருக்கிறோம்; அது பற்றி கவலைப்படாதவர்கள், தீவிரவாதிகளுக்கு வக்காலத்து வாங்குவதாக'' வழக்கமான தேசபக்தி ஒப்பாரிக்குள் புகுந்து கொண்டனர்.

''காங்கரசு கூட்டணி ஆட்சி பலவீனமான ஆட்சி'' என்று திரும்பத் திரும்பக் கூறிவரும் பா.ஜ.க. கும்பலின் வாயை அடைப்பதற்காகவே ஆளும் காங். கும்பல் இம்'மோதலை'த் திட்டமிட்டு நடத்தியிருக்கலாம் என்று கூட மனித உரிமை அமைப்புகள் சந்தேகம் எழுப்பி வருகின்றன. இல்லையென்றால், மைய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டிலே இம்மோதலை ஏன் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்? மோதல் கொலை நாயகன் எனப் புகழப்படும் போலீசு ஆய்வாளர் மோகன் சர்மா துப்பாக்கிக் குண்டு துளைக்காத கவச உடையை அணிந்து கொள்ளாமல் ஏன் தேடுதல் வேட்டைக்குக் கிளம்ப வேண்டும்? என்ற கேள்விகளை அவ்வமைப்புகள் எழுப்பியுள்ளன.

காங்கிரசு மீதான இக்குற்றச்சாட்டு ஒருபுறமிருக்கட்டும்; பல்வேறு சந்தேகங்களுக்கு உள்ளாகியிருக்கும் இம்மோதல் உச்சநீதி மன்ற நீதிபதி தலைமையில் கமிசன் அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று முசுலீம் மக்கள் கோருவதைக்கூட மைய அரசு காதிலே வாங்கிக் கொள்ள மறுக்கிறது. அதே சமயம், மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்யாசினி பிரக்ஞா சிங், தன்னை போலீசார் துன்புறுத்துவதாகப் புலம்பியவுடன், அது பற்றி அத்வானி ஊளையிட்டவுடன், தேசியப் பாதுகாப்புச் செயலர் எம்.கே. நாராயணன் அத்வானியைச் சந்தித்து பிரக்ஞா சிங்கின் குற்றச்சாட்டு குறித்து விசாரிப்பதாக வாக்குறுதி அளிக்கிறார்.

எப்பேர்பட்ட மதச்சார்பற்ற நாடு! எப்பேர்பட்ட மதச்சார்பற்ற ஆட்சி!

●ரஹீம்

www.padippakam.com

# கயர்லாஞ்சி வன்கொடுமையும் நீதிமன்றத்தின் சாதிப் பாசமும்

**வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆதிக்கசாதிக் குற்றவாளிகளை தண்டிக்க மறுத்ததன் மூலம் போட்மாங்கேவுக்கு நீதி மறுக்கப்படுகிறது.**

மராட்டிய மாநிலத்தின் பண்டாரா மாவட்டத்தில் உள்ள கயர்லாஞ்சி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பையாலால் போட்மாங்கே குடும்பத்தினர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு - 2006, செப்டம்பர் மாத இறுதியில் சாதி இந்துக்களால் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்தை வாசகர்கள் மறந்திருக்க முடியாது.

கயர்லாஞ்சி கிராமத்தில் போட்மாங்கே குடும்பத்தினருக்கு வறண்டு போன ஐந்து ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் தங்களுக்குத் தேவைப்படும் வசதியோடு ஒரு வீடு கட்டிக் கொள்ள பையாலால் விரும்பினார். ஒரு தாழ்த்தப்பட்டவன் கல் வைத்த வீடு கட்டுவதை விரும்பாத அக்கிராமத்தைச் சேர்ந்த ஆதிக்க சாதி வெறியர்கள், பையாலால் குடும்பத்தின் நியாயமான விருப்பத்தை வன்மத்துடன் எதிர்த்து வந்தனர். மேலும், பையாலாலுக்குச் சொந்தமான நிலத்தில் இருந்து இரண்டு ஏக்கர் நிலத்தைக் கிராமத்தின் பொதுப் பாதைக்குத் தேவை என வஞ்சகமாகப் பறித்துக் கொண்டனர். அபகரிக்கப்பட்ட அந்த நிலம், பையாலாலின் நிலத்தையொட்டியுள்ள 'பிற்படுத்தப்பட்ட' சாதியைச் சேர்ந்த அக்கிராமத் தலைவரின் நிலத்திற்குள் டிராக்டர்கள், வண்டிகள் சென்று வருவதற்கான பாதையாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சட்ட விரோதமான நில ஆக்கிரமிப்பை பையாலாலின் மனைவி சுரேகா எதிர்த்து வந்தார்.

கயர்லாஞ்சிக்கு அருகில் அமைந்துள்ள துசாலா கிராமத்தில் வசிக்கும் சுரேகாவின் ஒன்றுவிட்ட சகோதரர்களான சித்தார்தும், ராஜேந்திராவும், அந்த இரண்டு ஏக்கர் நிலத்தை சுரேகாவிற்குப் பெற்றுத் தரும் நோக்கத்தோடு, கயர்லாஞ்சியைச் சேர்ந்த ஆதிக்க சாதி பிரமுகர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த ஆதிக்கச் சாதி வெறியர்கள் பிரச்சினையைத் திசைதிருப்பும் நோக்கில், சுரேகாவுக்கும் அவருக்காகப் பரிந்து பேசிய சித்தார்த்துக்கும் கள்ளத் தொடர்பு இருப்பதாகவும்; சுரேகா கள்ளச் சாராய வியாபாரி என்றும் கதை கட்டினர்.

கயர்லாஞ்சிக்கு 03.09.2006 அன்று நியாயம் கேட்க வந்த சித்தார்தை, ஆதிக்க சாதி வெறியர்கள் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் துரத்தியடித்துத் தாக்கினர். சாதி வெறியோடு நடத்தப்பட்ட இத்தாக்குதல் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் 29.09.2006 அன்று 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மகாதி தாலுகா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அன்றே (29.09.2006) பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் கயர்லாஞ்சி வன்கொடுமை தாக்குதல் நடந்தது.

விடுவிக்கப்பட்ட 12 பேரும் தம் உறவினர்கள் சுமார் 40 பேருடன் சித்தார்தைத் தேடி துசாலாவுக்குச் சென்றனர். இவர்கள் வரும் செய்தியைக் கேட்ட சித்தார்த்தும் ராஜேந்திராவும் ஓடி ஒளிந்து கொண்டனர். அவர்கள் இருவரையும் காணாத கூட்டம் அடுத்து கயர்லாஞ்சி நோக்கிச் சென்றது. அக்கூட்டத்துடன் கயர்லாஞ்சியைச் சேர்ந்த ஆதிக்க சாதி இந்துக்களும் சேர்ந்து கொண்டு பையாலாலின் குடிசையை நோக்கிப் பயங்கர ஆயுதங்களுடன் சென்றனர். குடிசைக்குள் பையாலாலின் மனைவியும் குழந்தைகளும் மட்டுமே இருந்தனர்.

குடிசைக்குள் புகுந்த ஆதிக்க சாதிவெறியர்கள், அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைக் கிழித்து நிர்வாணப்படுத்தி, கையோடு கொண்டு வந்திருந்த ஆயுதங்களால் அவர்களைக் கொடூரமாகத் தாக்கினர். அதோடு அந்த நால்வரையும் தெருத்தெருவாக இழுத்துச் சென்றனர். ஊர்ப் பொது இடத்


**மனிதத் தன்மையற்ற வக்கிரமான முறையில் கொல்லப்பட்ட பையாலால் போட்மாங்கே குடும்பத்தினர்: ஆதிக்க சாதி பயங்கரவாதம்.** (கோப்புப் படம்).



www.padippakam.com

திற்குக் கொண்டு வந்து பையாலாலின் மனைவியையும், மகளையும் கூட்டத்திலிருந்த எல்லா ஆண்களும் மாறிமாறிப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். சூழ்ந்து நின்று இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெண்களுள் ஒருவரும் இந்த வன்செயலைக் கண்டிக்கவுமில்லை, தடுக்கவும் முற்படவில்லை.

பிறகு, ஒரு கொடூரமான செயல் அரங்கேறியது. தாயையும் தங்கையையும் புணருமாறு பையாலாலின் மகன்கள் சுதிருக்கும் ரோஷனுக்கும் கட்டளையிட்டனர். அவர்கள் மறுத்துவிடவே அவர்களின் ஆண்குறிகளைக் கத்தியால் வெட்டினர். பிறகு அவர்களை அரைகுறை உயிரோடு வானத்துக்கும் பூமிக்குமாகத் தூக்கியெறிந்து பந்தாடினர். அவர்களது உயிர் பிரியும்வரை இந்த 'விளையாட்டு' நடந்தது.



கயர்லாஞ்சி வன்கொடுமையின் இரத்தசாட்சி பையாலால் போட்மாங்கே. (கோப்புப் படம்),

குற்றுயிராய்க் கிடந்த இரு பெண்களின் குறிகளுக்குள்ளும் மாட்டு வண்டியின் நுகத்தடியில் பொருத்தப்படும் கம்புகளைச் சொருகினர். சிலர் நன்கு கூர்மையாகச் சீவப்பட்ட மூங்கில் குச்சிகளை அடித்துச் சொருகினர். அதிக இரத்தப் போக்கினாலும் தாங்க முடியாத இச்சித்திரவதைகளினாலும் உயிரிழந்த அப் பெண்களது உடல்களைத் தெருவில் வீசிவிட்டுச் சென்றனர்.

மிகவும் வக்கிரமான முறையிலும், கொடூரமான முறையிலும் நடத்தப்பட்ட இவ்வன்கொடுமைத் தாக்குதல் சம்பவம், அதன் முழு பரிமாணத்தோடு வெளியே தெரிவதற்குக் கூடப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. குறிப்பாக, மகாராஷ்டிர போலீசும், மருத்துவர்கள் உள்ளிட்ட அதிகார வர்க்கமும் - இந்த அதிகாரிகளுள் பலர் 'தலித்'கள் என்பதுதான் வெட்கக்கேடு - இவ்வன்கொடுமையை மூடி மறைத்துவிடுவதிலும், பூசி மெழுகுவதிலும் குறியாக இருந்து செயல்பட்டனர். அதிகாரி தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும்கூட, அவரும் சாதிய சமூகம் விதித்திருக்கும் மன ஓட்டத்தின்படிதான் செயல்படுவார் என்பதையே கயர்லாஞ்சி எடுத்துரைக்கிறது.

இச்சம்பவம் நடந்த அன்றிரவே பையாலால், சித்தார்த்தை அழைத்துக்கொண்டு போய் அண்டால்கவான் போலீசு நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் அன்றிரவு 11.00 மணிக்கு கயர்லாஞ்சி கிராமத்திற்குச் சென்று விசாரித்தனர். அத்தகைய சம்பவம் எதுவும் அங்கே நிகழவில்லை என சாதி இந்துக்கள் அனைவரும் ஒரே குரலில் சொன்னதையே போலீசார் தேவ வாக்காக எடுத்துக் கொண்டு திரும்பிவிட்டனர். கயர்லாஞ்சியில் வசிக்கும் பிற தாழ்த்தப்பட்ட குடும்பங்களிடமோ, கோண்டு பழங்குடியினர் மத்தியிலோ விசாரித்து உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற எண்ணம் போலீசுக்குக் கிஞ்சித்தும் இருக்கவில்லை.

"தாழ்த்தப்பட்ட பெண் உயர்கல்வி படிப்பதா?" என்ற வன்மத்துடன் கொல்லப்பட்ட பையாலாலின் மகள் பிரியங்கா. (கோப்புப் படம்).



புரட்சிகர அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும் கயர்லாஞ்சியில் நடத்திய நேரடி விசாரணை; அவ்வமைப்புகள், ஆதிக்க சாதிவெறி பிடித்த குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி நடத்திய போராட்டங்கள்; அப்போராட்டத்தை ஒடுக்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நடந்த ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞனின் மரணம்; போராட்டத்தை முன்னின்று நடத்திய முன்னனியாளர்கள் பொய் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டது; நக்சல்பாரிகள்தான் இப்போராட்டத்தைத் தூண்டிவிடுவதாகக் கூறி, இந்த அடக்குமுறையை நியாயப்படுத்திய மகாராஷ்டிர அரசின் திமிர் — இவற்றையெல்லாம் தாண்டிதான் கயர்லாஞ்சி வன்கொடுமை தாக்குதல் சம்பவம் வெளியுலகுக்குத் தெரிந்தது.

அதிகார வர்க்கம் விசாரணை நிலையிலேயே இந்த வழக்கை நீர்த்துப் போகச் செய்வதற்கு எல்லா உள்ளடி வேலைகளையும் செய்தது. போட்மாங்கேயின் மனைவி, மகள், இரு மகன்கள் ஆகிய நால்வரின் சடலங்கள் உருக்குலைந்து போயிருந்ததால், 'உரிய விதி'களின்படி பிரேதப் பரிசோதனை செய்ய இயலவில்லை என் மருத்துவர் குழு அறிவித்தது. கொல்லப்பட்ட இரண்டு பெண்களின் யோனிக் குழாய்களையும் கருப்பைகளையும் சோதித்ததில் பெண்கள் இருவரும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டதற்கான ஆதாரம் எதுவுமில்லை எனவும் பிரேதப் பரிசோதனை அறிக்கை கூறியது.

தேசிய மனித உரிமை ஆணையமும் பல்வேறு ஜனநாயக இயக்கங்களும் கொடுத்த தொடர் நெருக்கடிகளின் காரணமாக, அந்த நான்கு பேரின் சடலங்களையும் தோண்டி எடுத்து மீண்டும் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு உருவானது. ஆனால், 'காலம் கடந்துவிட்ட'தால் இந்தச் சோதனையால் புதிதாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை என அரசு அறிவித்தது. போலீசார் தமது ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்தப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாயினரா என்பதை உறுதிபடுத்தும் நோக்கில் பிரேதப் பரிசோதனை நடத்தப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டனர்.

கயர்லாஞ்சி கிராமத்தில் வாழும் 'பிற்படுத்தப்பட்ட' சாதியைச் சேர்ந்த பெரும்பாலான குடும்பங்களுக்கு இந்த வன்கொடுமை தாக்குதல் சம்பவத்தில் நேர்டித் தொடர்பிருந்தாலும், இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மையப் புலனாய்வுத் துறை 46 பேரிடம் மட்டுமே விசாரணையை மேற்கொண்டது. அவர்களுள் 35 பேர் விசாரணை நிலையிலேயே வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; 11 பேர் மீது மட்டுமே கொலை, சதி மற்றும் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்கை விசாரித்த பண்டாரா மாவட்ட குற்றவியல் நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட பதினொரு பேரில் எட்டு பேரைக் குற்றவாளிகள் என்று அறிவித்தி

www.padippakam.com

ருக்கிறது. இந்த எட்டு பேரில் ஆறு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது; மீதி மூன்று பேர் குற்றமிழைத்ததற்குச் சாட்சிகள் இல்லை என்று கூறி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று பேரில், பையாலாலிடமிருந்து இரண்டு ஏக்கர் நிலத்தை அபகரித்துக்கொண்ட கயர்லாஞ்சி கிராமத் தலைவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. விடுவிக்கப்பட்ட மூவருமே ஓட்டுக்கட்சிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் எனத் தீர்ப்பின் பின் சுட்டிக் காட்டியுள்ளார், பையாலால்.

எனினும், தண்டிக்கப்பட்ட எட்டு பேரில் ஒருவர்கூட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளெனத் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. முகேஷ் புஸம், சுரேஷ் கான்தாதே என்ற இருவரும், 'பையாலாலின் மனைவி சுரேகாவையும், அவரது மகள் பிரியங்காவையும் சாதி பெயரைச் சொல்லிக் கேவலமாகத் திட்டியதைக் கேட்டதாக' நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தனர். ஆனால், விசாரணை நீதிமன்றம் அவ்விருவரின் சாட்சியத்தை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

இதன் மூலம் இந்தக் கொலைகள் சாதிய வெறியினால் நடந்தது என்பது மறுக்கப்பட்டு, ஏதோ தனிப்பட்ட சொத்துத் தகராறில் நடந்த கொலை; முன்விரோதம் காரணமாக பழிக்குப்பழி வாங்குவதற்காக நடைபெற்றுள்ள கொலை எனக் குறிப்பிட்டு, உரிய நீதி கிடைப்பதை மறுத்துவிட்டது. மேலும், குற்றவாளிகள் இக்கொலைகளைச் செய்வதற்கு எவ்விதச் சதித் திட்டமும் தீட்டவில்லை எனத் தீர்ப்பு அளித்திருப்பதன் மூலம், இவ்வக்கிரமான படுகொலைகள் ஏதோ உணர்ச்சி வேகத்தில் நடந்துவிட்ட அசாம்பாவிதம் போலப் பூசி மெழுகியிருக்கிறார் 'நீதி'பதி எஸ்.எஸ். தாஸ்.

சில்லால் பராடே மகராஜ் என்பவர்தான், போட்மாங்கேயின் மகளான பிரியங்காவின் உடல் தன் நிலத்துக்கு அருகில் ஓடும் கால்வாயில் மிதப்பதாக போலீசாரிடம் தகவல் கொடுத்தார். சடலத்தின் பெண் குறிக்குள் கூரிய கம்பு சொருகப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். பிரியங்காவின் பிரேதத்தையும்கூடப் பலர் பாலியல் பலாத்காரம் செய்ததாகத் தன் பெயரை வெளியிட விரும்பாத ஒரு போலீசுகாரர் கூறியிருந்தார். ஆனால், விசாரணை நீதிமன்றமோ சுரேகாவும், பிரியங்காவும் பாலியல் பலாத்காரப்படுத்தப்படவில்லை என்பதோடு, அவர்கள் மானபங்கப்படுத்தப்பட்டதற்குக்கூட ஆதாரமில்லை எனக் கூறிவிட்டது.

இராசஸ்தானைச் சேர்ந்த பன்வாரி தேவி என்ற 'கீழ்சாதி'ப் பெண்ணை ஆதிக்கசாதி இந்துக்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம், 'கீழ்சாதிப் பெண்ணை உயர் சாதியினர் தொட்டிருக்கக்கூட மாட்டார்கள்' எனக் கூறியது. கயர்லாஞ்சி வழக்கில் இராசஸ்தான் நீதிமன்றத்தின் அந்த ஆதிக்க சாதித் திமிரை, ''ஆதாரமில்லை'' என்ற வார்த்தைகளில் கக்கியிருக்கிறார், 'நீதி'பதி தாஸ். இது மட்டுமின்றி, நீதிபதி தாஸ் இத்தீர்ப்பை எழுதும்போது கண்ணீர் விட்டதாகக் கூறப்படுகிறது. அது, ஆதிக்க சாதியைச் சேர்ந்த குற்றவாளிகளை விடுதலை செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் வழிந்த கண்ணீர். இந்திய நீதிமன்றங்களிடம் தீண்டாமை மனோபாவம் எத்தனை தூரம் வேர்விட்டுப் பரவியிருக்கிறது என்பதற்கு தாஸின் கண்ணீரே சாட்சி.

மாண்புமிகு நீதிபதிகளும், புனிதமானதாகக் கூறப்படும் இந்திய நீதிமன்றங்களும் வன்கொடுமை வழக்குகளில் ஆதிக்க சாதியினருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்குவ



ஆதிக்க சாதித் திமிர் பிடித்த குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டத்தில் பையாலால் போட்மாங்கே (வட்டத்துக்குள் இருப்பவர்). (கோப்புப் படம்).

தொன்றும் புதிய விசயம் கிடையாது. இக்குற்றச்சாட்டுக்கு மேலும் ஆதாரம் வேண்டும் என்று 'நடுநிலையாளர்கள்' விரும்பினால், மேலவளவு வழக்கிலும், திண்ணியம் வழக்கிலும் நீதிமன்றங்கள் அளித்திருக்கும் தீர்ப்பைப் புரட்டிப் பார்த்துக் கொள்ளட்டும்.

இதே பண்டாரா மாவட்டத்திலுள்ள சுரேவாடா கிராமத்தில் அமைந்திருக்கும் அரசுப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் தலைமை ஆசிரியையாக இருந்தார் என்ற காரணத்திற்காக, அவர் மாறுதல் செய்யப்பட்டவுடன் பொறுப்பேற்றுக் கொண்ட ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஆசிரியர், அப்பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த மாணவர்கள் மீது ''கோமியத்தை''த் தெளித்துப் 'புனித'ப்படுத்தியுள்ளார். இவ்வழக்கை விசாரித்த பண்டாரா மாவட்ட சிறப்பு நீதிமன்றம், ''மாணவர்கள் மீது தெளிக்கப்பட்டது பசு மூத்திரம்தான் என்பதற்கு ஆதாரமில்லை; எனவே, இவ்வழக்கு வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வராது'' எனக் குறிப்பிட்டு, வழக்கையே தள்ளுபடி செய்துவிட்டார்.

''மகாராஷ்டிராவில் குற்றங்கள் - 2007'' என்ற தலைப்பில் மகாராஷ்டிர மாநிலப் புலனாய்வுப் போலீசார் தயாரித்துள்ள அறிக்கையில், ''வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதியப்படும் வழக்குகளில், 2 சதவீதத்துக்கும் குறைவான வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதாக''க் குறிப்பிட்டுள்ளது. 'தேசிய' அளவில் எடுத்துக் கொண்டாலும் இதில் எவ்வித மாற்றமும் இருக்கப் போவதில்லை. உண்மை இப்படியிருக்க, பார்ப்பன-சத்திரிய சாதியினரும், 'பிற்படுத்தப்பட்ட' சாதியைச் சேர்ந்தவர்களும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, ''தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமைச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், அதனால் அச்சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும்'' என்று கோரி வருகிறார்கள். அதிகார வர்க்கமும் நீதிமன்றங்களும் வழக்குப் பதிவதிலும், விசாரணை நடத்துவதிலும், தீர்ப்பு வழங்குவதிலும் இச்சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதன் மூலம், சாதி இந்துக்களின் அக்கோரிக்கையை மறைமுகமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதற்கு கயர்லாஞ்சி, மேலவளவு, திண்ணியம், சுரேவாடா வழக்குகளில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புகளே சாட்சியங்களாக உள்ளன.

• செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மையக் கலைக் குழுவினர் இந்து மதவெறியை அம்பலப் படுத்தி நடத்திய நாடகமும், புரட்சிகர கலை நிகழ்ச்சியும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பை பெற்றன.

**நாமக்கல்-சேந்தமங்கலம்** பகுதியில் செயல்பட்டு வரும் மாவட்ட விசைத்தறி தொழிலாளர் சங்கம் சார்பில் பி.டி.ஓ. அலுவலகம் எதிரிலும்; வி.வி.மு. சார்பில் **முத்துகாபட்டி** பேருந்து நிலையம் அருகிலும்; **பள்ளிபாளையத்தில்** புதிய ஜனநாயக விசைத்தறி தொழிலாளர் சங்கம் சார்பில் எம்.ஜி.ஆர். சிலை அருகிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**உடுமலையில்** பு.ஜ.தொ.மு., வினர், தமது பகுதியில் செங்கொடியேற்றியும், அறைக்கூட்டம் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தியும் இனிப்புகள் வழங்கியும் நவம்பர் புரட்சி நாளைக் கொண்டாடினர். பள்ளி மாணவர்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, நவம்பர்-7 விழாவில் பரிசளித்தனர். இவ்விழாவில் பள்ளிக் குழந்தைகள் உறுமி மேளம் கலை நிகழ்ச்சி நடத்தி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர்.

**நீலகிரியில்,** "நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கம்" சார்பில் கோத்தகிரி ஜீப் நிலையத்தில் கொடியேற்றியும்; **புதுச்சேரியில்** பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. சார்பில் அறைக்கூட்டங்கள் நடத்தியும் இனிப்புகள் வழங்கியும் விழாவைக் கொண்டாடினர்.

**பென்னாகரம்** பகுதியில் வி.வி.மு., தனது 11 கிளைகளிலும் கொடியேற்றி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பரிசுகளும் இனிப்புகளும் வழங்கி உற்சாகமாகவும், எழுச்சியாகவும் கொண்டாடினர்.

**வேலூர்** ம.க.இ.க. சார்பில் நடத்தப்பட்ட நவம்பர் புரட்சி நாள் விழாவில் பிற ஜனநாயக மற்றும் முற்போக்கு அமைப்புகளின் பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். "போராட்டமே மகிழ்ச்சி; பிற பொருள் சார்ந்த மகிழ்ச்சி தற்காலிகமானதே" என்பதை வலியுறுத்தி எழுச்சியுரையாற்றினார் ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் இரா.சீனிவாசன்.

**தஞ்சையில்** ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புகள் இணைந்து நவம்பர் புரட்சி நாளையொட்டி 2.11.08 அன்று அன்னை சத்யா விளையாட்டரங்கில் மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி நவம்பர் விழாவில் பரிசளித்தனர். நவம்பர் 7 அன்று தஞ்சை கீழவாசலில் கொடியேற்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து அன்று மாலை வணிகர் சங்கப் பேரவை கட்டிட வளாகத்தில் நடைபெற்ற நவம்பர் விழாவில் புரட்சியில் இளைஞர்களது பங்கையும் இன்றைய தேவையையும் குறித்து பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ச.பரமானந்தம், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



தஞ்சாவூரில்...

**திருச்சியில்** ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து தில்லைநகர் காந்திபுரத்தில் செங்கொடியேற்றி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் திறந்த வெளியில் நடைபெற்ற புரட்சிநாள் விழாவில் உரையாற்றிய தோழர்கள், ஓட்டை விழுந்த அமெரிக்கப் பொருளாதாரம் எனும் டைட்டானிக் கப்பல் பொருளாதார நெருக்கடி எனும் ஆழிப் பேரலையில் மூழ்கிக் கொண்டிருப்பதை எள்ளி நகையாடி உரையாற்றினர். இளந்தோழர்களது ஓவியமும், ம.க.இ.க. மையக்கலைக்குழு மற்றும் கிளைத் தோழர்களது கலைநிகழ்ச்சியும் புரட்சிக் கனலை மூட்டின.



திருச்சியில்...

**சென்னையில்** சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து சென்னை குரோம்பேட்டையில் திருமண அரங்கமொன்றில் விழாவை நடத்தின. பெங்களூர் உயர் நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் பாலன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, நவம்பர் புரட்சியின் வழியில் இங்கும் ஓர் புரட்சிக்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கி எழுச்சியுரையாற்றினார். பெ.வி.மு., ம.க.இ.க. தோழர்களது நாடகமும்; பு.மா.இ.மு. மாணவர்களது இசைச்சித்திரமும் புரட்சிகர உணர்வூட்டின.

"கூடிப் பேசி குலாவி, பின் கலைந்து செல்வதன்று; மாறாக, நாம் சாதிக்க விரும்பும் புரட்சிக்காக நாம் என்ன பங்களிக்கப்போகிறோம்?" என்ற கேள்வியெழுப்பி, மாற்றத்தை நம்மிடமிருந்தே தொடங்கியாக வேண்டும் எனச் சுட்டிக் காட்டிச் சிறப்புரையாற்றினார், தோழர் துரை. சண்முகம்.

போலி கம்யூனிஸ்டுகள் நவம்பர் புரட்சி நாளை சாதிச் சடங்கு போல நடத்திவரும் நிலையில், இப்பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சி நாளை வர்க்க உணர்வூட்டும் திருவிழாவாக மாற்றியமைத்த புரட்சிகர அமைப்புகளின் நிகழ்ச்சிகள், போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சுவதாக அமைந்தன.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# பெண்கள் பூசாரியாகத் தடை: தீண்டாமையின் இன்னொரு வகை!

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள நல்லுத்தேவன் பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் பின்னியக்காள். இவரது தந்தை பின்னத் தேவர், அக்கிராமத்தையொட்டியுள்ள பண்ணைக்காடு மலையடிவாரத்தின் கீழிருக்கும் துர்கையம்மன் கோயிலில் பூசாரியாக இருந்து வந்தார். பின்னத் தேவருக்கு ஆண் வாரிசுகள் இல்லாததால், தனது பரம்பரை பூசாரி உரிமையைத் தனது மகளான பின்னியக் காளிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போனார்.



பின்னியக்காள்

இன்று அந்தக் கோயில் பூட்டிக் கிடக்கிறது. அனைத்துச் சாதியைச் சேர்ந்த ஆண்கள் அர்ச்சகர் ஆவதையே விரும்பாத 'இந்து' மதம், ஒரு பெண் பூசாரியாவதை எப்படி ஏற்றுக் கொள்ளும்? இத்தனைக்கும் அந்த துர்கை அம்மன் கோயில் ஆகம விதிகளின் கீழ் வரும் கோயில் இல்லை. எனினும், நல்லுத்தேவன் பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழ்ந்து வரும் தேவர் சாதியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் பின்னியக்காள் பூசாரியாகத் தொடருவதை விரும்பவில்லை. பின்னியக்காளும் தனது உரிமையை விட்டுக் கொடுக்க மறுத்து வருகிறார்.

பின்னியக்காள், தனது தந்தைவழி பரம்பரை உரிமையினை நிலைநாட்டிக் கொள்ள, மதுரை உயர்நீதி மன்றக் கிளையில் வழக்கு தொடுத்தார். உயர்நீதி மன்ற நீதிபதி சந்துரு பின்னியக்காளின் உரிமையை நிலைநாட்டித் தீர்ப்பளித்தார். ஆனால், இந்தத் தீர்ப்பை செப்.14 அன்று, ஒரேயொருநாள் மட்டும்தான் நடைமுறைப்படுத்த முடிந்தது. அதற்குப் பிறகு பின்னியக்காளால் அக்கோயிலுக்கு அருகில்கூடச் செல்ல முடியாமல் போனது. எத்தனை நாளைக்கு அதிகாரிகள் துணையோடு அம்மனுக்குப் பூசை செய்ய முடியும்? இதனிடையே ஆதிக்க சக்திகள் மதுரை உயர்நீதி மன்றக் கிளையின் தீர்ப்புக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றதோடு, கோயிலை இழுத்துப் பூட்டியும் விட்டனர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் போல, இந்தத் தீர்ப்பும் நீதிபதிகளின் கருணையை எதிர்பார்த்து நிற்கிறது.

தாழ்த்தப்பட்ட பெண் பூசாரியாக இருக்கும் மதுரை மாவட்டம் – நரசிங்கம் கிராமத்தில் உள்ள தவமுனியாண்டி கோயில்: ஆகம விதிகளுக்கு எதிரான மரபு.






தேவர் சாதியைச் சேர்ந்த ஆதிக்க சக்திகளால் பூட்டப்பட்டுள்ள துர்கையம்மன் கோயில்.

சில முற்போக்கு தீர்ப்புகளால் மட்டும் சாதிக் கட்டுமானத்திலும் சாதி பழக்க வழக்கங்களிலும் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்துவிட முடியாது என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு எடுத்துக்காட்டு. ஆதிக்க சாதியில் பிறந்திருந்தாலும்கூட, அச்சாதிப் பெண்கள் அனைத்து சமூக உரிமைகளையும் அனுபவித்துவிட முடியாது என்பதற்கும் இச்சம்பவம் இன்னுமொரு சான்று.

தாழ்த்தப்பட்டோர் ஆலயங்களில் நுழையக் கூடாது என்பதும், பெண்கள் பூசாரிகளாகக் கூடாது என்பதும் வேறு வேறானவை கிடையாது. தீண்டாமையைப் புனிதமாகப் பார்க்கும் பார்ப்பன சனாதன தர்மம்தான், "பெண்கள் புனிதமானவர்கள் அல்ல" என்ற அறிவியலுக்குப் புறம்பான ஆணாதிக்கப் பழங்குப்பையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு பெண்களின் வழிபாட்டு உரிமைக்குத் தடை போடுகிறது.

பின்னியக்காள் இந்தப் போராட்டத்தில் தோல்வியடைந்தால், அது அவரது தனிப்பட்ட தோல்வியாக முடிந்து போய்விடாது. இன்றும் பல்வேறு கிராமக் கோயில்களில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்கள் பூசாரியாக இருந்து வருவது ஒழித்துக் கட்டப்படுவதில் போய் முடியும். எனவே, ஆலயங்களில் நிலவும் ஆணாதிக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால்கூட, முதலில் பார்ப்பன சனாதன தர்மத்திற்கு எதிராகப் போராட வேண்டியது அவசியமாகிறது.

படிப்பகம்